தோட்டுக்காரி கதை

பதிப்பாசிரியர்

முனைவர் வ. அலமேலு

தோட்டுக்காரி

பதிப்பாசிரியர்
முனைவர் வ. அலமேலு

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி
சென்னை-600113

BIBLIOGRAPHICAL DATA

Title of the book	:	**Tottukkāri Katai**
Editor	:	**Dr. V. Alamelu**
Published by	:	**International Institute of Tamil Studies,** C.I.T. Campus, Tharamani Madras-600113 .
Price	:	Rs. 28.00
Publication No.	:	201
Language	:	Tamil
Edition	:	First Edition
Date of Publication	:	March, 1995
Number of Pages	:	vi + 142
Paper used	:	16 kg. S.S. Map Litho
Size of the book	:	Demy 1/8 octav
Printing types used	:	10 point
Number of copies	:	1000
Photo-typesetting and Offset Printing by	:	**Pavai Printers Pvt. Ltd.,** 142, Jani Jan Khan Road, Royapettah, Madras-600 014. Phone: 83 24 41

Published with the financial assistance from the Directorate of Tamil Development, Govt. of Tamil Nadu.

அணிந்துரை

ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

நமக்கிடைமை தரும்படியாக வாய்த்த நல் அமுதாகிய தமிழ் தொன்மையது. முன்னைப் பழைமைக்கும் முன்னைப் பழையதாக விளங்குகின்ற அதே வேளையில் பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாக இலங்குகிறது.

இவ்வாறு சீரிளமைத் திறத்துடன் தமிழ் இலங்குவதற்குக் காரணம் காலந்தோறும் பல்வேறு சங்கங்களும், இயக்கங்களும் நிறுவனங்களும் ஆற்றி வருகின்ற பணிகளே.

இவ்வகையில் தற்காலத்தில் தமிழுக்குத் தொண்டுசெய்யும் பல்வேறு அமைப்புகளில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்கு கணிசமானது. நுட்பமான புலமைமிக்க பல்வேறு ஆய்வுகளில் ஈடுபட்டு பல்வேறு நூல்களை வெளியிட்டு இந்நிறுவனம் தமிழ்ப்பணியாற்றி வருகிறது.

குறிப்பாக இந்நிறுவனத்தின், தொன்மை வாய்ந்த ஆயிரக்கணக்கான ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வரும் சுவடியியல் துறையின் செயல்பாடு பாராட்டத்தக்க ஒன்று. இத்துறையின்வழி அச்சில் வெளிவராத அழியும் நிலையிலுள்ள பல சுவடிகள் வெளியிடப் பட்டு வருகின்றன. 1979-ஆம் ஆண்டிலிருந்து இத்துறை சுவடியியல் பட்டய வகுப்பினைத் தொடர்ந்து நடத்தி வருகின்றது. ஆண்டுதோறும் ஐந்து மாணாக்கர்களுக்கு மாதம் 300 ரூபாய் உதவித்தொகையும் வழங்கி, சுவடியியலில் பயிற்சியளித்து வருகின்றது. வெறும் ஏட்டுக்கல்வியாகப் பயிலாமல் செயல் முறையிலும் சிறந்து விளங்கும் இப்பயிற்சியில் பங்குபெறுகின்ற ஒவ்வொரு வரும் ஆண்டிறுதியில் நிறுவனத்திலுள்ள யாதானுமோர் சுவடியினைப் பதிப்பிக்கின்ற ஆற்றலினைப் பெறுகின்றனர். அவர்களுள் பலர் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற்றுள்ளனர். எதிர் காலத்தில் இத்தகு சுவடியியல் அறிவு படைத்தோர் பலர் பல்வேறு பகுதிகளிலும் பரந்து தமிழுக்குத் தொண்டு செய்வார்கள் எனில் அந்தப் பெருமை முழுவதும் இந்நிறுவனத்தையே சாரும். இத்தகு சுவடியியல் பட்டயவகுப்பினை இந்நிறுவனம் ஒன்றே இதுகாறும் நடத்தி வருகின்றது.

மேலும் இந்நிறுவனம் இதுவரை இரு சுவடியியல் குறுங்காலப் பயிலரங்கினை நடத்தியுள்ளது. அவ்வகையில் அண்மையில் நடைபெற்ற பயிலரங்கில் எண்பது மாணவர்கள் கலந்து சுவடியியல் பயிற்சியை முடித்துச் சென்றனர். இன்னும் இதுபோன்ற பல பயிலரங்குகளை இந்நிறுவனம் நடத்தவுள்ளது.

இங்ஙனம் சுவடியியல் துறை தமிழுக்குத் தொண்டாற்றிவரும் இவ்வேளையில் சுவடிகளில் புதைந்துள்ள மாணிக்கங்களை தமி ழன்னையின் முடியில் பதித்து அழகு பார்க்கும் முகமாகப் பல்வேறு சுவடிகள் நூல்வடிவம் பெற்றுள்ளன.

சித்தமருத்துவம் பெருவழக்காகி வரும் இந்நாளில், கணக் கின்றிக் காணப்படும் சித்த மருத்துவச் சுவடிகளில் சிலவற்றையும், அம்மானை, சதகம் போன்ற சிற்றிலக்கியங்களையும், கதைப்பாடல் கள் சிலவற்றையும் பதிப்பிக்க வேண்டுமென்ற வேணவாவோடு தெரிந்தெடுத்த சில நூல்கள் தற்போது அச்சேறுகின்றன.

மக்கள் மனத்தில் இறைப்பற்றை உருவாக்கி, நன்மை, தீமை களை எடுத்தியம்ப எழுந்த **'தோட்டுக்காரி கதை'** என்ற இந்நூலின் கதைப்பாடல் அமைப்புமுறை நாட்டுப்புற இலக்கியத்திற்கு வலிவூட் டும் வகையில் அமைகிறது.

இந்நூல் வாயிலாக ஏற்படும் தமிழ்ச் சிறப்பினை எண்ணி இறும்பூதெய்துகின்ற இவ்வேளையில், நிறுவன மேம்பாட்டிற்கு உறுதுணை புரிகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு கல்வி யமைச்சர் க. பொன்னுசாமி அவர்களுக்கு நன்றிகூற இந்நிறுவனம் கடமைப்பட்டுள்ளது.

தமிழ் வளர்ச்சித் துறையின் நிதி உதவி பெற்று வெளிவரும் ஆறு நூல்களுள் இதுவுமொன்று. எங்கள் நிறுவனத்தின்பால் பேரன்பு காட்டுகின்ற தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத் துறைச் செயலாளர் திரு. சா. பா. இளங்கோவன், இ.ஆ.ப. அவர்களை யும், இச்சுவடி வெளியீட்டுக்கு நிதிவுதவி நல்கிய தமிழ் வளர்ச்சி இயக்ககத்தின் இயக்குநர் முனைவர் சி. செல்வராசு அவர்களையும் இவ்வேளையில் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

நூல்களின் அச்சேற்றும் பணிகளை முனைப்புடன் செய்த முனைவர் டி. மகாலட்சுமி அவர்களையும், தமிழுலகம் பயன் பெறும் வகையில் இந்நூலைச் சிறப்பாகப் பதிப்பித்துத் தந்த முனைவர் வ. அலமேலு அவர்களையும் பாராட்டுகிறேன். குறித்த காலத்தில் சிறந்த முறையில் அச்சிட்டுத் தந்த பாவை பிரிண்டர்ஸ் நிறுவனத்தார்க்கும் நன்றி.

சுவடிகளை வைத்திருப்போர் எங்களது நிறுவன நூலகத்திற்கு அதனை நலகினால் தமிழில் பல அரிய நூல்கள் வெளிவர உறுதுணை புரிந்த பெருமைக்கும் சிறப்புக்கும் உரியவர்களாவர்.

இயக்குநர்

பொருளடக்கம்

அணிந்துரை .... (iii)

பதிப்புரை 1

தோட்டுக்காரி கதை 61

துணைநூற்பட்டியல் 133

பெயர்ச்சொல்லகராதி 136

பதிப்புரை

நூல் பெயர்க்காரணம்

''முதனூல் கருத்தன் அளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும்
இடுகுறி யானுநூல் பெயரே''[1]

என்று நூல் பெயர் பெறும் முறையை விளக்குகின்றது நன்னூல். நூலில் வரப்பெறும் தலைவன், தலைவியர் சிறப்புக் கருதியும் அவர்களின் பெயர்களால் நூல் பெயர் பெறுவதுமுண்டு. இந்த முறையில், தலைவியின் சிறப்பு நோக்கி இந்நூல் இப்பெயர் பெற்றது. தோட்டுக்காரி எனும் பெண் பிறந்து, இறந்து, மறுபிறவி எடுத்து தெய்வமாகிறாள் எனும் நிலையில் கதை முழுவதும் அவளின் சிறப்பையே கூறப்பெறுவதால் 'தோட்டுக்காரி கதை' என்று இந்நூல் பெயர் பெறுகிறது.

நூலின் பெயர்வைப்பு முறையைக் கொண்டே அந்த நூல், முதலா, வழியா, சார்பா என்பதை ஓரளவு ஊகிக்க இயலும். இந்த நிலையில், இந்த நூல் முதல் நூலே என்பது தெளிவாகிறது. இதற்குமுன் இம்முறையில் நூல் ஒன்றும் இல்லாமையும் இதற்குக் காரணமாகிறது.

நூல் தோன்றக் காரணம்

பொதுவாகக் கதைப்பாடலை விழாக்காலங்களில் மக்களின் பொழுது போக்கிற்காகப் பாடுவது இயல்பு. மக்கள் கூடி மகிழ்ந்திருக்குஞ் சமயத்து வில்லுப்பாட்டின் துணைகொண்டு கதைப்பாடலை நிகழ்த்தி மக்கள் மனத்தை ஈர்ப்பது வழக்கு. பெரிதும் பக்தி உணர்வை ஊட்டவே வில்லுப்பாட்டை நிகழ்த்துவர். அச்சமயத்துச் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும் உடன் எடுத்துக் கூறிச் செல்வர்.

இந்த நிலையில் பக்தி உணர்வின் பொருட்டே இக்கதைப்பாடல் உருப்பெற்றுள்ளமை தெரியவருகின்றது. நிமித்தங்கள், கனவுகள், தீச்செயல்கள் எனுமிவை இன்னின்ன நன்மை தீமைகளை விளைவிக்கும் என்பன போன்ற சமுதாயத்திற்கான கருத்துகள் பலவற்றையும் இந்நூல் கொண்டு விளங்குகின்றது. இன்றைய அறிவியலுலகத்தில் இவை தேவையற்றவை என்பது நன்கு விளங்கினும் அன்றைய மக்கள் மனத்தில் இவை குறித்த நம்பிக்கையோடு கூடிய பெருவிருப்பு இருந்து வந்தமையைக் கதைப் பாடல்களே பறைசாற்றுகின்றன.

எனவே, மக்கள் மனதில் இறைப்பற்றை உருவாக்கவும் நன்மை, தீமைகளை எடுத்தியம்பவும் இந்நூல் உருப்பெற்றமை நன்கு புலனாகின்றது.

நூலாசிரியர் வரலாறு

நூலின் பெருமை உணர நூலாசிரியர் வரலாறு இன்றியமையாததாகின்றது. நூலாசிரியர் வரலாற்றை அறிய அக, புறச் சான்றுகள் பெரிதும் துணைபுரிகின்றன. அம்முறையில் தோட்டுக்காரி கதையின் ஆசிரியர் வரலாற்றையும் அறியமுடிகின்றது. தோட்டுக்காரி கதையினுள்ளேயே ஆசிரியர் பற்றிய செய்திகள் பலவிடத்து வருகின்றன.

நூலின் தொடக்கத்தில்,

''செந்தமிழை இப்போது சேர்த்து எழுதிவைத்தோர்
வையகம் புகழும்நல்ல மாடநா டார்குடியில்
வலங்கைக் குலமதிலே வந்த புகழாளர்
நாராயண ரைத்துதித்த இராம சுவாமிநாடார்
அவருடைய புதல்வரென்ற பால்நாடா ரவர்தான்
ஆராய்ந்து அவர்பாடிச் சொன்ன தமிழாமே'' (7)

என்று கூறுவதிலிருந்து, ஆசிரியர் பால்நாடார் எனபதை உணர முடிகின்றது. மேலும், நூலின் இறுதியில்,

''இந்த ஏடு எழுதினவர் — மாடநாடார் குடியிருப்பிலிருக்கும் ராமசுவாமி நாடார் குமாரர் பால்நாடார் என்ற சுப்பிரமணிய நாடார்''

என்று வரும் வரிகளும் இதனையே புலப்படுத்துகின்றன. என்றாலும், சிறு ஐயமும் உடன் எழுகின்றது.

''நாராயண ரைத்துதித்த இராம சுவாமிநாடார்
அவருடைய புதல்வரென்ற பால்நாடா ரவர்தான்
ஆராய்ந்து அவர் பாடிச் சொன்ன தமிழாமே''

இந்த அடிகளில் ''அவர் பாடிச் சொன்ன தமிழாமே'' என்னும் தொடர் படர்க்கை இடத்தைச் சுட்டுவதால் இக்கூற்று ஆசிரியரின் தன்மைக் கூற்று அன்று என்பது புலப்படுகிறது. அன்றி, ஆசிரியரே ஆயின் படர்க்கை முறையில் கூறுவதற்குக் காரணம் என்ன என்று எண்ணிபார்க்க வேண்டியுள்ளது.

''கந்தமடிவில் .... பந்தம் அடிதொடை பாஇனம் கூறுவன்''[3]
''பூமலி அசோகின் ... நன்கு இயம்புவன் எழுத்தே''[4]

என்னும் இடங்களில் ஆசிரியர் தம்மை வெளிப்படுத்திக் கொள்வ தாகவே அமைகின்றன. அவர்களுக்குப் பின் தோன்றலாகிய இந்த ஆசிரியர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாததன் கார ணத்தை உணர முடியவில்லை. வில்லுப்பாட்டில் பாடும்போது தமது பெருமையைத் தாமே கூறுவது சிறப்பாகாது என்று உயர்வு நோக்கியும் இந்த முறையைக் கையாண்டிருக்க இடமுள்ளது. இதனால் இது வில்லுப் பாட்டின் மரபாகக் கொள்ள இயலுகின்றது.

நூலின் காலம்

நூலின் கருத்தை முழுமையாக அறிய உதவுவது கால ஆராய்ச்சி; இலக்கிய வரலாற்றை முறைப்படுத்திக் காணவும் இன்றியமையாத தாகிறது; மொழி வரலாற்றாய்விற்கும் பெரிதும் துணைபுரிகிறது. எனவே, நூலின் காலத்தை அறிவது பெரிதும் வேண்டப்படுவது.

நூலின் காலத்தை நிர்ணயிக்க அக, புறச் சான்றுகள் பயன்படு கின்றன.

1. நூலை எழுதிய ஆசிரியரே தெளிவாகக் குறிப்பிட்டிருப்பதன் வழி,
2. பிற நூல்களில் இந்நூல் வரிகள் மேற்கோளாகக் காட்டப் பட்டிருப்பதன் வழி,
3. நூலாசிரியர் பற்றிய குறிப்புகள் பல தெரிய வருவதன் வழி

காலத்தை நிர்ணயிக்க முடிகின்றது.

தோட்டுக்காரி கதை ஆசிரியர் அந்நூலினுள்ளேயே குறிப்பிட் டிருக்கும் வரிகளின்வழி காலத்தை நிர்ணயிக்க முடிகின்றது.

''இந்த ஏடு எழுதி முடிந்தது. கக௯எயஎ மாண்டு
ஆடி மாசம் — செவ்வாய்க்கிழமை — மாலை
மணி(4)க்கு இந்த ஏடு எழுதினவர் — மாடநாடார்
குடியிருப்பிலிருக்கும் ராமசுவாமி நாடார் குமாரர்
பால் நாடார் என்ற சுப்பிரமணிய நாடார்''

எனும் இவ்வரிகள் அகச்சான்றாகச் சுவடியின் இறுதியில் அமைந்து நூலின் காலத்தை உணர்த்துகின்றன. இவ்வரிகள் ஏடு எழுதிய காலத்தை மட்டுமே குறிக்கின்றது என்றாலும் நூல் ஆசிரியரே இந்த ஏட்டினை எழுதி முடித்திருக்கிறார் என்பதனை,

''செந்தமிழை இப்போது சேர்த்து எழுதி வைத்தோர்
வையகம் புகழும்நல்ல மாடநா டார்குடியில்
வலங்கைக் குலமதிலே வந்த புகழாளர்
நாராயண ரைத்துதித்த இராம சுவாமிநாடார்
அவருடைய புதல்வரென்ற பால்நாடா ரவர்தான்
ஆராய்ந்து அவர்பாடிச் சொன்ன தமிழாமே''

இவ்வரிகளின் வழி உய்த்துணர முடிகின்றது. நூலின் ஆசிரியர் பால்நாடார் என்பதனை இவ்வரிகள் புலப்படுத்துகின்றன. நூலை எழுதிய ஆசிரியரே இந்தச் சுவடியை எழுதி முடித்திருக்கிறார் என்பது இவற்றின்வழி புலனாகின்றது. எனவே, சுவடி எழுதிய காலமே நூலின் காலமாக அமைகிறது. எனவே, நூலின் காலம் 1917-ஆம் ஆண்டு என்பது தெரிய வருகின்றது.

சுவடி பற்றிய செய்திகள்

தோட்டுக்காரி கதை எனும் இச்சுவடி நாட்டுப்புற இலக்கிய வகையைச் சார்ந்தது. கதைப்பாடல் அமைப்பினை உடையது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி நூலகத்தினின்று பெறப்பட்டது இச்சுவடி. இச்சுவடி டாக்டர் ஏ.என்.பெருமாள் அவர்களால் நிறு வனத்திற்காக வழங்கப்பட்டது. இதன் நூலக எண். 316.

அச்சு நூல்

'தோட்டுக்காரி அம்மன் கதை' என்னும் பெயரில், பல சுவடிகளைக் கொண்டு ஆறுமுகப் பெருமாள் நாடார் என்பவரால் பதிப்பிக்கப் பெற்ற அச்சு நூல் 1947-இல் வெளியாகியுள்ளது. இதன் ஆசிரியர் பெயர் தெரியவில்லை. நடை முழுமையும் வேறானது. கதைப்போக்கி லும் முழுமையாக வேறுபடுகிறது. சான்றாக,

தீக்குளித்து இறந்த தோட்டுக்காரியும் குமரப்பராசனும் மறுபிறவி எடுப்பதாகக் குறிப்பிடப்பெற்றாலும் அவர்கள் தெய்வமாகி மக்களிடம் பலி உணவை ஏற்கும் நிலை இந்நூலுள் காணப்படவில்லை. குமரப்ப ராசனுடைய நண்பனாகிய குஞ்சிராம சிறுக்கன் என்பவன் தன் அரச னும் தோட்டுக்காரியும் இறந்ததைக் கேட்டுத் தன் உடைவாளின்மேல் பாய்ந்து விழுந்து உயிர் துறக்கிறான். மூவருமே மறுபிறவி எடுத்து குமாரபெருமாள், தோடழி அம்மை, வெடிக்காரன் என்ற பெயர்களில் முறையே தெய்வீக வடிவு பெறுகிறார்கள்.

தெய்வீக நிலை பெற்ற இருவரும் குரவைபாடுதல், பிற இடங்களில் பூசை விரும்புதல், தொல்வினை நீங்குதல், பூசை போட்டோர்க்கு நன்மை செய்தல் போன்ற பல செய்திகள் மிக சுருங்கிய நிலையில் கூறிச் செல்லப் பெற்றுள்ளது.

எனவே, பால்நாடார் எழுதியதாகக் கிடைத்துள்ளதும் இங்குப் பதிப்பாய்விற்கு எடுத்துக்கொள்ளப் பெற்றதுமாகிய தோட்டுக்காரி கதைப்பாடல் அச்சாகாத வேறு சுவடியே எனக் கொள்ள முடிகிறது.

சுவடியின் புற அமைப்பு

இச்சுவடி மொத்தம் 41 ஏடுகளைக் கொண்டுள்ளது. சுவடியின் பாதுகாப்பிற்கு முன், பின் இருபுறங்களிலும் சட்டம் அமைப்பது வழக்கு. அந்நிலையில் இச்சுவடியும் சட்டங்களுடன் காணப்படுகின்றது. பின்புறம் வெற்று ஏடுகள் இரண்டு காணப்படுகின்றன. ஓலைக்கேற்ப ஏட்டின் நீள, அகலம் அமையும். இச்சுவடி மிக நீளமானது. இதன் அளவு 43.5, 2.5 செ.மீ. ஆகும்.

சுவடியின் அக அமைப்பு

நூல் ஆசிரியர் இறைவணக்கப் பாடலோடு நூலைத் தொடங்குவது வழக்கு. அதற்கேற்ப இந்நூலும் அமையப்பெற்றுள்ளது.

சுவடியின் இருபுறத்தும் எழுதப்பட்டுள்ளது. சுவடியின் ஒவ்வொரு பக்கமும் இரட்டைப் பகுப்பு நிலையில் அமைந்து ஐந்திலிருந்து ஏழு வரையிலான வரிகளைக் கொண்டுள்ளது. ஒருசிலவிடத்து மும்மைப் பகுப்பும் காணப்படுகிறது.

தொடக்கம் முதல் இறுதி வரையில் நீண்ட செய்யுள் வடிவினது. எண்களைத் தவிர பாடல் எண்கள் ஏதுமில்லை. சிலவிடத்துப் பாடல்கள் முடியுஞ்சமயத்து ஆசிரியரால் ஒருவித குறி அமைக்கப்பட்டுள்ளது. உட்தலைப்புகள் ஏதுமில்லை. மிகப் பிற்காலத்தைய சுவடி ஆதலால் எழுத்துகள் தெளிவான முறையில் அமைந்துள்ளன.

இறுதி ஏடு வழக்கத்திற்கேற்பவே இன்ன ஏடு இன்னாரால் எழுதப் பெற்றது என்று கூறி முடிக்கப்பெற்றுள்ளது.

நடைச்சிறப்பு

பலவகையான பாட்டு நடை இதனுள் காணப்படுகின்றது. விருத்தம், கலிவிருத்தம் முதலான யாப்புகளும் பலவகைச் சந்தப் பாக்களும் காணப்பெறுகின்றன.

வட்டாரச் சொற்கள்

பேச்சுச் சொற்கள், வட்டார வடமொழிச் சொற்கள் என்று பல வகையான சொற்கலப்பு நிலை இச்சுவடியினுள் காணப்படுகின்றது.

''**தயிரியமாய்ப்** பார்க்கவேணும் படையிது காணாதென்று''(-140)
பூசைகொள்ள எங்களுக்கு **ரொம்பவரம்** தாருமென்றார்''(-161)

என்று பேச்சுமொழிச் சொற்கள் கையாளப்பட்டுள்ளமைக்கு இவ் வரிகள் சான்றாக அமைகின்றன.

''**கோரிவைக்கும்** தண்ணீரைக் குறையாக்கப் பிள்ளையில்லை''(-22)
''**துலங்குதடி துலங்குதடி** குறிமுகம்தான் தாயே'' (-40)
''அன்னந் தண்ணீ ரும்**பொசி யாமலே**'' (-46)

என்பன போன்ற சொற்கள் வட்டார வழக்குச் சொற்களாக அமைகின்றன.

''பத்திபெற **சாஸ்திரங்** களுமே வைத்து'' (-10)
''சித்திரத்து டன்நடந்து **விஸ்தார** மலங்குறத்தி'' (-33)
''**அபகீர்த்தி** யாய்நடத்தி அவனுடைய மகள்தனையும்'' (-103)

என்று பல வடமொழிச் சொற்கலப்பும் இக்கதைப் பாடலுள் காணப்படுகின்றது.

எழுத்து வேறுபாடு

படி எடுப்போரின் கல்விக் குறைவினாலும், வட்டார மொழித் தாக்கத்தினாலும் எழுத்துப் பிழைகள் பல நிகழ்ந்துவிடுவது இயல்பு. இக்கதைப் பாடலினுள்ளும் அவ்வாறு பல பிழைகள் காணப்படுகின்றன. பெரிதும் 'ர'கர 'ற'கர மாற்றமும், 'ழ'கர 'ள'கர மாற்றமும் அமைகின்றன.

மூலச்சுவடியா?

சுவடி மூலமா? வழியா என ஆராய வேண்டுவது பதிப்பிப்போரின் கடமை. மூலபாட ஆய்வினைப் பதிப்பாளர்கள் அறிந்திருத்தல் இன்றியமையாததாகும். பல சுவடிகள் கிடைத்தவிடத்து மூலத்தை நிர்ணயித்தல் எளிது. இச்சுவடிக்கோ பல சுவடிப்படிகள் இல்லை. கிடைத்தது ஒரே சுவடி, அதைக் கொண்டு ஆராயும்போது, இது மூலச்சுவடி என்பது தெரியவருகின்றது. காரணம், நூல் ஆசிரியரே சுவடியையும் எழுதியமை, அவரது கூற்றின் வழி அறியமுடிகிறது.

''இந்த ஏடு எழுதினவர் — மாடநாடார்
குடியிருப்பிலிருக்கும் ராமசுவாமி
நாடார் குமாரர் பால்நாடார் என்ற
சுப்பிரமணிய நாடார்''

என்பது அவரின் கூற்று.

ஆசிரியரின் உண்மைத் தொடர் எதுவோ அதுவே மூலபாடம் என்பதாகும். அந்நிலையில் இது மூலச்சுவடியாக அமைகின்றது.

பதிப்பில் மேற்கொண்டவை

சுவடியில் காணப்பெற்ற எழுத்து மாற்றங்கள் சரியான முறையில் மாற்றிப் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

பாடல் அடிகள் ஒரே தொடராக நீண்டு அமைந்துள்ளதால், கற்போருக்குச் சலிப்பு ஏற்படாமலிருக்கும் பொருட்டும் செய்தி அறிந்தோர் அந்தச் செய்திக்கான அடிகளை உடன் அறிந்துகொள்ளு வதற்கு எளிதாக இருக்கும் பொருட்டும் தலைப்பு கொடுத்துச் சிறுசிறு பத்தியாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒரு செய்தி நிறைவுறும் சமயத்துப் பாடல் முடிவாகக் கொண்டு அவ்வடிகளுக்கும் பொருத்தமான தலைப் புத் தரப்பட்டுள்ளது. மேலும், பாடல் அடிகளை நூலாய்வில் எடுத் தாள்வதற்கான எளிமை கருதி ஒவ்வொரு தலைப்பிற்கும் எண்ணிக்கை கொடுக்கப்பட்டுப் பாடல் எண்ணாகக் குறிக்கப்பட்டுள்ளது.

இந்நூல் பாடல் அடிகளையும் பிற நூல் மேற்கோள்களையும் நூல் ஆய்வில் எடுத்தாள வேண்டியிருப்பதால், இரண்டிற்கும் அடிக்குறிப் பெண் கொடுத்துச் சென்றால் குழப்பம் தரும் எனக் கருதிக் கதைப் பாடல் அடிகளுக்கு அங்கங்குப் பாடல் எண்களைக் கொடுக்கப்பெற் றுள்ளது. பிறநூல் மேற்கோள்களுக்கு மட்டும் அடிக்குறிப்பு எண் கொடுத்து எழுதப்பெற்றுள்ளது.

படிப்போர் நலங்கருதியும் புதியதொரு தமிழ்நூல் பெற்றுத் தமிழுல கம் சிறக்கக் கருதியும் இப்பதிப்பு மேற்கொள்ளப்பட்டு, முடிந்த வரையில் சுத்தப் பதிப்புமுறை கையாளப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அடிக்குறிப்புகள்

1. நன்னூல், 49.
2. நன்னூல், 10.
3. யாப்பருங்கலக் காரிகை, அவையடக்கம்.
4. நன்னூல், எழுத்தியல்.

நூலாய்வு

கதைப்பாடல்

கதைப்பாடல் எனும் இதற்கு ஆங்கிலத்தில் 'ballad' எனப்பெறு கிறது. இது இலத்தீன் சொல்லான 'Ballare' — லிருந்து உருப் பெற்றது.

தமிழில் கதைப்பாடலை அம்மானை என்றே வழங்கினர்.

தொடக்கக் காலத்து 'அம்மானை' என்ற சொல்லே கதைப்பாடலைக் குறிக்க பெருவழக்காக இருந்தது என்பதை உணர்த்துகிறது.

சான்றாக, மூவரம்மானை, மதுரை வீரன் அம்மானை, இராமப் பய்யன் அம்மானை போன்ற பெயர்கள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் இச்சொல், கையாளப்பெற்றுள்ளமையை,

> ''வீங்குநீர் வேலி உலகாண்டு விண்ணவர்கோன்
> ஓங்கரணங் காத்த உரவோன் யார்அம்மானை?
> ... .
> சோழன் புகார்நகரம் பாடலோ ரம்மானை

எனும் வரிகள் உணர்த்தி நிற்கின்றன.

மணிவாசகரின் திருஅம்மானை, கலம்பக இலக்கியங்களுள் உறுப் பாகப் பயின்று வரும் அம்மானை, பிள்ளைத்தமிழ் இலக்கியக் கூறான அம்மானைப் பருவம் முதலானவை இந்த நிலைக்குச் சான்று பகர் கின்றன.

இவைகளல்லாமல் கதைப்பாடல்களின் பாட்டு நடை அமைப்பிற் கேற்பவும் பெயர் அமைதல் உண்டு. மாலை, கும்மி, லாவணி, ஊசல் என்ற பல வடிவங்களில் அமையப்பெற்றதற்கேற்ப அந்தந்தப் பெயர் கொண்டும் கதைப்பாடலை அழைப்பர்.

வில்லுப்பாட்டு

வில்லுப்பாட்டு: விளக்கம்

வில்லின் துணைகொண்டு பாடப்பெறும் பாட்டு வில்லுப்பாட்டு. துணைக் கருவிகள் பல இருப்பினும் வில்லே முதன்மைபெறுவதால் வில்லுப்பாட்டாகியது.

> '''வில்லுப்பாட்டு' என்பதனை வில், வில்பாட்டு, வில்லு, வில்லடி, வில்லடி பாட்டு, வில்லடிச்சான் பாட்டு என்றெல்லாம் பலவாறாக அழைப்பது உண்டு. இசை அமைதியும் இசைப்பவரும், இசைக்கும் கருவியும் பொறுத்துப் பாடல்கள் பெயர்பெறும்''

என்று கூறுகிறார் மு. சண்முகம்பிளளை.

இந்த வில்லுப்பாட்டிற்குத் துணைக்கருவிகளாக உடுக்கை, குடம், தாளம், கட்டை எனும் இவைகள் அமைகின்றன.

வில்லுப்பாட்டின் தோற்றம்

வில்லுப்பாட்டின் தோற்றம் குறித்த காலத்தை வரையறுத்துக் கூற இயலாத நிலை என்றாலும், வில்லுப்பாட்டுத் தோன்றியதற்கான காரணங்கள் பல உள.

மனிதன் முதலில் வேட்டையாடுதலையே தொழிலாகக் கொண்டான். அச்சமயத்து அவனுக்கு உதவிய முதல் கருவி வில். அதில் கட்டப் பெற்றிருந்த மணி ஓசையில் மயங்கி அதனடிப்படையில் வில்லுப் பாட்டிசை உருப்பெற்றிருக்கும்.

> ''தென்பாண்டி நாட்டுப் பகுதியில் அன்றுள்ள வேடர்கள் காட்டில் தங்கள் வேட்டை முடிந்ததும் மரத்தடி நிழலில் கூடியிருந்து தோளிலிருந்த வில்லை மடியில் சாய்த்து அம்பை அந்த நாணில் தட்டித் தட்டிப் பாட்டைத் துவக்கியிருக்கிறார்கள். பாவத்தின் கரையில் புண்ணியம், ஆடலின் முடிவில் பாடல்; கொல்லும் விளையாட்டின் முடிவில் வில்லுப்பாட்டு — இதுதான் வில்லுப்பாட்டுக்குச் சொன்னால் பொருந்தக்கூடிய சுவையான வரலாறாக இருக்க முடியும்''

எனும் சுப்பு ஆறுமுகத்தின் கூற்றும் இதனையே விளக்கி நிற்கின்றது.

மேலும், வில்லுப்பாட்டைப் பாடிவரும் கலைஞர்களே அதன் தோற்றங் குறித்துப் பாடும் பாடலாக,

சொல்லுகிறது. 'அறன் எனப்பட்டது இல்வாழ்க்கையே' என்று அறுதியிட்டு உறுதிமொழியும் வள்ளுவம், ''இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு'' என்று இல்வாழ்க்கையின் முழுமைப் பயனை மொழிகிறது. இங்கே 'விருந்தோம்பி வேளாண்மை செய்தல்' என்று குறிக்கப்படுவதுதான் தொல்காப்பியத்தில் அறம்புரி சுற்றமொடு சிறந்தது பயிற்றல் என்று குறிக்கப்படுகிறது. இரண்டின் அடிப்படையும் குடும்ப உறுப்பினர்களின் எல்லையைத்தாண்டி உலகத்து மற்றவர்களுக்காகவும் வாழ வேண்டும் என்னும் மனிதநேய மணிநெறிதான். ஆகவே தொல்காப்பியம் மனிதநேயத்தின் அடிப்படையிலேயே இல் வாழ்வுக்கு நோக்கம் கற்பித்துள்ளது என்பது தெளிவு.

அடிப்படை இலக்கணம்

இல்வாழ்க்கையின் அடிப்படையே மனிதநேயமாக அமைந்து விடுவதால் அந்த வாழ்க்கையின் நடைமுறை ஒவ்வொன்றும் மனிதநேயத்தின் அடிப்படையில் மலர்ந்த கமழும் மணிநெறி யாகவே உயர்கிறது.

நெடிய மொழிதலும் கடிய ஊர்தலும்
செல்வம் அன்று; தன் செய்வினைப் பயனே;
சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கட் செல்வம் செல்வம் என்பதுவே (நற். 210)

என வரும் நற்றிணைப் பாடல் பகுதி மனிதனின் வாழ்க்கை நோக்குக்கே அரியதோர் அடிப்படை இலக்கணத்தை வகுத்துத் தருகிறது. இதுவும் மனிதநேய அடிப்படையிலேயே அமை கிறது என்பது கவனிக்கத்தக்கது.

உலகம் பல காட்சிகளை வழங்குகிறது. ஆர்ப்பாட்டக் காட்சி அவைகளிலே முக்கியமானது. ஓசையாலும் ஒளியாலும் அவைகளை உண்டாக்குகிற ஆடம்பரப் பொருள்களாலும் நிகழ்த்தப்படுகிற ஆர்ப்பாட்டம் பெரும்பாலோரின் சிந்தனை யையே சிதறடித்து விடுகிறது. சாதாரண பொதுமக்கள் மட்டுமல்லாமல் படித்த பெருமக்களே கூட இந்த ஆர்ப் பாட்டத்தில் மயங்கித் திசை திரும்பிப் போகிறார்கள். புலவர் உலகத்தில் இருந்து வரும் ஆர்ப்பாட்டத் திசைமாற்றல்

வருபொருள் உரைத்தல்

இந்தக் கதையை இன்று வில்லில் கூறப்போவதாக ஆசிரியர் முன்கூட்டியே குறிப்பிடுவது, வருபொருள் உரைத்தலாகும். இதனை நுதலிப்பாடுதல் என்று கூறுவர். காப்பிலேயே இந்தச் செய்தியை கூறுவதுமுண்டு. தனித்துக் கூறுவதுமுண்டு. இது பாடலாக அமையப் பெறும்.

குருவடி பாடுதல்

தன் ஆசானை வணங்கிப் பாடுவது குருவடி பாடுதல். தனக்கு ஆசிரியராக இருந்தவரை நினைத்து வணங்கி நலம் உண்டாக உதவு மாறு கோருவது இந்தப் பாடலின் அமைப்பு.

அவையடக்கம்

கதை கூறுவோர் தன்னை எளியோனாகவும், கேட்போரைச் சான்றோராகவும் கருதியவிடத்துக் கூறப்பெறுவது அவையடக்கம். பிழை நேருமிடத்துப் பொருத்துக்கொள்ள வேண்டுவதாக இப்பகுதி அமையப் பெறும்.

நாட்டு வளம்

கதையின் தொடக்கத்தில் பொதுவாக நாட்டு வளமே கூறப்பெற்றிருப்பது காப்பியப் பாங்கு. இந்நிலை வில்லுப்பாட்டில் அமையப் பெறுவது மரபு.

கதைக்கூறு

நாட்டு வளத்தினை அடுத்து கதை முழுமையாகக் கூறப்பெறும். கதையில் வரப்பெறும் தலைவன் தலைவியரின் சிறப்பு இதில் புகழ்ந்துரைக்கப்படும்.

வாழிபாடுதல்

இறுதிப் பகுதியாக வாழ்த்துப் பகுதி அமையும். கதை கேட்போர், கதை மாந்தர், கதை கூறுவோர் என அனைவரும் நலம்பெற வாழ்த்துவதாக மங்களமாக முடிவுபெறும் நிலையே வாழிபாடுதல் என்பது.

இந்த அமைப்பு நிலைகளை நோக்க, இவை அனைத்தும் கதைப் பாடல் அமைப்போடு பெரிதும் ஒத்துச் செல்வதை உணரமுடிகின்றது. கதைப்பாடலை வில்லில் பாடவும் வில்லுப்பாட்டிற்குக் கதைப்பாடல் துணைபுரியவும் இந்த முறையில் அமைக்கப்பெற்றதாகக் கருதவும் இடமுள்ளது.

ஒப்பாய்வு

இதுகாறும் கூறப்பெற்றுள்ள செய்திகளைத் 'தோட்டுக்காரி கதை' யோடு ஒப்புநோக்கக் கதைப்பாடலின் இலக்கணத்தை உணர்த்துமுக மாகப் பின்வரப்பெறும் உத்திகள் துணைபுரிகின்றன.

அமைப்பியல் உத்தி

1. மரபை மீறி அமைவது

வழிவழியாகப் பின்பற்றி வரப்பெறுவது மரபு. இந்த நிலையினின்று மாறப்பெறுவது மரபு மீறிய நிலை. பெண் கேட்டுக் கொடாத நிலையில் வேறு பெண் பேசி முடித்தல் மரபு. அதை விடுத்து அவளைச் சிறைப்பிடித்து வருதல் மரபன்று.

பெண் கொடுக்க மறுப்பதால் உருவாகும் போர் குறித்த செய்திகள் சிலவற்றை அரசர் வரலாறுகளின்வழி அறிய முடிகின்றது. என்றாலும் போர் செய்து வெற்றி பெறுமுன் சிறைப்பிடித்து வருதல் என்பது மரபில் இல்லாத ஒன்றாகும். எனவே, இது மரபு மீறிய செயலா கின்றது. தோட்டுக்காரியை மணக்க இயலாத நிலையில் அவளைக் குமரப்பராசன் சிறை எடுத்து வருவது மரபினை மீறிய செயலாக அமைகின்றது. பின்வரும் தோட்டுக்காரி கதைப் பாடலடிகள் இதனை நன்கு உணர்த்துகின்றன.

''மையாடும் கண்ணழகி வீறுதோட்டுக் காரிதன்னை
கையால்நாமள் தொட்டக்கால் கற்பழியு மென்றுசொல்லி

....

ஆனைதன்னைப் பாசைசொல்லி அவளுடைய முன்னேவிட்டார்

....

பட்டத்துக் கருத்தானை பேர்பெரிய மதயானைதான்
தொட்டெடுத்த தேயானை தோட்டுக்காரி தன்தனையும்

....

மதயானை மேலேவைத்து மத்தகத்தி லேஇருத்தி
எடுத்துமத்த கத்தில்வைத்து இலங்கும்பட்டால் சூடிக்கொண்டு
தொடுத்துப்படை சூழ்ந்துவர தோட்டுக்காரி அம்மனைத்தான்

....

வெற்றிக் குரவையிட்டு வெள்ளிவெண்சாமரை வீசிக்கொண்டு

... .

மடியாமல் பெண்ணும்கொண்டு வந்தாரே கோட்டையிலே'' (137)

2. மரணம் ஏற்படல்

சிறைபிடித்துச் சென்றதை அறிந்த கோனாண்டி கோபங்கொண்டு போர் செய்ய படைகளுடன் செல்கின்றான். இருதரப்புப் படைகளும் மோதிக் கொண்டன. அதன் விளைவாக பல அழிவுகள் ஏற்பட்டன. அதைக் காணச் சகியாத தோட்டுக்காரி 'தன்னால் ஏற்பட்டதே இவ்வழிவு' என வருத்தங் கொண்டு, உயிர் வாழ விரும்பாதவளாய், வேள்வித் தீக்குள் புகுந்து உயிர் விடுகிறாள் என்பதனை,

''புகையோடே தீயெரிய பொற்கொடியாள் தோட்டுக்காரி
மகதேவா துணையெனவே வலமாகச் சுற்றிவந்தாள்
புகழ்தருவாய் பகவதியே என்றவளைத் தான்தொழுது
எக்கால முஞ்சிவனே எனக்குவரம் தாருமென்று
முக்காலும் சுற்றிவந்து மொலுமொலென்று குரவையிட்டு
தாங்காமல் தோட்டுக்காரி சாடிவிட்டாள் தீயதிலே'' (155)

அவளை மணக்க விரும்பிச் சிறைப்பிடித்து வந்த குமரப்பராசன் அவள் தனக்குக் கிட்டாது தீப்புகுந்து உயிர் துறந்ததனால் மனவேதனை யடைந்து தானும் அத்தீக்குள் புகுந்து உயிர்துறக்கின்றான் என்பதனை,

''தரையில் விழுந்தெழுந்து தன்வாயி லடித்தழுது
சோலையிளங் கிளிமொழியாள் தோட்டுக்காரி அம்மனைத்தான்
மாலையிட்டுப் பார்த்ததேனில்லை வாய்மொழிநான்
கேட்டேனில்லை
....
ஏசுவாரே நாம்இருந்தால் இறந்தால் பலன்தான்என்று
வீசும்புகழ் மலைமார்பன் வேந்தன்கும ரப்பராசன்
வேடிக்கையாய் ஓடிவந்து வெள்ளியப் பாறைதனிலே
சாடிவிட்டார் வேள்வியிலே தாரும்வரம் நமக்கெனவே''
(156-157)

இவ்வடிகளும் உணர்த்துகின்றன.

3. தெய்வத்தன்மை பெறுதல்

வேள்வித் தீக்குளித்து இறந்த இருவரும் இறைவன் அருளால் தெய்வத் தன்மையைப் பெறுகிறார்கள். அவர்கள் தெய்வ வழிபாட்டுக் குரியவர்களாக விளங்குவதை அவர்களுக்கு வழங்கப்பெற்றுள்ள மறுவடிவப் பெயர்களின்வழி நன்குணர முடிகின்றது. பின்வரும் பாடலடிகளின்வழி இதனை அறிய முடிகின்றது.

''உயிரதுதான் இறந்தபின்பு பின்னும்சிவன் மனதிரங்கி
பின்னும்அந்த யீஸ்வரனார் மறுபிறவி தான்கொடுத்தார்
வேள்வியிலே இருபேரும் வேறு சொரூபமாக
வாழும்வேள்வி யானதிலே மறுசொரூப மாகவேதான்
....
பலசொரூபக் காரனென்றும் பாவைபல சொரூபியென்றும்
சிலையுருவாய் வேள்வியிலே தெய்வஉரு வாகவேதான்
....
கன்னிகரு நீலியென்றும் கருங்கிடாய்க்காரனென்றும்
வலுவான வேள்வியிலே வாய்த்தமுட்டப் பதிதனிலே
பலசொரூபக் காரியம்மன் பெருமலைபோ லேபிறந்தாள்''(158)

இறையருளால் மாற்றுருவம் பெற்று இருவரும் முறையே பல சொரூபக்காரன் என்றும் பலசொரூபி என்றும் பெயர் பெறுகிறார்கள். தீரன், கருங்கிடாய்க்காரன், வீரன், வீரமுத்துக்கருப்பழகன், வீரசூரப் பெருமாள் என்று பலசொரூபக்காரனும், கருநீலி, கரும்புருவைக்காரி, புருவைக்காரி, திரைக்காரி, வேசக்காரி, இளமறிக்காரி, கோலக்காரி, நாரணத்தி, காரணத்தி, சாமகன்னி, கருநீலி என்று பலசொரூபியும் பல வடிவங்களை எடுத்து வடிவப் பெயர்களைத் தாங்கியமையால் பொதுப் பெயர்களான பலசொரூபக்காரன், பலசொரூபக்காரி எனும் பெயர் களை முறையே பெற்றமை தெரியவருகின்றது.

4. மரணத்திற்குக் காரணமானவரைப் பழிவாங்குதல்

இவ்வுத்திநிலை பல கதைப்பாடல்களில் இருக்க இக்கதைப்பாடலில் இல்லை. தாமாகவே இறந்துபட்டுத் தெய்வநிலை அடைந்தமையை இக்கதைப் பாடல் உணர்த்துகின்றது. ஆனால், பழையனூர் நீலியின் கதை போன்ற சில கதைப்பாடல்கள் பழிவாங்கியமையை உணர்த்தி நிற்கின்றன.

இவ்வகையில் அமைப்பியல் உத்தியின் பகுப்பில் பழிவாங்கு நிலையை விடுத்து ஏனையவை அமையப்பெற்று இக்கதைப்பாடல் அமைகிறது.

நிகழ்த்துமுறை உத்தி

மக்களின் பொழுதுபோக்கிற்காகவும், மனமகிழ்விற்காகவும் கல்வி புகட்டுவதற்காகவும் கதைப்பாடல்கள் வில்லின் துணைகொண்டு

நிகழ்த்தப் பெறுகின்றன என்பதைவிட வில்லுப்பாட்டிற்குப் பெரிதும் துணைபுரிவது கதைப்பாடல்கள் என்பதே பொருந்தும்.

பொதுவாகக் கதைப்பாடல்கள் வில்லுப்பாட்டு, இலாவணி, கும்மி, தாலாட்டு, ஊசல், என்ற பல வடிவங்களில் அமைவது உண்டு. தோட்டுக்காரியம்மன் கதை வில்லுப்பாட்டின் அடிப்படையில் அமைந் துள்ளது. இதன் நிகழ்த்துமுறை உத்திகளின் வரிசையில் அடுத்து நூலாய்வு தொடங்குகிறது.

நூல் தொடக்கம்

எந்தச் செயலையும் தொடங்கும்போது, இறைவழிபாடு நிகழ்த்தும் தமிழ் மரபின்படி நூல் **இறைவணக்கத்தோடு** தொடங்குகிறது. அடுத்து, நூலின் பெயர், நூல் எழுதக் காரணம் ஆகியவற்றை **நுதலிப் புகுதல்** எனும் உத்தியால் தொகுத்துக் கூறும் பகுதி அமைகிறது. கதை தொடங் கும் முன் தக்கண நாட்டு முட்டப்பகுதி **நகரத்தின் சிறப்புக்** கூறப்படு கிறது. இவை முறையே, மூன்று தலைப்புகளில் ஆய்வு செய்யப்படு கின்றன.

இறைவணக்கம்

தொடங்கும் எச்செயலும் இனிதே முடிவுபெற இறைவனை வணங்கு தல் உலக வழக்கு. தமிழர் மரபு. வணிகர் முதல் நூலாசிரியர் வரை நற்செயல்கள் புரியும் பலரும் செயலின் தொடக்கத்தில் இறைவணக்கம் செய்தல் இயல்பு. அந்த இறைவணக்கம் இருவகையில் அமைகிறது.

1. ஏற்புடைய கடவுள் வணக்கம்
2. வழிபடு கடவுள் வணக்கம்

தொழிலுக்கேற்ற கடவுளைத் துதித்தல் ஏற்புடைய கடவுள் வணக்கம். தங்கள் குலதெய்வங்களைத் துதித்தல் வழிப்டு கடவுளர் வணக்கம்.

இவற்றுள் பெரிதும் விநாயகர் வணக்கமே பலராலும் மேற் கொள்ளப் பெறுகின்றது. குலதெய்வம், தொழில் தெய்வம் என்ற வேறுபாடு இல்லாது எல்லோராலும் முதற்கண் வழிபடும் தெய்வமாக விநாயகர் விளங்குகின்றார்.

''விநாயகர் என்று சொல்லுக்கு நாயகர்
இல்லாதவர் என்பது பொருள்.
வி — விசேஷமான நாயகர். எல்லோருக்கும்
மேலான நாயகர் எனவும் பொருள் கூறுவர்.

விக்னேசுவரர் என்ற நாமமும் இவருக்குண்டு.
விக்கினங்கள் வராமல் தடுப்பவர் என்பது
இதன் பொருள்''

என்று விநாயகர் பெருமையை, கே. ஆறுமுக நாவலர் குறிப்பிடு கின்றார்.

இந்தப் பெருமைகளை அறிந்திருத்தலால் பலரும் அவரை முதலில் வழிபட எண்ணுகின்றனர். வைணவராய் இருக்குமிடத்தும் தாம் செய்யும் செயலுக்கு முன் விநாயக வணக்கம் செய்தல் இயல்பு. பல வைணவ நூல்கள் தொடக்கத்தில் விநாயக காப்புப் பாடல் கொண்டு சான்றாக அமைகின்றன.

நூல்களாயின் விநாயக காப்புப் பாடல் அமைப்பதையும் செயல்க ளாயின் விநாயக உருவத்தினை உருவாக்கி வணங்குதலையும் தமிழர் மரபாகக் கொண்டனர்.

''துரும்புக் குழிக்குள்ளே சாஸ்திரமும் செய்து
நெல்லளந்து பிள்ளை யாருமே வைத்து'' (63)

மஞ்சள், சந்தனம் எனுமிவற்றால் சிறு பிள்ளையாரை அச்சமயத்து உருவாக்கி அதற்கு வழிபாடுகள் செய்தபின்பே செயல்களைத் தொடங்குவது தமிழர் இயல்பு எனும் இதைத்தான் தோட்டுக்காரி கதைப்பாடல் அடி உணர்த்தி நிற்கின்றது.

மேலும், கணபதி வணக்கப் பாடலாக,

''சீரணி செல்வ மெங்கும் தெச்சணாப் பூமி தன்னில்
பாரணி யான முட்டப் பதிதனில் தோட்டுக் காரி
தாரணி தனில்பி றந்த கதைதனை வில்லில் கூற
காரணி யுமையாள் யீன்ற கணபதி காப்ப தாமே'' (2)

எனும் பாடலும் அமைகின்றது.

கணபதி வணக்கத்தில் தொடங்கி தொழில்படு தெய்வம், குல தெய்வம் என்று அவரவர்கள் விருப்பத்திற்கேற்ப இறைவணக்கப் பாடல்கள் அமைவதும் உண்டு. ஒருசிலர் எல்லாத் தெய்வங்களையும் வணங்கிச் செல்லுதலையும் முறையாகக் கொண்டுள்ளனர். அம்முறை யில் இந்தத் தோட்டுக்காரி கதைப்பாடலின் ஆசிரியர் கலைமகள், முருகர், காளி, திருமால், இலக்குமி என்று எல்லாத் தெய்வங்களுக்கு மான இறைவணக்கப் பாடலைப் பாடித்தொழுது நூலுக்குள் செல் கின்றார்.

''வேணும்தமிழ் எந்தனுக்கு தாயேசரசு வதியே
வெள்ளிமலை தனில்வாழும் வள்ளிமண வாளா!
ஆணவஞ்சேர் தோட்டுக்காரி அம்மன்கதை கூற
ஆனபத்திர காளியுன தருள்தரவும் வேணும்'' (4)

ஒரே பாடலில் மூன்று கடவுளர் துதிக்கப்பெறுகின்றனர். இதே போன்று திருமால் இலக்குமி தோத்திரமாக ஒரு பாடலும், ஆசிரியர், பிற சான்றோர் வணக்கமாகச் சில அடிகளும் அமைகின்றன.

கதை நிகழுமிடத்தில் கூடியுள்ள மக்கள் இறைச்சார்பால் பலதிறப் பட்டவர்கள் என்பதை உணரும் ஆசிரியர் அனைத்து மக்களின் உள்ளங் களை ஈர்க்கும் முறையாகக் கடவுள் வணக்கத்தை அமைப்பது சிறப் புடையதாகிறது.

சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்றான பிள்ளைத்தமிழ் இலக்கியம் காப்புப் பருவம் என்ற ஒரு பருவத்தை அமைத்திருப்பதன் முறை இங்கே மேற்கொள்ளப் பெற்றுள்ளதாகக் கருத இடமுண்டு.

நுதலிப் புகுதல்

நுதல் என்பதன் பொருள் சொல் என்பது. இந்தப் பொருளைச் சொல்லுவேன் என்று கூறி நூலைச் சொல்லத் தொடங்குவது நுதலிப் புகுதல் என்னும் உத்தியாகும். நூல், ஆய்வு என்ற எந்தப் படைப்பு களிலும் இம்முறை இருக்கப்பெறும். ஆய்வுநெறிக்கண் கொண்டு நோக்கும்பொழுது மிகவும் இன்றியமையாததாக இந்த உத்தி விளங்கு கின்றது. 32 உத்திகளைக் கூறும் நன்னூலும்,

''நுதலிப் புகுதல் ஒத்துமுறை வைப்பே
தொகுத்துச் சுட்டல் வகுத்துக் காட்டல்
....
உய்த்துணர வைப்பென உத்திஎண் ணான்கே''

என நுதலிப் புகுதலையே முதலில் வைத்துக் கூறுகின்றது.

நூலின் தொடக்கத்தில் பெரிதும் வேண்டப்படும் இவ்வுத்தி கதை கூறுவோருக்கும் இன்றியமையாததாகின்றது. மக்கள் மனத்தைக் கவர் வதற்கு இவ்வுத்தி பெரிதும் துணைபுரிகின்றது. தொடர்ந்து பல நாள் கதை கூறுவோரிடத்தும் இவ்வுத்தியைப் பயன்படுத்தும் பண்பு அதிக மிருக்கிறது. முதல்நாள் கதை கேட்டோர் அக்கதையை மறந்திருந்த விடத்தும், முதல்நாள் கதை கேட்க இயலாதோர் நலன் கருதியவிடத்தும்

இவ்வுத்தி கதை கூறுவோருக்குப் பெரிதும் துணைபுரிகின்றது. இந்தக் கதைப் பகுதிகளை நான் கூறவிருக்கிறேன் என்று முன்கூட்டியே கூறு மிடத்து மக்களை எளிதில் கவர இடமுண்டு.

முக்கியமாக வில்லுப்பாட்டுக்கதை கூறுவோர் இம்முறையைப் பெரிதும் பயனபடுத்திக் கொள்வர். முதலில் கூறப்பெறும் இதனை அவையடக்கமாகக் கொள்ளுதலுமுண்டு.

மகாபாரதக் கதையை வகுத்துரைத்த சாத்திரத்தில்
பூபாலர் ஐவர் பெருந்துரி யோதிரனும்
வென்று புவியாண்டு — விஷ்ணுபதம் சேர்ந்தகதை
ஒன்றும் அறியாதான் உரைத்தேன் புவிமீதில்'' (27)

ஆசிரியர் அவையடக்கமாக இதனைக் கூறியது. இந்தக் கதையைக் கூறப்போகிறேன் என்று சுருக்கமாகக் குறிப்பிடுகின்றார் இந்த முறை யைத் 'தோட்டுக்காரி அம்மன்' கதையைக் கூறும் ; ஆசிரியரும் பின்பற்றுகிறார்.

''சித்திரமாய்த் தோட்டுக்காரி தன்னுடைய கதையைச்
செந்தமிழோர் முன்னெழுதி வைத்திருந்தா ரில்லை'' (5)

''வில்லின்கதை தங்கள்தங்கள் விஸ்தாரத்தி னாலே
வேளைக்குவண் ணம்படிப்போர் பெரியோர்கள்
ஆனாலும்'' (6)

''தெட்சணாப் பூமி யான தென்கன்னிக் குமரி நாட்டில்
மிக்கதோர் விதியினாலே வெள்ளியர்ப் பாறை தன்னில்
மயில்குழல் தோட்டுக்காரி மடிந்தபின் வந்த வாறு
செப்பமாய்ப் புவியோர் கேட்கச் செப்பியே யுரைக்கின் றேனே''
(9)

என்பன நூலின் தொடக்கப் பாடல்கள். இவை நுதலிப்புகுதல் என்னும் உத்தியால் தோன்றியவை.

''மைக்குழல் தோட்டுக்காரி மடிந்தபின் பிறந்தவாறும்
செப்பமாய் புவியோர் கேட்கச் செப்புவேன் புலனுள் ளோர்க்கே''
(9)

கதையின் முடிவிலே தோட்டுக்காரி தெய்வநிலையை அடைந்து மக்களால் வணங்கப்படுகிறாள். இந்தச் செய்தியையும் தொடக்கத்தி லேயே 'மடிந்தபின் பிறந்தவாறும் கூறுவேன்' எனும் தொடரால் உணர்த்துகிறார். இதுவும் முதலிலேயே நுதலிப்புகுதல் என்னும் உத்தி யில் அமைகிறது.

நாட்டுச் சிறப்பு

காப்பியங்களில் பெரும்பாலும், கதைக்குள் செல்வதற்குமுன், நூலின் தொடக்கப் பகுதியாக நாட்டு வருணனைகள் அமைவது இயல்பு. ஆனால் தோட்டுக்காரியம்மன் கதைப்பாடல், மாறுபட்டு நூலின் தொடக்கத்தில் அமைவதோடு நூலின் இடையிடையேயும் பலவிடத்து நாட்டுச் சிறப்பினைக் கூறுமுகமாக வருணனைகள் அமைக்கப் பட்டுள்ளன.

''நாடான நாடதிலே நல்லபுகழ் நாடதிலே
வாடாத பகவதியாள் வாழும்நல்ல நாடதிலே
நீடுபுக ழாகவேதான் நின்னிலமெல் லாம்புகழும்
மாடுதன்னி லேறுகின்ற மகதேவர் திருவருளால்
கடலாம் திரைமுகமாம் கனகமணி மண்டபமாம்
அடவான கொடிமரமாம் அதியமணி பொற்தேரும்
தென்குமரி நாடதிலே தெச்சணா பூமியிலே
சீரிலங்கும் நன்னாடு சிறப்புடையோன் தன்னாடு'' (10)

என்பது நாட்டு வருணனையாகத் தொடக்கத்திலே அமைகிறது.

மோருக்கு விலையாக முத்தை அளந்து கொடுப்பதும், பணத்தை வைத்துப் பாண்டியாடி மகிழ்வதும் முட்டப்பதி நாட்டு மக்களின் வாழ்க்கையாகக் காட்டப் பெறுவது நாட்டின் செல்வச் செழிப்பைச் சுட்டுவதாகும்.

''மோருக்கு முத்தளக்கும் முட்டப் பதிதனிலே
போருக்குள் நெறிநடக்கும் பாரமுட்டப் பதிதனிலே
மணம்சேரும் ராசாக்கள் வாழும்முட்டப் பதிதனிலே
பணமெடுத்துப் பாண்டியாடி பகுதாக வேயிருப்பார்'' (11)

என்பன பாடலடிகள்.

''வல்லமுட்டப் பதிதனிலே வாழ்ந்திருந்தார் ராசாக்கள்
கொல்லமட்டும் குமரிமட்டும் கோழிமுக டேறிமேயும்
கயமதிலே கிடக்கும்முத்து கரையில்வந்து கரைசேரும்
திசைமகிழக் கோட்டையிட்டுச் சிறந்தமுட்டப் பதிதனிலே'' (11)

அரசர்கள் வாழும் முட்டப்பதி; அது கொல்லம் முதல் குமரிவரை பரவியது; அங்கு கோழி முகடு ஏறி மேயும் தன்மையுடையது; அங்கு குளங்களினும் முத்துக்கள் நிறைந்திருக்கும்; அவை கரைகளிலும் ஒதுக்கப்பட்டிருக்கும் என்னும் சிறப்புகள் நாட்டின் பரப்பையும் செல்வத்தையும் அரசரின் வாழ்வையும் குறிப்பிடுவனவாக இவ்வரிகள் அமைகின்றன.

அந்நாட்டில், அழகிய மணிக்கோட்டை, நாற்படைகள், கோவில், குளங்கள், தோப்புத்துரவுகள், ஓடைகள், கோபுரங்கள், நெடுந் தெருக்கள், கொடிமரம், கொலுமேடை ஆகியவை நிறைந்து வளமும் சிறப்பும் தரும் நாடாக முட்டப்பதி நாடு சுட்டப்படுகிறது.

''கோட்டைகளாம் வாவிகளாம் குளிக்கும்நீ. ராவிகளாம்
வாட்டமில்லாக் கோபுரமாம் வாய்த்தநல்ல நெடுந்தெருவாம்
கொடிமரமாம் நெடுந்தெருவாம் கொலுகுமணி மேடைகளாம்
அடியார்கள் வந்துதொழுது அரண்மனையும் சாவடியாம்
மாடத்தெரு வீதிகளாம் வாய்த்தநல்ல நெடுந்தெருவாம்
ஆர்க்கமுள்ள தேவியர்கள் அருமையுட னேயிருக்க
தேவிமார் கொலுவிருக்கும் செம்பொன்மணி மேடைகளாம்''(14)

என்பன போன்ற பல அடிகள் சான்றுகளாக அமைகின்றன.

அரசருடைய அரண்மனைகள் பொற்கதவுகளை உடையவை. கரியும் பரியும் காலாளும் நிறைந்து விளங்குபவை என்பன போன்ற அரண் மனைச் சிறப்புகள் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவனவாக அமைகின்றன (பா. 15)

அரசன் மணிமுடி தரித்திருந்தான், ஆறில் ஒரு கடமை பெற்றான். பலநாட்டுப் படைகளைத் துணையாகக் கொண்டிருந்தான், பீரங்கி முதலிய படைகள் இருந்தன. மூன்று நேரமும் அரசன் பூசை நடத்தி னான், ஆண்டுக்கு இருமுறை திருவிழா நடத்தினான் என்பன போன்ற செய்திகள் அரசனின், அரசாட்சியின் சிறப்பினை எடுத்துக் காட்டுவன வாகும் (பா. 17).

நூல்

இறைவணக்கமும் நாட்டுச்சிறப்பும் கூறித் தொடங்கும் இந்நூல், பலவகையான **பிற இலக்கியச் செய்தி**களைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. குறத்தி என்னும் ஒரு பாத்திரம் இடையே புகுத்தப் பட்டு, கதைப் போக்கை முன்கூட்டி உரைப்பதாக அமைகிறது. **பட்டு, பந்து, அணிகலன்கள்** போன்ற சிறப்புப் பொருள்கள் தொகுத்துக் காட்டப்பெறுகின்றன.

விதி, ஞானம், சடங்கு, கோயில் திருப்பணிகள்நிமித்தம், கனவு, தீவினை என்ற பலவகையான **நம்பிக்கைகள்** இடையிடையே புகுத்தப் பெற்று மக்களுக்கு அறிவுறுத்தப் பெறுகின்றன. இந்த நான்கு வகை யான நூல் தரும் செய்திகள் இத்தலைப்பின்கீழ் ஆய்வு செய்யப்படு கின்றன.

இலக்கியச் செய்திகள்

நூலை இயற்றும் ஆசிரியர் தம் கருத்தோடு ஒப்ப உள்ள பல நூற்கருத்துக்களை எடுத்தியம்பிச் செல்வது இயல்பு.

1. முன்னோர் சொல்லைப் பொன்னேபோல் போற்றுதல்
2. பிறநூல்களில் தனக்குள்ள புலமையை வெளிப்படுத்துதல்
3. தன்நூலைக் கற்போர் பலநூற் செய்திகளையும் அறிந்து கொள்ள இடமளித்தல்
4. மேற்கோள் காட்டாமல் மேற்கோள் இல்லாக் குற்றத்திற்கு ஆளாகிவிடுதல்

என்று பல இயல்புகள் உள்ளன.

முன்னோர் சொல்லைப் பொன்னேபோல் காத்தல், மேற்கோள் இல்லா குற்றம் எனும் இவற்றை விளக்குமுகமாக,

''முன்னோர்மொழி பொருளே அன்றி அவர்மொழியும்
பொன்னேபோற் போற்றுவம் என்பதற்கு — முன்னோரின்
வேறுநூல் செய்துமெனும் மேற்கோள்இல் என்பதற்குங்
கூறுபழஞ் சூத்திரத்தின் கோள்''

என்னும் நன்னூல் நூற்பா விளக்குகின்றது.

இந்த எடுத்தாளும் பண்பினை நன்கறிந்த 'தோட்டுக்காரி கதை'ப் பாடல் ஆசிரியர், தனது நூலின்வழி பல இலக்கியச் செய்திகளைக் குறிப்பிட்டுச் செல்கின்றார்.

இவ்வாறு, கூறிச் செல்வதன் வழி, நூல் உருப்பெற்ற காலத்து வழக்கிலிருந்த இலக்கியக் கருத்துக்களை நன்கு அறியமுடிகின்றது.

''சீதையொரு பெண்பிறந்து தென்னிலங்கை அழிந்ததுகாண்
மாதேவி யாலேயல்லோ மடிந்துவிட்டான் கோவலவன்
வண்ணமகள் கண்ணகியால் மதுரைநகர் அழிந்ததுகாண்
எண்ணரிய நூற்றுவரும் இறந்தாரே துரோபதையால்
அகலிகையால் இந்திரனும் ஆயிரம் கண்ணானான்
சகலதலைப் பிரமன்ஒருதலை இழந்தார் பார்வதியால்
பண்டுஒரு நீலியாலே பழகைநல்லூர் அழிந்ததுகாண்'' (136)

சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற பல காப்பிய அறிவு ஆசிரியருக்கு இருந்தமையை இவ்வடிகள் புலப்படுத்துகின்றன. சுருங்கிய அடிகளால் உணர்த்தப் பெறும் இச்செய்திகளை மக்களும் முன்பே அறிந்திருந்தார்கள் என்பதனையும் அறிய முடிகிறது.

குறி சொல்லுதல்

களவு ஒழுக்கத்தில் தலைவியின் உடல் வேறுபாட்டை அறிந்த செவிலித்தாய் அவ்வேறுபாட்டின் காரணத்தை அறியக் கட்டுவைத்தும் கழங்கு வைத்தும் அறிவது உண்டு. இவையே குறி பார்க்கும் முறைகள் ஆகும். இக்குறி பார்க்கும் மகள் கட்டுவிச்சி எனப்பெற்றாள் (தொல். கள. 25, நச்சர் உரை). இவளை 'அகவன் மகள்' என்றது குறுந்தொகை (குறுந். 23). குறவன், குறத்தி என்பவர் மலையும் மலையைச் சார்ந்த இடமுமாகிய குறிஞ்சிநில மக்களின் பெயர்களாகும். அவர்களின் பல்வேறு தொழில்களுள் ஒன்று குறிபார்த்தலாகும். அக்குறத்தியைத் தலைமகளாகக் கொண்டு படைக்கப்பெறும் சிற்றிலக்கியம் குறத்திப்பாட்டு எனப்பெறுகிறது.

சிலப்பதிகாரக் குன்றக்குரவையில் வேலன் வெறியாடும் செய்தி, திருவாய் மொழி, சிறியதிருமடல், திருக்கோவையார் ஆகியவற்றில் காணப்பெறும் குறி பார்க்கும் செய்திகள் போன்றவை குறி பார்க்கும் இலக்கியப் பொருண்மையில் வந்தவை. இவ்வாறு குறி பார்த்துக் கூறும் செய்தியை, உலாவில் சென்ற தலைவனைக் கண்டு வாடும் தலைவிக்கு உரியதாக அமைத்துப் பாடும் குறவஞ்சி என்னும் தனி இலக்கியம் பிற்காலத்துத் தோன்றியது. குறம் என்றும் குறத்திப் பாட்டு என்றும் குறவஞ்சி என்றும் அந்நூல்கள் பெயர்பெற்றன.

> ''இறப்பு நிகழ்வு எதிர்வு என்னும் முக்காலமும்
> திறப்பட உரைப்பது குறத்திப் பாட்டே''

எனக் குறத்திப் பாட்டுக்கு இலக்கணம் வகுத்தது பன்னிருபாட்டியல்.

இக்குறி சொல்லும் முறை இலக்கிய இன்பம் கருதி நாட்டுப்புற இலக்கியங்களில், சிறப்பாகக் கதைப்பாடல்களில் ஏற்றவாறு புகுத்தப் பெற்றது. தோட்டுக்காரி கதைப்பாடலில் குறத்தி குறி சொல்லும் ஒரு பகுதி நயம்படப் புகுத்தப்பெற்றுள்ளது. இப்பகுதி,

1. குறத்தியின் வரவு கூறுதல்
2. குறவர் குலப்பெருமை கூறுதல்
3. குறத்தி தன் பெருமை
4. குறிசொல்லத் தொடங்குதல்
5. தேவியின் குறையாகிய இறந்த காலம் கூறுதல்
6. நிகழ்காலம் கூறுதல்

7. எதிர்காலம் கூறுதல்

8. பிள்ளையின் திறம் கூறுதல்

என்ற முறைகளில் அமைகிறது.

குறத்தியின் பெருமைகள் கூறுமாற்றால் மக்களுக்கு அறிவுரை கூறும் முறையைக் கையாள்கிறார் ஆசிரியர். மேலும், தலைவியின் எதிர் காலமும், பிறக்கும் பிள்ளையின் தன்மையும் கூறுமாற்றால் கதைப் போக்கில் முன்னறிவிப்பைத் தருவதாக அமைக்கிறார். சில சான்றுகள்.

குறத்தி வரவு

''ஏறுவாடி மலைதனிலே இருந்தமலங் குறத்தியவள்
மலைதனிலே வெகுநாளாய் மழைமாரி பொழியாமல்'' (32)

உணவும் கிடைக்காமையால், குறிகள் சொல்லிப் பிழைப்போம் என்று மலைநாட்டை விட்டுப் புறப்படுகிறாள். ஏறுவாடி ஊரும் சந்தையும் கடந்து தென்குமரி நாட்டை அடைகிறாள். அந்நாட்டில் காரணி, கருங்குளம், காரிவாரி, பால்குளம், ஒத்தப்பனைக் கோட்டை முதலான ஊர்களைக் கடந்து முட்டப்பதியை அடைகிறாள். இவ்வரவு கூறுமாற்றால் மலைநாட்டில் ஏற்பட்ட வறட்சி நிலையும் குறத்தி கடந்துவந்த ஊர்களும் புலப்படுத்தப் பெறுகின்றன.

குறவர்குலப் பெருமை

குறி கேட்பதற்காகக் கோனாண்டிராசன் அரண்மனைக்குக் குறத்தியை அழைத்துச் செல்லுகிறார்கள். அவளோடு உரையாடும் போது மலைக் குறவர் குலப்பெருமையைக் கூறுகிறாள்.

''நாட்டுக் குறவர்தம்வீட்டில் தண்ணீர் குடியோம்
நன்றாய் மலைக்கன்னி மாருக்குப் பூசையிடுவோம்
வீட்டுவழி சென்றுபிச்சை இரக்கவே மாட்டோம்
மெய்யல்லாமல் குறிபொய் யாயுரைற் பதுமல்லை'' (36)

என்பன மலைக்குறவர் பற்றிய சிறப்புகளாகும்.

குறத்தியின் தன்மை

''மறத்தியைப்போல் உடையுடுத்து வலதுகையில் கொப்பிடுக்கி
கொப்பிடுக்கிக் குழையிடுக்கிக் குறப்பெட்டியும் தலையில்
வைத்து'' (32)

வருகிறாள். குறவர் பழக்கவழக்கங்கள் பொய்யாமை, இரவாமை, தெய்வ வழிபாடு போன்ற உயர்ந்த கருத்துகளைப் புகட்டுமாற்றால் அமைகின்றன. கூறப்பெறும் வடிவ முறை குறத்தியைக் கண்முன் நிறுத்துவதாக அமைகிறது. மக்களிடையே இப்பகுதி மிகுந்த சுவையூட்டுவதாக அமைகிறது.

குறி சொல்லத் தொடங்குதல்

''முழுதுங்கை வரையும்பார்த்து முகக்குறிதனையும் நோக்கிக்
கழுத்தினில் பலனும்பார்த்துக் கைப்பிடித்து'' (37)

குறி சொல்லத் தொடங்குகிறாள். திருவிளக்கேற்றி வெற்றிலையும் அடைக்காயும் வைத்துத் தொடங்குகிறாள். இவ்வடிகள் பூசையறைச் சூழலைக் கண்முன் நிறுத்துவனவாகும். இந்திரன், வேலவன், மலைக் கன்னிகள், வள்ளி மணவாளன், மாடன்தம்பிரான், முத்தழகன், கருப்பழகன், நல்லதம்பிமாடன் போன்ற தெய்வங்களைத் துதிக்கிறாள். இப்பாடலடிகள் பலவகைத் தெய்வங்களை வணங்கும் கூட்டத்திலுள்ள மக்கள் அனைவரையும் ஈர்ப்பதாக அமைகின்றன.

முக்கால நிகழ்ச்சிகளைக் கூறுதல்

''தவமான ஒருகுழந்தை தானுமில்லாக் குறைதான்'' (42)

என்று தேவியின் இறந்தகாலக் குறையைச் சுட்டுகிறாள். கருவூலத்துப் பொன்னையெல்லாம் தருமமாக அளித்து வருகிறாய் என்பது நிகழ் காலக் கூற்று.

''மூத்தநயி னார்தனக்குத் திருக்கோயில் முடித்து
முழுப்பூசை யும் நடத்தித் திருநாளும் செய்தால்'' (43)

குழந்தையொன்று ஈன்றெடுப்பாய் என்பது எதிர்காலக்குறி. மக்களை நம்பவைப்பதாக அமையும் இவ்வடிகள் பாட்டு நிகழ்த்து முறையால் மிகவும் கவர்ச்சியாக இருக்கும்.

பிள்ளையின் தன்மை

பிறக்கும் ''மகளாலே முட்டப்பதி அழியுமடி தாயே
இருபேரும் வேள்வியிலே இறந்துபிறப் பார்கள்''
(44)

பிறக்கும் குழந்தை பற்றிய இக்கூற்று கதையை முழுவதும் கேட்கத் தூண்டுவதாக அமைகிறது.

குறிசொல்லும் இக்காட்சி கதைப்பாடலின் சிறந்த சுவையூட்டும் கட்டமாக அமைகிறது.

பட்டு, பந்து அணிவகைகள்

மக்களுக்குப் பல அரிய கருத்துகளை உணர்த்துவதையே பெரிதும் நோக்கமாகக் கொண்டது கதைப்பாடல். உள்ள செய்திகளை அறியாத விடத்தும். புதிய செய்திகளை உணராதவிடத்தும் அதை எடுத்தியம்பு வதை நோக்கமாகக் கொண்டது கதைப்பாடல்.

மக்களால் தெரிந்துகொள்ள இயலாத பல பொருள்களை அடுக்கிக் கூறித் தெரிந்துகொள்ள வைப்பதை இயல்பாகக் கொள்வது கதைப் பாடல்.

> ''ஊர்கள், ஆட்கள், நாடுகள், மாட்டு வகைகள்,
> வித்து வகைகள் முதலியவற்றை அடுக்கிச் சொல்வது
> கதைப்பாடலின் மரபு''

என்னும் சு. சண்முகசுந்தரம் அவர்களின் கூற்று இவண் நோக்கத் தக்கது.

'தோட்டுக்காரி கதை'ப்பாடல் வழியும் பல அரிய பெயர்களை எடுத்தியம்பியுள்ளமை தெரியவருகின்றது. பட்டு, பந்து, அணிகள் என்று இவற்றின் பல பெயர்கள் அடுக்கிச் சொல்லப்படுகின்றன.

> ''கொண்டபட்டுப் போதுமா குவலயத்தில் வந்ததாயே
> ....
> இந்திரலோ கத்திலுள்ள மந்திரவீர வாளிபட்டு
> அரியக்கரை நாட்டிலுள்ள ஆனைக்கண் பட்டுச்சேலை
> ....
> இலங்கும் பெரியபட்டு சலங்கைப் பூவாளிப்பட்டு
> முட்டைநிற நூல்நூத்து மூணுமுழம் நெய்தபட்டு
> ....
> அடியேன் அறிந்ததில ஆறிலொன்று பேரும் சொன்னேன்''
> (118)

என்று பட்டின் பெயர்கள் யாவும் எடுத்தாளப் பெறுகின்றன.

> ''முத்துப்பந்து நீலப்பந்து முன்னடம் சிறந்தபந்து
> மூணுநிற மானபந்து பூணிநிற முட்டப்பந்து
> பூணிநிற மானபந்து பொன்னாலே முடித்தபந்து
> பொன்னுநல்ல வர்ணப்பந்து பொங்காரச் சிங்காரப்பந்து

....
சின்னப்பந்து சிறுபந்து தெய்வஉலகில் உள்ளபந்து
சீரான தோட்டுக்காரிக்கு நேரிழைப்பூ வாளிபந்து'' (86)

என்று பந்தின் பெயர்களை ஆசிரியர் வரிசைப்படுத்துகின்றார்.

மேலும், அணிகலன்களின் பெயர்கள் பலவற்றையும் ஆசிரியர் சுட்டிச் சொல்கிறார்.

''கிங்கிணியும் நூ புரமும் பூட்டி கிங்கிணியும்
பூட்டி யலங்கரித்துத் தோட்டுக்காரி யம்மனுக்கு
....
அணிந்து சதங்கைதண்டை ஆபரணம் கிங்கிணியும்
அழகாக வேஅணிந்து நன்றாய் அழகாகவே'' (75)

என்பன பாடலடிகள்.

இவற்றைப்போன்ற பல இடங்களில் அணிகலன் பெயர்களைச் சுட்டிச் செல்கின்றார் ஆசிரியர். இவற்றின்வழி ஆண், பெண் இரு பாலாரும் அணிந்து மகிழக்கூடிய அணிகலன்களின் பெயர்களை அறிய முடிகின்றது.

இவ்வாறு பொருள்கள் பலவற்றையோ, பொருளின் பெயர்கள் பலவற்றையோ வரிசைப்படுத்தி உரைப்பது கதைப்பாடலின் நிகழ்த்து முறையாகக் காணப்பெறுகிறது.

நம்பிக்கை

மக்களுக்கு அறிவுறுத்தும் பொருட்டு நம்பிக்கைகளைக் கதைப் பாடலுள் கலந்து கூறுவது ஆசிரியரின் விருப்பு. அந்நிலையில் இவ் வுத்திகளை ஆசிரியர் கையாண்டுள்ளார்.

''ஒரு சமுதாயத்தின் நம்பிக்கைகளைக்கொண்டு அச்சமுதாயத்தின் அறிவுத்திறனை அளவிட இயலும். சிந்தனைத்திறன் மிக்க சமு தாயத்தில் நம்பிக்கைகள் குறைவாகவும் சிந்தனைத்திறன் குறைந்த சமுதாயத்தில் மூடநம்பிக்கைகள் மிகுதியாகவும் காணப்படும். இதனை நமது நகர், கிராமப்புற மக்களின் வாழ்வியல் கொண்டு உணரலாம்.''

என்கிறார் க. காந்தி. அந்நிலையில் நாட்டுப்புற இலக்கியமான இக் கதைப் பாடலுள் அமையப்பெற்றுள்ள மூடநம்பிக்கைகளை இவ்வுத்தி கள் உணர்த்தி நிற்கின்றன. மக்களைத் தம்வயப்படுத்த எண்ணிய ஆசிரியர் இவ்வுத்திகளைப் புகுத்துவது மரபு. அம்மரபு நிலை இந்தக்

கதைப்பாடலுள்ளும் இருப்பதைப் பின்வரும் தலைப்புகள் புலப்படுத்து கின்றன.

விதி

மக்கள் எந்தச் செயலைச் செய்ய முற்பட்டாலும் வெற்றியென்றும் நன்மையென்றும் தங்களுக்குச் சாதகமாகனதையே அடைய முற்படு கின்றார்கள். தாம் நினைத்தது நினைத்தபடி நடக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். அந்த விருப்பத்திற்கு மாறுபட்டு நடக்குமிடத்து அது 'விதிப்பயன்' என்று கூறிவிடுகின்றனர். இதனைத்தான் வள்ளுவர் 'ஊழ்' என்று குறிப்பிடுகின்றார். ஊழ் நன்மை, தீமை இரண்டையும் உருவாக்கவல்லது. ஊழின் வலிமையை வள்ளுவர்,

''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்''[35]

என்கிறார்.

இந்த ஊழ் எவ்வாறு உருப்பெருகிறது? யாருடைய ஆணைப்படி செயல்படுகிறது? இவற்றை எண்ணிய மக்கள், இறைவன் கட்டளை யாக்கிவிட முயல்கின்றனர். எனவே, விதியை 'எல்லாம் அவன் செயல்' என்று கூறிவிடத் துணிகின்றனர்.

இதனால் அவர்கள், மேற்கொண்டு செயலுக்கான முயற்சி எடுத் தலையும் கைவிடுகின்றனர். தம் தவற்றையும் திருத்திக்கொள்ள முய லாது இருந்துவிடுகின்றனர்.

மேலும், குழந்தை பிறந்தஉடன் பிரம்மன், அவரவர் வாழ்க்கைநிலை இன்னின்ன முறையில் என்று எழுதிவிடுவது வழக்கம் என்றும், அதனை என்ன முயற்சித்தாலும் மாற்றுவது இயலாது என்றும் மக்கள் நம்பிக்கை கொண்டனர். இந்த நம்பிக்கையாலேயே, மந்திரப்பூமாலை,

''ஏசுவார் நகைத்திடுவார் என்தரத்துப் பெண்களென்னை
இத்தனைக்கும் பிரமன்படைத் தானோ (இத்தனைக்கும்)
....
இத்தனைக்கும் நானொருத்தி இளமயில் மலடிருக்க
என்தலையில் பிரமன்படைத் தானோ (என்தலையில்)'' (19)

என்று பாடுகின்றாள்.

பெரும்பாலும் இலக்கியங்களுள் இவ் 'ஊழ்' பற்றியச் செய்தி வருவது பெருவழக்கமாக அமைகிறது. இறைவனின் சிறப்பைக் கூறுவது அல்லது இறைவனிடத்து மதிப்பினை உருவாக்குவது இதற்குக் காரணமாக அமைய இடமுள்ளது.

கல்வி புகட்டுதலையே குறிக்கோளாகக் கொள்ளும் வில்லுப்பாடல் களில் இதுபோன்ற நிகழ்ச்சிகள் பல இடம்பெறுவது இயல்பு. 'தோட்டுக்காரி அம்மன் கதைப்பாடலின்' வழியும் இக்கூற்றை அறிய முடிகின்றது.

''அண்டபர மேஸ்வரனே அடியாள்தலை தனிலே
அன்றெழுதி வைத்தபடி தானோ (அன்றெழுதி)
வைத்தபடி தானோஎன்னை வையகத்தி லுள்ளபேர்கள்
மலடிஎன் றென்னைநகைப் பாரே (மலடி)'' (19)

குழந்தை இல்லாது வருந்திய பெண், தனக்குக் குழந்தை இல்லாது செய்தவர் இறைவன். அவர் அன்றே தலையில் எழுதிவிட்டார். அதன்படிதான் இன்று உலகத்திலுள்ளோர் இவள் 'மலடி' என்று சொல்லுதலைக் கேட்கலுறலாயிற்று என்று விதிப்பயனைக் கூறி அரற்று கிறாள் தேவி. மேலும்,

ஊழை விலக்கும் பொருட்டு வேறோர் வழியை ஆராய்ந்தாலும் அங்கும் தானே முன்வந்து நிற்கும் எனும் வள்ளுவர் கருத்திற்கேற்ப,

அழுது புரண்டாலும், ஊழே தலைதூக்கும் என்று வருந்துகிறாள். அதனை,

''மதியே சடைத்து முகம்கோடி வாடி இருந்தும் அழுதாலும்
விதிதான் நமக்கு பெருமொழிய வீணில் அழுதால்
வருவதுண்டோ
கதியே நமக்குப் பிரமனன்று கட்டாய்த் தலையில் எழுதினானோ
கதிதான் நமக்கு எனச்சடைத்துக் கிலேசத் துடனே இருந்தாளே''
(31)

எனனும அடிகள் புலப்படுத்துகின்றன.

தானம்

''தேவர்க்கும் நல்லோர்க்கும் ஈந்து புண்ணியம்
அடைதல் தானம்''

என்கிறது அபிதானசிந்தாமணி.

''வறியார்க் கொன்று ஈவதே ஈகை''

என்கிறது குறள். இதன்வழி, இருப்போர் இல்லாதோருக்கு வழங்குவது தானம் என்பது புலப்படுகிறது. இம்மை மறுமை பயன் நோக்காது அளிக்கவல்லது தானம். என்பதைத்தான்,

"…. …. மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று"

என்கிறது குறள். திரும்பப்பெறாத தன்மையது தானம். இது தமிழர் பண்பாட்டுச் சிறப்புக் கூறான விருந்தோம்பலின் வழி உருப்பெற் றிருக்கக் கூடும்.

எதையும் எப்பொழுதும் எவரிடத்தும் வழங்கப்பெறும் தன்மையே உண்மையான தானத்தின் சிறப்பாகும். இதைத்தான் நாலடியாரின்,

"எத்துணை யானும் இயன்ற அளவினால்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர் — மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்கால் பின்னறிதும் என்பார்
அழிந்தார் பழிகடலத் துள்"

எனும் பாடல் அடிகள் வலியுறுத்துகின்றன.

இந்த முறையில் பயன் கருதாது வழங்கப்பெற்று வந்த தானம் வளர்ந்து பயன் கருதும் நிலையை அடைந்தது. எனவே, இந்த தானத்தை இம்முறையில் செய்தால் இன்ன பலனைப் பெறலாம் எனும் நம்பிக்கை யின்பாற் செல்ல முற்பட்டனர்.

நம்பிக்கையின்பாற் செல்ல முற்பட்டதன் விளைவு பலதானங்கள் — அன்னதானம், பொருள்தானம், கோதானம் எனத் தானங்கள் பெருக லாயின.

தானங்களையும் தானங்களால் பெறப்படும் நன்மைகளையும் மக்க ளுக்கு அறிவிக்கும் பொருட்டும் தானங்களின் சிறப்பை எடுத்தியம்பும் வகையிலும் இக்கதைப் பாடலின் ஆசிரியர் பல அடிகளைப் படைத் துள்ளார். ஆலயம் சமைத்தலும் அந்தணர் ஓம்பலும் எல்லா வகையிலும் உயர்வுடைய தானம் என்பதை உணர்த்த,

"வருசத்தில் ரெண்டுதிரு நாள்ந டத்தி
பார்பார்க ளுக்குத்தானக் கொடைகொடுத்து" (18)

என்று பாடுகிறார். மேலும்,

"தென்சிவந்த நாவலர்க்கும் திருவனந்தப் பெருமாளுக்கும்
பொன்னுமுடி சமைத்துவைத்தால் பிள்ளைதரு வாரெனவே
வஞ்சமற்ற வேலவர்க்கும் வானுமலை அய்யனுக்கும்
அஞ்சிவர் முடிசமைத்து ஆபரணம் சாத்திவைத்தாள்" (30)

என, தேவி ஆலயம் கட்டுதலுடன் பலவகை ஆபரணங்களை இறைவனுக்குச் சாத்தும் வகையில் தானம் புரிந்துள்ளமையை இந்த அடிகளின் வழி ஆசிரியர் எடுத்தியம்புகின்றார்.

கனக தானம் சத்திய உலகை அடையச் செய்யும் என்பதை அறிந்த தேவி, பொன்னையும் பொருளையும் ஆண்டி முதல் அந்தணர் ஈறாக அனைவருக்கும் வழங்குகிறாள். இது,

''பணமெடுத்துப் பலபேர்க்கும்-அம்மை-பார்ப்பார்க்குத்
தானமிட்டாள்
குணமுடைய மாதுமின்னாள் கோனாண்டி ராசன்தேவி
ஆண்டிபர தேசியர்கள் அந்தணர்க்கும் நாவலர்க்கும்
வேண்டியபொன் தானமிட்டாள் வேந்தனுட திருத்தேவி
இறப்பவர்க்கும் பிறப்பவர்க்கும் எல்லார்க்கும் ஒருப்போலே
பார்பார்க்குத் தானமிட்டாள்-ஒரு-பாலன்ஒன்று வேணுமென்று''
(29)

என்னும் அடிகளால் புலப்படுத்தப்பெறுகிறது.

மடங்கள், சுமைதாங்கிகள், கலப்பைக்கொழு, கோதானம், குளம், தண்ணீர்ப்பந்தல், கஞ்சி, பந்தல், மடப்பள்ளிகள், கோவில், நந்தவனம், நடைசாலை போன்றவற்றை ஏற்படுத்துதல் பாவம் தொலையுழ் குறை நீங்கவும் மக்கட்பேறு பெறவும் செய்யப்பெறும் தானங்களாகும் என்பதை வலியுறுத்த நினைக்கும் ஆசிரியர்,

''காதத்துக்குக் காதவழி கல்மடங்கள் கட்டிவைத்தாள்
தூரத்துக்குத் தூரவழி சுமைதாங்கி நாட்டிவைத்தாள்
நீர்வாவி வெட்டிவைத்தாள் நினைந்தகல்லும் கட்டிவைத்தாள்
....
நந்தா வனங்கள்வைத்தாள் நடசாலை அவள்முடித்தாள்
....
பூங்கா வனங்கள்வைத்தாள் புண்ணியதா னங்கொடுத்தாள்
பாங்கான வேதியர்க்குப் பால்பசுவும் தான்கொடுத்தாள்
....
கோதான மும்கொடுத்தாள் (ஒரு) குழந்தையொன்று
வேணுமென்று'' (29)

எனத் தருமச் செயல்களை நீண்ட பல அடிகளில் பாடிச் செல்கிறார்.

சடங்கு

மனித வாழ்வில் நீங்காது இடம்பெறுவது சடங்கு. இதனைத்தான்,

> ''இந்துக்களுக்குப், பிறப்பதற்கு முன்னும்
> பிறந்து வாழும் காலத்திலும் இறந்தபிறகும்
> சடங்குகள் விதிக்கப்பட்டுள்ளன''[40]

என்கிறார், திருவாவடுதுறை ஆதின மகாவித்துவான், கே. ஆறுமுக நாவலர்.

இந்தச் சடங்கினைக் கிரியை என்றும் வழங்குவர். தொல்காப்பியர் சடங்கினைக் கரணம் என்கிறார்.

மக்கள் அனைவராலும் இச்சடங்கு முறை பின்பற்றப்படுகிறது. அச்ச உணர்வே காரணம். மேலும், முன்னோர் செயலுக்கு மதிப்புக் கொடுத்தலுமாகும்.

எந்தச் செயலிலும் நன்மையை மட்டுமே எதிர்பார்க்கும் மக்கள் அவற்றிற்கான சடங்குகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக் கருதுகிறார்கள். குழந்தை பிறப்பு முதல் அது வளர்ந்து இறக்கும் வரையிலான எல்லாச் செயல்களுக்கும் சடங்குமுறை இன்றளவும் மக்களிடத்துக் காணப்பெறுகின்றன.

நாமகரணம், புண்ணியவாசனம், நிஷ்கராமணம், அன்னப்பிராசனம், வித்யாரம்பம், குருகுலவாசம், திருமணம், காப்புக்கட்டுதல், முளையிடுதல், திருமங்கல நாண்பூட்டல், அபரக்கிரியை, அந்தியேட்டி, அத்திசஞ்சயனம், பாஷாண பூசை, சிரார்தம் என்று பல சடங்கு முறைகள் மனித வாழ்வில் நீங்காது இடம்பெற்றுவிடுகின்றன. அவற்றிற்கான விதிமுறைகளைத் தெரிந்தோ தெரியாமலோ மக்கள் சடங்குப்படி எதையும் செய்ய முயலுகிறார்கள். இதன் விளைவு இன்றளவும் மக்களிடத்துச் சடங்குமுறை நீங்காது இடம்பெற்றுள்ளது.

சடங்கு முறைப்படி எதையும் செய்தால் எந்தச் செயலும் முழுமையாக நிறைவேறியதாகும் எனும் கருத்தை மக்களுக்கு வலியுறுத்த விரும்பியே வில்லுப்பாட்டின் ஆசிரியர்கள் தாங்கள் எடுத்துக்கொண்ட கதைப்பாடலுக்கேற்ப வரப்பெறும் சடங்குகளைத் தவறாது அறிவுறுத்திச் செல்கின்றனர்.

> ''நல்லிதமாய் நானிருந்து — இந்த — நாட்டி லிறந்துபோனால்
> குடம்சுமந்து கொள்ளிவைக்க — ஒரு — குழந்தையொன்று
> வேண்டாமோ

எள்ளும் புலநீரும் இறைக்கமகன் வேண்டாமோ
முன்கை தனைச்சிரைத்து முகத்துமுடி தானிறக்க
அங்கங் கடல்வரைக்கும் அழுதுவரப் பிள்ளையில்லை'' (22)

என்று வ்ருந்துகிறாள் மந்திரப்பூமாலை. இது மக்கள் உள்ளத்தை ஈர்ப்பதாகும்.

இறுதிக்கடன் நேர்த்தி செய்வது மகன்களே. அதிலும் தாய் இறப் பின் அவளின் தலைமகன் அவளுக்குக் கொள்ளி இடுதல் மரபு. இந்நிலையில் தாய் தனக்குக் கொள்ளியிட தலைப்பிள்ளை இருத்தல் வேண்டும் என்று அவா கொள்கிறாள். மற்றைய பிள்ளைகளினின்று சிறிது வேறுபட்ட நிலையில் பாசத்தையும் தலைமகனிடத்துப் பொழி கிறாள்.

இந்த முறையில்தான், தோட்டுக்காரி கதைப்பாடலில் வரப்பெறும் தாயும், தனக்கு மலடி என்ற பெயர் நிலைத்து நில்லாது இருக்கக் குழந்தை ஒன்றேனும் பிறக்க வேண்டும். அந்தக் குழந்தையும் மகனாக இருத்தல் வேண்டும் என்று அவா கொள்கிறாள்.

தனக்குக் கொள்ளி வைக்கவும் பின் நிகழப்பெறும் சடங்குகளுக் கும் — எள்ளும் புலநீரும் இறைக்க, அங்கங்கடல்வரை அழுதுவர மகன் வேண்டும் எனக் கருதுகிறாள். அதற்கேனும் பிள்ளை வேண்டாமோ என ஏங்குகிறாள்.

அவளின் ஏக்கப் புலம்பலின்வழி, மகன் இல்லாதவிடத்துச் சடங்கு களைச் சரிவரச் செய்ய இயலாது சென்றுவிட நேரும் என்பதை உணர்த்துகிறார் ஆசிரியர்.

கோயில் திருப்பணிகள்

''குறைகள் உடையோன் மனிதன்''. குறைகள் செய்யாதவிடத்து அவன் தெய்வமாகச் சான்றோனாகக் கருதப்படுகிறான். இதனைத் தான்,

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்''

என்கிறது குறள்.

பொதுவாகக் குறைகள் நிறைந்தவர்களாகவே மக்கள் இருக்கின்ற னர். அதை நினைத்து வருந்தும்போது பாவமற்றவர்களாகிறார்கள். குறைகளை மக்கள் உணர முற்படுஞ்சமயத்து இனி செய்யாது இருக்க எண்ணுவதுடன், செய்த குறைகளால் உருப்பெற்ற பழிபாவங்களைக்

களைய முயல்கிறார்கள். தீர்வுகாண ஒரே வழியாக இறைவன் விளங்குகின்றான். எனவே, இறைபணி செய்து அதன்வழி விமோசனம் பெற மக்கள் விரும்புகிறார்கள். இறைவன்மீது கொண்ட அன்பால், அவனுக்கு ஆலயங்கட்டுதல், அவன் புகழ்பாடுதல் என்று பல பணிகளைச் செய்ய முற்படுகிறார்கள்.

இறைவனிடத்துச் சேர்வோர் நன்மையே பெறுவர்; குறைகள் அவரை அணுகா என்ற அறக்கருத்துகளை உணர்த்துவதன்வழி, மக்களுக்கு இறைப்பற்றுப் பெருகுவது இயல்பு. மேலும், குறைகள் செய்தோர், குறைகள் உடையோர் இறைவனிடத்துச் சேர்த்தால் குறைகள் நீங்கப்பெறுவர் என்பதன் வழியும் இன்னின்ன பணிகள் செய்வதன்வழி இறந்தவன் இன்பம் எய்தி அதன்வழி பழிபாவங்களைத் துடைக்கின்றான் என்பதன் வழியும் மக்களின் அறிவுக் கண்ணைத் திறக்க இயலுகிறது.

இந்த வகையில், கோயில் கட்டுதலைக் குறித்து,

''கண்ணாளர் தனைவருத்திக் கனகமலை மரங்கள்வெட்டி
வெட்டிநன்றாய் பணிப்படுத்தி விதவிதமாய் வேலைசெய்து
மூத்தநயி னார்தனக்கு முகித்தாரே திருக்கோயில்'' (45)

என்று 'தோட்டுக்காரி கதைப்பாடல்' உணர்த்துகின்றது.

குழந்தையில்லாக் குறையை நீக்கிக்கொள்ள மன்னன் இறைவனுக்கு ஆலயம் எடுத்தான் என்பதை வலியுறுத்துகின்றன இவ்வடிகள்.

ஆ + லயம் – ஆன்மா, இறைவனிடத்து லயித்தல் என்பது பொருள். எனவே, குறையுடையோர் ஆலயம் கட்டுவதாலும் ஆலயம் சென்று முறையிடுவதாலும் இறைவன்பாற் லயித்துவிடுகிறார்கள் என்பதும் இதன்பால் பெறப்படுகின்ற உண்மைகளாகின்றன.

ஆலயம் எடுத்தவர்கள் இறைவனுக்கு நாள் வழிபாடு, வார வழிபாடு, திங்கள் வழிபாடுகள் நடத்துவதும் அவை தொடர்ந்து நடைபெற ஏற்பாடுகள் செய்வதும் ஆலயம் எடுத்ததன் முழுப்பயன் தருவனவாகக் கருதுவர். ஆண்டுதோறும் எடுக்கப்பெறும் பெருவிழாக்களும் சிறப்புப் பயன் தருவன என்பர். இக்கருத்தை மக்களிடை வைக்கிறார் ஆசிரியர்.

''கோவில்கட்டி ராசமன்னன் குருபூசையும் தான்நடத்தி
ஆவலுடன் கோவிலிலே அரசனுடத் திருத்தேவி
வாசமுடன் திருப்பதியில் வந்துவயனம் இருந்தாரே'' (45)

என்பன ஆசிரியர் கூற்று.

நோன்பு நோற்றல்

பூசை முதலியன நடத்துவதுடன் மகப்பேறு விரும்பும் அரசமாதேவி விரதம் மேற்கொள்ளுதலையும் சுட்டுகிறார் ஆசிரியர்.

''பட்டினி பரம அவுஷதம்'' என்கிறது வடமொழித்தொடர். உடல்நலங் கருதி மேற்கொள்ளப்படுவது விரதம். அறிவியல் உண்மை யான பட்டினி முறையை உணர்த்த முயன்றபோது, ஏற்க மறுத்த மக்களுக்கு இறைபக்தியும் கலந்து கூற நேரிட்டது.

மனத்தைக் கட்டுப்படுத்த இயலாத நிலையில் மக்கள் பட்டினி இருத்தலை எளிதில் கைவிடுகின்றார்கள். இதனை இறைவனுடன் இணைத்துக் கூறும்போது அச்ச உணர்வினால் மனத்தைக் கட்டுப்படுத்த முயன்று 'வெற்றி பெறுகின்றனர்.

இந்த நிலை, வளர்ச்சிப்பெற்றுக் குறைகளைப் போக்கிக்கொள்ள விருப்பத் தெய்வத்தினை எண்ணி விரதமிருத்தல் வேண்டும் என்ற நிலையை அடைந்தவுடன் நில்லாது, இன்னின்ன நாளில் விரதமிருப் பின் இன்னின்ன பலனைப் பெறலாம் என்ற நியதியை வகுக்குமள விற்குச் சென்று இன்றளவும் மக்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், விரதமிருந்ததன்வழி அவள் பிள்ளைப்பேறு பெற்றதையும் உணர்த்தும் ஆசிரியர், மக்களிடத்து நம்பிக்கையுணர்வை அதிகரிக்கச் செய்கின்றார்.

> ''தீர்த்தமாடித் திருநீறும் பூசியே
> அன்னந் தண்ணீ ரும்பொசி யாமலே
> ஒன்றும் பொசியாம லொருசந்தி யாகவே
> பூவும் போட்டு அடிதொழு தாளம்மை'' (46)

என்பன விரதமிருந்த முறைகளாகச் சுட்டப்பெறுகின்றன. கதைப் பொருளோடு தொடர்புடைய இச்செய்திகள் எளிமையாகவும் விரிவாக வும் மக்களிடையே உணர்த்தப்பெறுகின்றன.

நிமித்தம்

''நன்மை தீமைகளை முன்னறிவிக்கும் அறிகுறிகள்'' சகுனம் எனப் பெறுகிறது. ''நிமித்தங்கள் நம்பிக்கையின் பாற்பட்டன. நம் செயல் களுக்கும் நம் வயப்படாத இயற்கையின் நிகழ்வுகளுக்கும் தொடர்பு காட்டுவது நிமித்தங்களின் செயல்பாடாகும்'' என்கிறார் திரு. க. காந்தி அவர்கள். நிமித்தம், சகுனம், விரிச்சி என்ற பல பெயர்களால் இது வழங்கப்பெறுகிறது.

தம் வாழ்வில் சகுனம் பார்ப்பதை அன்று முதலே மக்கள் கையாளு கின்றனர். சகுனம் குறித்த செய்திகளைத் தொல்காப்பியந்தொட்டே அறிய முடிகின்றது. வேள்விக் கபிலை பால் பயன் குன்றுதலானும் குன்றாது கலன் நிறையப் பொழிதலானும் உளதாய நிமித்தம் பற்றித் தலைவருக்கு வரும் நன்மை தீமை கூறுதலும்... நன்னிமித்தம் பற்றிச் செலவு நன்றென்று கூறுதலும் தீய நிமித்தம் பற்றிச் செலவைத் தவிர்த்துக் கூறுதலும் அந்தணர் கிளவி என்பதைத் தொல்காப்பியம் கூறுகிறது.

''ஆவொடு பட்ட நிமித்தம் கூறலும்
செலவுறு கிளவியும் செலவழுங்கு கிளவியும்''

என்பன நூற்பா அடிகள்.

''படை இயங்கு அரவம் பாக்கத்து விரிச்சி''

என்று பாக்கத்து விரிச்சி என்ற ஒரு துறையையே அமைத்துத் தருகிறது தொல்காப்பியம்.

நிமித்தம் இருவகைப்படுகிறது. நன்நிமித்தம், தீநிமித்தம்.

நன்மை தரும் நிமித்தங்கள்

அழகு வாய்ந்த மகளிர், நிறைகுடம், வண்ணான், தயிர்க்குடம்... இரட்டைப் பார்ப்பனர் போன்ற நிமித்தங்கள் எதிரில் தோன்றினால் மிகவும் நன்மை உண்டாகும்.

நரி, கிளி, வேங்கைப்புலி... செம்போத்து ஆகியவை நமக்கு இடது பக்கத்திலிருந்து வலது பக்கமாகச் சென்றால் மிகவும் நன்மை உண்டாகும்.

தீமை தரும் நிமித்தங்கள்

அழுக்கு ஆடை, அணிகலன், செம்பட்டைத் தலையன்... விதவைப் பெண், கையில் கயிறு உடையவன், விரிந்த தலையை உடையவன், மொட்டைத் தலையன்... மூக்கு இல்லாதவன், வாணியன் ஆகியோர் எதிர்காணல் தீமை உண்டாகும்.

இவற்றுள் பெருவழக்காகக் காணப்பெறும் நன்நிமித்தங்களாக நிறைகுடம், கௌளி சொல்லுதல், பறவை பறத்தல், அழகு வாய்ந்த மகளிர் எதிர்வரல், ஆணாயின் வலது கண்ணும் பெண்ணாயின் இடது கண்ணும் துடித்தல் ஆகியவை கொள்ளப்பெறுகின்றன.

தீநிமித்தங்களாக, விதவை, மலடி எதிர்வரல், தும்முதல், விறகு எதிர்வரல் போன்றவை அமைகின்றன. இலக்கியங்கள் பலவும் இவற்றிற்கான சான்றுகள் பகர்கின்றன.

''பொலந்துடி மருங்குலாய் புருவம் கண்முதல்
வலந்துடிக் கின்றில வருவ தோர்கிலேன்''

''எல்இருள் கனவில் கண்டேன்
கண்இடன் ஆடும் இன்னே''

''பாங்கர் பல்லி படுதொறும் பரவிக்
கன்றுபுகு மாலை நின்றோள்''

''மனைவயிற் பல்லியும் பாங்குஒத்து இசைத்தன
நம்எழில் உண்கணும் ஆடுமால் இடனோ''

இவற்றுள், கௌளி சொல்லுதலை இன்றளவும் மக்கள் நிமித்த அறிகுறியாகப் பெரிதும் பயன்படுத்துகின்றனர். கௌளி சொல்லுதலின் பலன்களாக,

''வலமிகச் சொலினும் பல்லியல்லது யிடத்திற் கூற
பலமிக வுடைய தாகும் பாங்குடைக் கருமம் நன்றாம்
குலமிக வளரு நாளுங் கோற்குறு காதன் மைந்தர்
பலமிக வுடைய ராவர் பல்லியன் இயல்பு தானே''

என்று மனைநூல் குறிப்பிடுகின்றது.

இந்த நிமித்தக் கூறுகளைத் 'தோட்டுக்காரியம்மன் கதைப்பாடல்' வழியும் அறியமுடிகின்றது. மருத்துவச்சி மருத்துவம் தொடங்குமுன் தான் புறப்படும் போது கண்ட நல்ல சகுனங்களை நினைவுகூர்ந்து பிள்ளைப்பேறு இனிதே நிறைவேறும் என்று ஆதரவான சொற்களைக் கூறுகிறாள்.

''வரும்போது நல்ல எதிர்பது கண்டேன்
மாய னருளாலே மோசம் வராது'' (62-63)

என்பது அவர் கூறும் செய்தி. இவ்வடிகள் நன்நிமித்தம் ஏற்பட்டதால் மோசம் வராது என்பதை உணர்த்துகின்றன.

''உச்சதி மேலொரு கெவுளியும் சொல்ல
ஒருத்தி யிடத்தே கருத்தாகத் தும்ம
உச்சித மாய்த்தோட்டுக் காரியம் மைதான்
ஊழி விதியை இவளறி யாமல்
கச்சித மாகவே தேரழிமா ரோடே
கடந்தவள் கோட்டை விட்டுநடந்தவள் வாறாளென்றே'' (162)

இடப்புறத்தில் தும்முதல் உச்சியிலே கெவுளி சொல்லுதல் ஆகிய தீநிமித்த அறிகுறிகளாக இருக்கவும் இவற்றை உணராமல் தோட்டுக்காரி வெளியில் செல்லுகிறாள் என்பதாக இவ்வடிகள் புலப்படுத்துகின்றன.

''காலம்நல்ல மழைகள்பெய்து கலப்பையோடு கொழுவெடுத்து
வீசும் பதந்தனிலே விதைக்கவரும் உழவரெல்லாம்
எனைஎதிரே கண்டவர்கள் இவள்மலடி என்பாரே'' (23)

மலடி எதிர்வரல் தீநிமித்தம் என்பதை உணர்ந்து தன் நிலைமைக்குத் தானே வருந்துகிறாள் தோட்டுக்காரி.

இவை வளர்ந்து வரும் இன்றைய அறிவியலுலகத்திற்கு ஏற்புடையதாக இல்லாதவிடத்தும் ஒருசிலரால் அச்சத்தின் காரணமாக நம்பப்பட்டு வாழ்வில் இன்றளவும் கடைப்பிடிக்கப்படுகின்றன.

''நிமித்தங்கள் பெரும்பாலும் மனிதமனம்
முடிவெடுக்க இயலாத சூழ்நிலைகளின்
தோன்றுவனவாகவே காட்சி தருகின்றன''

எனும் திரு. க. காந்தி அவர்களின் கூற்றும் இவண் நினைவுகூரத் தக்கதாகும்.

கனவு

''... கடைப்பட்ட சாமத்து நாட்பத்தி லேபலன் கைப்பெற்றதே'' என்பது கனா நூல். தூக்க நிலையில் காணும் கனவுகளுக்குப் பலன் உண்டு என்பது தமிழர் மரபு. அனுபவத்தில் அதன் பயன்களைக் கண்டு எழுதியும் வைத்தனர்; மக்கள் அதில் நம்பிக்கை கொண்டனர்.

கதைப்பாடல்களை நிகழ்த்தும் ஆசிரியர்கள் தங்கள் கதை நிகழ்ச்சிகளுக்கு உறுதுணையாகக் கனவுக் காட்சிகளைக் கதைக்கு மேலும் வலுவூட்டினர். அதன்வழி கதைக்குச் சுவையூட்டியதோடன்றி, மக்களிடையே கனவு பற்றிய சாத்திரங்களைப் பரப்பினர். கனவிற்கும் நிகழ்ச்சிகளுக்கும் உரிய தொடர்பைக் கதை நிகழ்த்துவோர் எடுத்துக் கூறுவதன் மூலம் மக்களிடையே நம்பிக்கை ஏற்பட்டது. மக்களும் தங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளோடு தாங்கள் காணும் கனவை ஒப்பிட்டுப் பார்த்து மேலும் நம்பிக்கையை வளர்த்துக் கொண்டனர். கதை நிகழ்த்தும் ஆசிரியர்கள் இக்கனவு நூல் சாத்திரத்திலும் வல்லுநராக இருந்தனர்.

''மரங்கள் விழ, பூவாட, பசுக்கள் கதற, பறவைகள் பறந்துபோகக்
காணும் கனவுகளால் தீமை உண்டாகும்''

என்பது கனவு நூல் கூறுவது. இவற்றை அறிந்தே கதைப்பாடல் நிகழ்த்தும் ஆசிரியர்கள்,

> ''வாழைத் தோப்பும் அழியக்கண்டேன் — அய்யோ
> மல்லிகைப் பூவுங் கருகக்கண்டேன்
> கூந்தல் அவிழ்ந்து அலையக்கண்டேன் — அப்போ
> கொண்டையில் பூவுங் குலையக் கண்டேன்
>
> பிட்டுக்கு மண்சுமந்தார் அறியநானும்
> பொல்லாத சொற்பனங் கண்டேன் என்றாள்
> போகாதே போகாதே என்கணவா
> பொல்லாத சொற்பனம் நானும் கண்டேன் என்றாள்''

என்பன போன்ற கனவு நிலைகளைக் கூறிக் கதைக்கு மெருகூட்டு கிறார்கள்.

> ''ஆண்மயிலும் பெண்மயிலும் அருகிருந்து வாழக்கண்டேன்
> அங்கேஒரு புனல்வேடன் செங்கணையில் அம்புதொட்டுச்
> செங்கணையில் அம்புதொட்டுச் சேரவே எய்யக்கண்டேன்
> ஆண்மயிலுக் கம்புபட்டு அலறிவிழக் கண்டேன்நான்''
>
> ''பண்ணையத்தில் பால்கறக்கும் பால்பசுக்கள் அத்தனையும்
> கன்றை இழந்துமேதான் கதறிப்பதைக்கக் கண்டேன்''

என்பன நல்லதங்கம் தன் அண்ணிமாரிடம் கூறும் கனவுச் செய்திகளாக ஆசிரியர் கையாள்வன.

தோட்டுக்காரி கதை நிகழ்த்துபவரும் இந்தக் கனவுமுறை உத்தி யினைத் திறம்படக் கையாளுகிறார். மந்திரப்பூமாலை என்னும் தேவி குழந்தைப்பேறு இல்லாது பலவகைத் தான தருமங்கள் செய்கிறாள். ஒருநாள் அவள் கனவு காண்கிறாள். அதை மன்னனாகிய தன் கணவ னிடமும் கூறுகிறாள்.

> ''தெய்வலோகப் பொற்கிளிதான் திருமடியில் வரவும்கண்டாள்
> மந்திரவாள் உறைகழற்றி மடிதனிலே வைக்கக்கண்டாள்
> பாம்புவந்து மடிஏறிப் படம்விரித்து ஆடக்கண்டாள்
> வேட்டாளி கூடுதெத்தி விரைவாய்குஞ்சு
> பொரிக்கக்கண்டாள்''

தெய்வலோகக் கிளி மடியில் வருவது; மந்திரவாள் பெறுவது; பாம்பு தன் மடியில் வந்து படம் விரித்து ஆடுவது; குளவி கூடுகட்டிக் குஞ்சு பொரிப்பது போன்ற கனவுச் செய்திகள் முறையே தெய்வீகத்

தன்மை வாய்ந்த அழகிய பெண்குழந்தை ஒன்று அவளுக்குப் பிறக்கும் என்பதையும் அக்குழந்தை பெரியவளாகும்போது பெரும்போருக்குக் காரணமாவாள் என்பதையும், அப்போரின் இறுதியிலே அவள் மறைவாள் என்பதையும் சுட்டுவனவாக அமைகின்றன.

மேலும், கணவனிடம் தன் கணவுகளைக் கூறும்போது,

''மந்திரவாள் தரவும்கண்டேன் வாங்கிவைக்க முறியக்கண்டேன்
பைங்கிளியை எடுக்கையிலே பறந்தோடிப் போகக்கண்டேன்''

என்ற குறிப்புகளையும் கனவில் படைத்துக்காட்டுகிறார் ஆசிரியர். அக்குழந்தை நிலைத்திராது என்பதை இவை நுட்பமாகச் சுட்டுகின்றன. அரசன் நுட்பம் அறிந்தான் ஆயினும் கனவின் முக்கியக் கூறுகளை மட்டுமே கூறித் தேவியைத் தேற்றுகிறான். அவளும் மகிழ்ச்சியடைகிறாள். இறுதியில் அக்குழந்தை நிலைபெறாத நிகழ்ச்சியைக் கூறுவதன் மூலம் மக்களிடையே கனவு பலித்ததையறியச் செய்கிறார்.

தீவினைகள்

மனத்திற்குத் தெரிந்தோ, தெரியாமலோ மக்கள் வாழ்வில் தீவினைகள் பல இடம்பெறுகின்றன. அவற்றைச் செய்யுமிடத்து வருந்தாத மக்கள் தமக்கே குறை நேரும்போது மன வருத்தம் கொள்கின்றனர். முன், தாம் செய்த பழி பாவங்களை எண்ணி வேதனையுறுகின்றனர். இறைவனிடத்து முறையிடவும் செய்கின்றனர்.

இந்தக் குறைகளைச் செய்ததன்வழி நான் இந்த நிலையை அடைந்தேனோ என மனம் வருந்தி இறைவனிடத்து முறையிட்டு அதனைத் தீர்த்துக்கொள்ள விழைகின்றனர்.

''காயாத மரமீது பூபிஞ்சறுத்தேனோ கன்னியர்கள்
பழிகொண்டெனோ
தாயா ருடன்பிறவிக் கென்னவினை செய்தேனோ தந்தபொருள்
இல்லையென்றேனோ''

நடராசர் பத்து எனும் நூல்வழி அறியப்பெறும் இந்தப் பாடலடிகளும் இதனையே உணர்த்துகின்றன.

பொதுவாகச், செய்த குற்றத்தை எண்ணி, மனம் வருந்தும்போதே மனிதன் மன்னிப்பைப் பெற்றுவிடுகிறான் என்பது அறிஞர்தம் கருத்து. இந்த நிலையில் 'தோட்டுக்காரி கதை'ப் பாடலில் வரப்பெறும் தேவி, தான் மலடியாவதற்குக் காரணம், முன்பு தான் செய்த தீவினைகளே என எண்ணி மனம் வருந்துகிறாள்.

''மூலையிலே நெல்லிருக்க முழுச்சாவி கலந்தேனோ
கொத்தைக் குறைத்தேனோ குறைமரக்கால் அளந்தேனோ
பிச்சைக்கு வந்தபேரை-நான்-பின்னேவரச் சொன்னேனோ
முன்செய்த தீவினையோ முதல்செய்த பொல்லாங்கோ
தாலிகட்டும் வேளையிலே சனியன்வந்து தொடர்ந்தானோ
மாலையிடும் வேளையிலே மாற்றான்வந்து பிடித்தானோ
தொட்டுஉலக் கைபிடித்துச் சுற்றிவந்த தோசமிதோ'' (24)

எனும் பாடல் அடிகள் தேவியின் வருத்தப் புலம்பலைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அத்துடன், அவள் குழந்தைப்பேறு பெற்றமையையும் கதையின்வழி, உணர்த்தி, மக்களுக்குத் 'தவற்றை ஒப்புக்கொள்வது தவறல்ல தவற்றிற்காக வருந்தியவிடத்து மன்னிப்புக் கிட்டும்' எனும் அரிய பாடத்தை அறிவுறுத்துகின்றார்.

ஆசிரியர் கூறும் தீச்செயல்களை நாட்டு அரசி செய்திருக்க இடமில்லை. மக்களுக்கு அறிவுறுத்த எண்ணிய ஆசிரியர் தம்மால் படைக்கப்பட்ட பாத்திரத்தின்வழி அறிவுறுத்த எண்ணியே அரசியின் மேல் ஏற்றிச் சொல்கின்றார். இதனால் இந்தத் தொடர்கள் அவளுக்கு அரசி எனும் நிலையில் பொருந்தாதிருப்பினும் மக்களுக்கு அறிவுறுத்தும் நிலையில் அமைகின்றன.

நடை

நடைச்சிறப்பும் இந்நூலுள் காணப்படுகிறது. யாப்புச் சிறப்பு, அடைமொழிச் சிறப்பு, சந்தச் சிறப்பு என்று பல வகையான சிறப்புகள் ஆசிரியரின் நடைத்திறனைப் புலப்படுத்துகின்றன. திரும்பத் திரும்பப் பாடும் உத்தி, மரபுத்தொடர், பழமொழி எனுமிவற்றைக் கையாண்டுள்ள முறையும் ஆசிரியரின் நடைத்திறத்திற்கு அணி சேர்க்கின்றன.

இத்தகைய நடைச்சிறப்புகள் இத்தலைப்பின்கீழ் ஆய்வு செய்யப்படுகின்றன.

நடைச்சிறப்பு

இலக்கியம் தோன்றிய அன்றே, இலக்கியச் சுவையும் தோன்றியது எனலாம். சுவைப்பு வளராவிடின் இலக்கிய வளர்ச்சி இல்லை. இலக்கியத்தைச் சுவைக்க அதன் கருத்தை அறிய துணைசெய்வது நடை உணர்வு ஆகும். பல்வேறு நடையியற் கூறுகள், சுவைப்புத் தன்மையை வளர்க்கின்றன.

பாடுபொருளுக்கேற்பத் தம் மொழிநடையைப் பயன்படுத்தும் கவிஞனே பிறவிக் கவிஞனாகிறான்.

> ''ஒரு கவிஞரின் மொழிநடையினை ஆராய்வதற்கு அவர் பாடிய பொருளின் தன்மை, அப்பொருளை அவர் வெளிப்படுத்தப் பயன்படுத்திய நடை உத்திகள், அலங்காரப் பண்புகள் முதலான வற்றை அறிந்தாலன்றி கவிஞரின் ஆளுமையை முழுவதும் உணர முடியாது''

என்பர் இ. சுந்தரமூர்த்தி அவர்கள். இதன்படி, இலக்கியத்தைச் சுவைக்க நடை உத்திகளை அறிதல் அவசியம் என்பது தெரிகிறது.

நடை உணர்வு அடிப்படையில், தோட்டுக்காரி கதையைப் பகுத்துக் காணலாம். கதைப் பாடல்களின் பொதுத் தன்மையான நீண்ட அளவில் அடிகளை உடையதாக அமைகிறது. வில்லுப்பாட்டு, உடுக்கடிப்பாட்டு, கணியான்பாட்டு, அம்மானை, இலாவணி என்ற வகைகளில் இப்பாடல் வில்லுப்பாட்டு வகையைச் சார்ந்தது.

கதை நிகழ்த்தும் அடிப்படையில் கதைப்பாடல்கள் மூன்று வகையில் அடங்கும், அவை,

1. கருவி இசையுடன் இணைந்து அமையும் கதைப்பாடல்
2. கருவி இசையுடன் ஆடலும் இணைந்து அமையும் கதைப் பாடல்
3. கருவி இசையுடன் நடிப்பும் இணைந்து அமையும் கதைப் பாடல்.

வில்லுப்பாட்டு, உடுக்கைப்பாட்டு, அம்மானைப் பாட்டு எனும் இவைகள் முதல் வகைக்கும், ஒயில், கும்மி, கோலாட்டம் எனுமிவைகள் இரண்டாம் வகைக்கும், கணியான் பாட்டு, தெருக்கூத்து முதலானவை மூன்றாம் வகைக்கும் சான்றுகளாக அமைகின்றன.

கதைப்பாடல்கள் பெரும்பான்மையும் ஒரே மாதிரியாக அமைவதில்லை. காரணம், அப்பாடலின் ஆசிரியர் பாடலை முன் முயற்சியின்றியே பாடிக் காட்டினார். அதனால், பாடல்கள் ஆங்காங்கு வேறுபட்டன. கதையின் நிலையான, முக்கியப் பகுதிகளை மட்டும் உள்ளத்திலே நிறுத்தி, அதனடிப்படையில் பாடினார். அவ்வாறான முயற்சியின்றி அமைவதற்குத் துணைபுரிவன அடிப்படை படைப்புக் கூறுகள் அல்லது மூலக்கூறுகள் ஆகும். ஆசிரியரின் படைப்புக் கூறுகளை மூலப்பொருள்கள் எனவும் வாய்பாடுகள் எனவும் இரு வகைப்படுத்திக் காட்டலாம்.

மூலப்பொருட்கள்

1. பாட்டுக்கட்டும் திறன்,
2. நிறைய கதைகள் அறிந்திருத்தல்
3. கதைகளின் முக்கியப் பாத்திரங்களை நன்கு அறிந்திருத்தல்
4. பாத்திரங்களின் இயல்புகளை நன்கு அறிந்திருத்தல்.

வாய்பாடுகள்

1. குறைந்த,. நீளமான அளவுகளை நிர்ணயித்தல்
2. பெயர், பெயரடை இணைந்த தொடர்களை அல்லது வரிகளைத் தேர்தல்.

இவற்றுள், வாய்பாடு என்பது தேவையான அளவுள்ள சொற்றொடர், வரி போன்ற அளவை நிர்ணயிப்பதேயாகும். பெயரடைத் தொடர்களை ஒரு பொருளுடன் தொடர்புபடுத்தும் திறன் வாய்பாட்டுத் திறனுள் அடங்கும். இது பாட்டை எளிதாக இயற்ற உதவும்.

இவற்றில் திறம்பெற்ற ஆசிரியர்களே முன் முயற்சியின்றி பல கதைப் பாடல்களைப் பாடி வழங்கியிருக்கிறார்கள். அவர்களுள் ஒருவராகவே தோட்டுக்காரி கதைப் பாடலின் ஆசிரியராகிய பால் நாடாரும் விளங்குகின்றார்.

இயைபுத்தொடை

மந்திரப்பூமாலை பிள்ளைப்பேறு இன்றி வருந்துகின்றாள். பிள்ளைப் பேற்றின் அவசியத்தைத் தன் உள்ளத்திலே நினைத்துப் பார்க்கிறாள். அவளுடைய உள்ளம் ஆசிரியரால் மக்களிடையே வெளியிடப்பெறு கிறது.

''ஆசைகொண்ட தேசமதை ஆண்டுமுடி சூடுதற்கு
அன்பாயொரு தம்பியும் வேண்டாமோ — அன்பாயொரு (-19)
விரைவாய் எடுத்தணைத்து வேந்தர்பெரு மான்மகிழ
மெள்ளச்சிரித்துக் கொஞ்சவும்வேண் டாமோ —
மெள்ளச்சிரித்துக் (-19)
தள்ளிநடை யிட்டுப்பிள்ளை மெள்ளவிளை யாடிக்கொண்டு
தாய்மடியில் ஏறவும்வேண் டாமோ — தாய்மடியில்'' (-19)

இவ்வடிகள், தேவி நினைக்கின்றவாறே வினா நடையில் தொகுத்துத் தரப்படுவது ஆசிரியரின் பாட்டுத் திறனுக்குச் சான்றாகிறது. நெடிய

தொடர்களால் அமைந்த இவ்வடிகள் அடி இயைபுத் தொடையில் அமைந்து நிகழ்த்து முறையின் இனிய ஓசையைத் தந்து கேட்போரை ஈர்க்கும் தன்மை உடையனவாகின்றன.

''அம்புபட்ட மானானேன் அலையிலிட்ட துரும்பானேன்
.... குறையானேன்
.... செக்கானேன் .... பதியானேன்
.... தேரானேன் .... கனவானேன்
.... மஞ்சானேன் .... மரமானேன்
.... கப்பலானேன்'' (-21)

இவ்வாறு நீண்ட தொடர்கள் பலவிடத்தும் இத்தன்மையைச் சார்ந்தனவாக அமைகின்றன.

''நாடான நாடதிலே நல்லபுகழ் நாடதிலே
வாடாத பகவதியாள் வாழும்நல்ல நாடதிலே
தென்குமரி நாடதிலே தெட்சணா பூமியிலே'' (-10)

''மோருக்கு முத்தளக்கும் முட்டப் பதிதனிலே
பாருக்குள் நெறிநடக்கும் பாரமுட்டப் பதிதனிலே
மணம்சேரும் ராசாக்கள் வாழும்முட்டப் பதிதனிலே'' (-11)

''கருவலப் பாறையிலும் கண்ணாளர் ஓடையிலும்
பருவான சாட்டுவண்டிப் பாதையிலும் சாலையிலும்
வாக்குராணிப் பாறையிலும் வழிபோற சாலையிலும்
பட்டணத்தார் குடியிருப்பும் பாலாறு ஓடையிலும்'' (-12)

போன்ற அடிகள், இறுதி ஒருசீர், இருசீர்கள் முழுமையாகவே இயைவு பட வரும் தலையாய இயைபாய் ஓசை நயம்பட அமைகின்றன. இவ்வாறான நடை ஆசிரியரின் யாப்புத் திறனுக்கு எடுத்துக்காட்டாய் நூலுள் பலவிடத்தும் அமைகின்றது.

எதுகைத்தொடை

பெரும்பாலான நூல்கள் எதுகைத் தொடையில் நிறைந்து விளங்கு வதே இயல்பு. இது கவிஞர்களின் சொல்லாற்றலைப் புலப்படுத்து கின்றது. இந்நூலாசிரியரின் எதுகைத்தொடை நயம் நூலுள் மிகுதி யாகவே அமைகிறது. அவற்றுள்ளும், தலையாய எதுகை மிகுதியாகவும் இடையாய, கடையாய எதுகைகள் ஒருசில அடிகளுள்ளும் அமைவது குறிப்பிடத்தக்கது.

"பெற்றெடுப்பார் தங்கள்முன்னே — நான் — வெற்றுடலாய் நிற்கிறேனே
யீன்றெடுப்பார் தங்கள்முன்னே இளமலடாய் நிற்கிறேனே
காய்க்கும் பருவத்திலே — நான் — கன்னிமல டானேனே
பூக்கும் பருவத்திலே பூமாறி நிற்கிறேனே" (-21)

இவ் அடிகளுள் தலையாய எதுகைத்தொடை அமைந்து இன்னோசை தருகின்றன. பிள்ளையில்லா குறையால் வருந்தும் மந்திரப்பூமாலை மகப்பேறு காலத்து உடல் வருந்தும்போது,

"பெற்றெடுப்பார் தங்கள்முன்னே வெற்றுடலாய் இருந்தேனில்லை
ஈன்றெடுப்பார் தங்கள்முன்னே இளமலடாய் இருந்தேனில்லை
இருந்தாப்போல் இருந்தேனில்லை இளமலடாய் இருந்தேனில்லை" (—52)

எனக்கூறி வருந்துகிறாள். இவ் அடிகளும் எதுகைத் தொடை நயம் பொருந்துவதோடு, ஆசிரியரின் செயல்திறன் இடத்திற்கேற்ப ஒரே நடையை உடையதாய் அமைகிறது.

அந்தாதி நடை

"ஆளும் படையோடே வாளும் நெருங்க
நெருங்கும் படைகள் நேரிட்டு நிற்க
நேரியக் காரரும் சீரிட்டு நிற்க
நிற்க வெகுபணி காரரர் ஒருபத்தி" (-17)

ஓா அடியின் ஈற்றுச்சீர் அடுத்த அடியின் முதற்சீராக அமையும். அந்தாதி நடை பாடலை மனத்தில் இருத்துவதற்கும் மீண்டும் நினைவில் கொண்டு வருவதற்கும் எளிய முறையாக அமைகிறது. இந்த நடையே பழந்தமிழ் மருத்துவ நூல்கள், ஜோதிட நூல்கள் போன்ற பலவற்றிலும் கையாளப்பட்ட நடையாகும். இந்நடை இக்கதைப்பாடலில் நிறைந்துள்ளது.

பெயரடைகள்

ஆசிரியருக்குப் பாட்டு இயற்றுவதில் சில வாய்பாடுகள் துணை புரிகின்றன. எளிய பெயர்ச்சொற்களைப் பாடல் அடியில் அமைக்கும் போது, பாடலடிக்கு ஏற்பச் சில துணைச் சொற்கள் ஆசிரியருக்கு உதவியாகின்றன. அவற்றுள் பெயருக்கு முன்வரும் அடைமொழிகள் ஒரு வகையாகும். அவ் அடைகளே பாடல் அடியை ஓசை நயம்பட நிரப்புகின்றன. கதைப்பாடலுள் அவ்வாறு ஓசை நிரப்ப வரும் அடைகள் பலவாக அமைகின்றன.

தேவிமார் கொலுவிருக்கும் இடம்,
''செம்பொன் மணிமேடைகளாம்''
அரசர்கள் வாழும் கோட்டை அதன் கதவு ஆகியவை,
''ஆணிபொன் பொற்கதவும் அழகுமணிக் கோட்டையிலே
மாணிக்கக் கோட்டையிலே வாழ்ந்திருந்த ராசாக்கள்'' (-14)

நால்வகைப் படைகளும் மந்திரிமார்களும் சேவகரும் அக்கோட்டையில் நிறைந்திருக்கிறார்கள். அவை,

''.... கம்பமதயானைகளும் .... கருத்துள்ள மந்திரியும்
.... வளைந்து நிற்கும் சேவுகரும் ....'' (-15)

இவ் அடிகளுள் மேடை, கோட்டை, யானை, மந்திரி, சேவுகர் ஆகிய பெயர்கள் ஒன்றும் பலவுமாகிய அடைமொழிகளை அடுத்து நின்று பாடலடியை நிரப்பி நல்ல நடையை அமைக்கின்றன.

தோட்டுக்காரி எனும் ஒரு பெயருக்குப் பலவகையான பெயர் அடைகள் அமைவதைக் கீழ்வரும் தொடர்கள் எடுத்துக்காட்டுகின்றன.

''மங்கை தோட்டுக்காரி'' (-86)
''பாவை தோட்டுக்காரி'' (-90)
''காரிகை தோட்டுக்காரி'' (-139)
''பூங்குழலாள் தோட்டுக்காரி'' (132)
''பைங்கொடியாள் தோட்டுக்காரி'' (-76)
''காரிகையாள் தோட்டுக்காரி'' (-86)
''வர்ணமுள்ள தோட்டுக்காரி'' (-118)
''கன்னி நல்லாளந்தத் தோட்டுக்காரி'' (-76)
''கற்புடைய மாதுமின்னாள் பொன்னுந்தோட்டுக் காரியவள்''
(-109)

விளிச்சொல் பெயரடை

''மொய்குழலே மருத்துவமே'', ''ஆயிழையே மருத்துவமே''
''நன்னுதலே மருத்துவமே'', ''எழுந்திரடி மருத்துவமே''
''ஏந்திழையே மருத்துவமே'', ''பைங்கொடியே மருத்துவமே''
(—59)

என்பன போன்ற விளித்தொடர்கள் பெயரடையாக வருவனவும் உண்டு. இவ் அடைகள் நூல் இயற்றுவோருக்குச் சிறந்த வாய்பாடுகளாக அமைந்து முன் முயற்சி இன்றி விரைந்து பாடப்பெரிதும் துணை புரிவனவாகின்றன.

ஒலிநயம்

கதைப்பாடலுக்குச் சுவையூட்டும் பகுதியாக அமைத்துக் காட்டப் பெறுவது குறத்தி குறிசொல்லும் பகுதி. குறத்தி தன் நாட்டு வளம் கூறுதல், தன்சிறப்புக் கூறுதல் போன்றவற்றிலே பலவகைச் சந்த நடையைக் கையாளுவது கதைப்பாடலின் ஒலி நயத்திற்கு எடுத்துக் காட்டாக அமைகின்றது. சான்றாக, குறத்தி குறி சொல்லும்,

> ''மனமதிலே நீகேட்ட காரியங்க ளெல்லாம்
> வகைவகையாய் நான்உனக்கு வகுத்துரைப்பேன் கேளு
> காலிகன்று பொன்னுடமை போனதுவும் இல்லை
> கட்டுப்பெட்டிச் சேலைதுகில் போனதுவும் இல்லை'' (-41)

> ''தவமான ஒருகுழந்தை தானுமில்லாக் குறைதான்
> பொன்பணங்கள் இல்லையென்று உனக்குக்குறை யில்லை
> பிள்ளையில்லா மனச்சடைவு உண்டுமடி தாயே'' (-42)

இப்பாடலடிகள் முழுமையும்,

> ''தனதந்தினா த்னதந்தினா தனதந்தினா தன்னா
> தனனாதந் தனாதனன்னா தனதந்தினா தனனா''

என்னும் சந்தக் குழிப்பில் அமைகிறது. இந்த சந்தநடை இசைக்கருவி களுடன் கதைப்பாடல் நிகழ்த்தும்போது கேட்போர் உள்ளத்தை ஈர்ப்ப தாக அமையும். கேட்போர் கதை முடிந்தபிறகும் மீண்டும் மீண்டும் தாங்களே பாடிச் செல்லுகின்ற போக்கையும் பெறுகிறது.

இதுபோன்ற பலவகைச் சந்த நடைகள் நூல் முழுமையும் அமை கின்றன.

திரும்பத்திரும்பப் பாடுதல்

மக்கள் மனத்தில் ஆழப்பதிய வேண்டிய கருத்தை திரும்பத் திரும்பக் கூறுதல் இயல்பு. திரும்பத் திரும்பக் கூறுவதன் மூலம் மக்களை அறிவுபூர்வமாகச் சிந்திக்கத் தூண்டி அதன்வழி செயல்பட வைக்கவும் இயலும். மீண்டும் மீண்டும் கூறும் ஆசிரியர் தம் கொள்கைப் பிடிப்பை வலியுறுத்தி மக்கள் மனத்தில் ஆழப்பதிய வைக்க இம்முறையைக் கையாளுகிறார். 'தன் குறி வழக்கம் மிகவெடுத்துரைத்தல்' என்னும் உத்தியால் இம்முறையைக் கையாளுவதால் 'கூறியது கூறல்' என்னும் குற்றத்திற்கு ஆசிரியர் ஆளாவதில்லை.

புதுக்கவிதை எழுதுவோர் ஒரே வரியைப் பலமுறை எழுதக் காரணம் தங்கள் கருத்தை வலியுறுத்துவதுடன் மக்கள் மனத்தில் ஆழப் பதிய வைக்க முயலுவதும் ஆகும்.

இன்றைய நிலையில் வளர்ச்சிபெற்ற புதுக்கவிதையில் மட்டுமின்றி இம்முறை முன்னமே இருந்தது என்பதை வில்லுப்பாட்டுக் கதைவழி அறிய முடிகின்றது.

மீண்டும் மீண்டும் கூறும் இம்முறை மூன்று வகையில் கையாளப் பெற்றுள்ளது. அவை :

1. ஒரே கருத்தைப் பலவிடத்தும் மீண்டும் மீண்டும் கூறுவது.
2. ஒரே இடத்தில் ஒரு கருத்தை மடக்கி மடக்கிக் கூறுவது.
3. இசையின்பங் கருதி ஒரு கருத்தை பாடலில் திரும்பத் திரும்பப் பாடிச் செல்வது.

''பாரணி யான முட்டப் பதிதனில் தோட்டுக் காரி
தாரணி தனில்பி றந்த கதைதனை வில்லில் கூற'' (2)

''பூரணமா யத்தோட்டுக் காரிகதை தன்னை
பூதலத்தி லுள்ளமனு வோரவர்கள் கேட்கக்'' (3)

''ஆணவஞ்சேர் தோட்டுக்காரி அம்மன்கதை கூற
ஆனபத்திர காளியுன தருள்தரவும் வேணும்'' (4)

''சித்திரமாய்த் தோட்டுக்காரி தன்னுடைய கதையைச்
செந்தமிழோர் முன்னெழுதி வைத்திருந்தா ரில்லை'' (5)

''மயில்குளம் தோட்டுக்காரி மடிந்தபின் வந்த வாறு'' (9)

தோட்டுக்காரிக் கதையை வில்லுப்பாட்டில் கூறப்போவதாகக் கூறுவதும் அதற்காக இறைவழுத்துவதுமாகிய பொருள்களில் கதையின் பெயர் பலவிடங்களில் எடுத்தாளப் பெறுகிறது. இக்கூற்று கதையின் பெயரை மக்கள் உள்ளத்தில் நெடிது பதியவைக்கிறது.

''சீரணி செல்வ மோங்கும் தெச்சணாப் பூமி தன்னில்
பாரணி யான முட்டப் பதிதனில் தோட்டுக் காரி'' (2)

''தெட்சணாப் பூமி யான தென்கன்னிக் குமரி நாட்டில்'' (9)

''தென்குமரி நாடதிலே தெச்சணா பூமியிலே'' (10)

இவற்றுள் தட்சணாபூமி, தென்குமரி நாடு என்ற கதை நிகழ்விடம் பலமுறை எடுத்துக் கூறப்படுகிறது. இதேபோன்று முட்டப்பதி, தட்டாரிரப்பு, வாச்சான்குளம் போன்ற நாட்டுப் பகுதிகள் அவ்

ஊரைச் சார்ந்த மக்களுக்கு உணர்வூட்டுமாறு பலவிடத்து எடுத்தாளப் படுகின்றன.

மக்கள் மனத்தைக் கவருவதும் சிறந்த கருத்தை வலியுறுத்துவதுமே குறிக்கோளாகக் கொண்டிலங்குகின்ற வில்லுப்பாட்டுக் கதை நிகழ்த்து வோருக்குத் திரும்பத் திரும்பக் கூறும் இப்பழக்கம் இயல்பாக அமைந்த ஒன்றாகும். மேலும், கதை கேட்கும் மக்களுக்குக் கதையில் ஈடு பாட்டினை உண்டாக்கவும் இம்முறை பயன்படுகிறது.

''அண்டபர மேஸ்வரனே அடியாள்தலை தனிலே
அன்றெழுதி வைத்தபடி தானோ — அன்றெழுதிவைத்தபடி
தானோ?
வைத்தபடி தானோஎன்னை வையத்தி லுள்ளபேர்கள்
மலடிஎன் றென்னைநகைப் பாரே — மலடியென்று என்னை
நகைப்பாரே
சித்துடையும் தானுடுத்துச் சேரமுன்னெத்தி நரைத்து
சேராமல டானேனே சிவனே — சேராமல் டானேனே
மலடி மலடிஎன்று மானிடவர் சொல்லும்போது
மாளாதுட லாவிகுன்னு தையோ — மாளாதுட லாவிகுன்னு
தையோ'' (19)

''சேரடி சதங்கைதண்டை கிங்கிணியும் தானசைய
தெருவதிலே ஓடி விளையாட — தெருவதிலே ஓடி விளையாட
விரைவாய் எடுத்தணைத்து வேந்தர்பெரு மான்மகிழ
மெள்ளச்சிரித்துக் கொஞ்சவும்வேண் டாமோ —
மெள்ளச்சிரித்துக் கொஞ்சவும் வேண்டாமோ
தள்ளிநடை யிட்டுப்பிள்ளை மெள்ளவிளை யாடிக்கொண்டு
தாய்மடியில் ஏறவும்வேண் டாமோ — தாய்மடியில்
ஏறவும்வேண்டாமோ'' (19)

இந்த முறையில் திரும்பத்திரும்பக் கூறுவதால் கதை கேட்போர் கதையுடன் இரண்டறக் கலந்து துன்பமாயின் துன்பத்தில் மூழ்கி, இன்பமாயின் இன்பத்தில் திளைத்து இன்னின்ன இன்பதுன்பம் வாழ்வில் உண்டாக இடமுள்ளது என்பதையும் அறிவுபூர்வமாக உணர்கின்றனர்.

திரும்பத் திரும்பக் கூறப்பெறுவதை இசை இனிமை கருதியும் கூறுவது உண்டு. இசைக்கு மயங்காதார் எவருமில்லை. மதங்கொண்ட யானையும் இசைக்கு மயங்கியமையை,

''இசையினி லிவட்குத் தோற்றாம் யானையால் வேறு மென்னின்
இசைவதொன் றன்று கண்டீ ரிதனையா னிரந்து சொன்னேன்
வசையுடைத் தரசர்க் கெல்லாம் வழிமுறை வந்த வாறே
திசைமுகம் படர்க வல்லே தீத்தொட்டாற் சுடுவ தன்றே''

எனும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

கேட்போருக்கு மகிழ்வை உண்டாக்க இசை மயக்கம் துணைபுரி கின்றது. 'தோட்டுக்காரி கதை' வழி சான்றுகள் பல கிடைக்கின்றன.

''பந்தெடுத் தாடிவாறாள் — என்நாச்சியார்
பந்தெடுத் தாடிவாறாள்
பாடகம் தண்டை சிலம்பு புலம்ப
பட்டுச்சல் லாரிகள் விட்டுப் பிரிந்திட (பந்தெடுத்து)'' (-84)

''பலசொரூப மாடிவாறாள் — என்நாயகியாள் — பலசொருப மாடிவாறாள்
பட்டெடுத்துச் சூடிக்கொண்டு பஞ்சமியா ளஞ்சிமுகம்
கன்னியம்பலம் தன்னிலே கட்டழகி பலசொரூபி
(பலசொரூபம்)
....
குறியால் வெளிப்படாமல் மறைய ஒளித்துநின்று
கோலம்மாறி கோலம்கொண்டு கோரணிகள் கொண்டிடுவாள்
(பலசொரூபம்)
மறைய ஒளித்துநின்று பல்லிபோல் கெவுளிசொல்வாள்
பத்திமுத்தி பெற்றவள்தான் பலசொருபக் காரியம்மன்
(பலசொரூபம்)
எட்டுத்திக்கும் பட்டமிட்டு இருப்பாள்முக் கோணத்தில்
இந்திரரூபி மந்திரவல்லி ஏகசுத்தப் பூசைக்காரி (பலசொரூபம்)''
(171)

எனும் பாடலடிகள் சான்றுகளாக அமைகின்றன.

மரபுத்தொடர், பழமொழி

எந்தக் கருத்தையும் மக்கள் உள்ளத்தில் ஆழப் பதிய வைப்பதே நூலாசிரியர்களின் பெருநோக்கமாகும். அந்நோக்கத்தோடு தங்கள் கொள்கைகளை, மக்களுக்கான இன்றியமையாக் கருத்துக்களைக் கூறப் போந்த ஆசிரியர் அவற்றை நூலுள் வேண்டிய இடத்தெல்லாம் கூறிச்செல்வது போலவே, ஒரு கருத்தை வலியுறுத்த அதனோடு

தொடர்புடைய பல கருத்துக்களையும் சுட்டிக் கூறுவது மரபு. புதிய ஒரு கருத்தை மனமேற்கும் வகையில் கூறவேண்டுமாயின் பன்னெடுங்காலம் வழக்கில் இருந்துவந்த — வரும் மரபுத்தொடர்கள், பழமொழிகளைக் கொண்டு ஒப்புமைப்படுத்திக் கூறுவது இயல்பு. அத்துடன், எந்தக் கருத்தையும் எளிதில் மனமேற்க வழி வகுப்பதும் இம்முறையேயாகும்.

நூலிற் வரப்பெறும் கதை மாந்தர்களின் சிறப்பினை உயர்த்தவும் மரபுத்தொடர், பழமொழிகள் பயன்படுகின்றன. மேலும், ஆசிரியர் 'முன்னோர் மொழி பொருளேயன்றி அவர் மொழியும் பொன்னே போல் போற்றும்'' பெருமைக்கும், உலக வழக்கும் செய்யுள் வழக்கும் நன்கு உணர்ந்தவர் என்ற புகழுக்கும் உரியவராகின்றார்.

இம்முறையில், தோட்டுக்காரி கதைப்பாடலின் ஆசிரியர் மரபுத் தொடர், பழமொழிகளைக் கையாண்டுள்ள திறம் அவர்தம் உலகியல் அறிவைப் புலப்படுத்துவதாகும். பெண்களைக் கற்பிற் சிறந்த அருந்ததிக்கு ஒப்பாகக் கூறுவது மரபு என்பதையும், பெண்கள் கற்பின் சிறப்போடு இருப்பின் புகழ்பெறுவர் என்பதையும் உணர்த்த விரும்புகின்றார் ஆசிரியர்.

''அருந்ததிசேர் விழிமடவார் அறவேசடைத்து முகம்வாடி'' *(31)*

என்னும் அடியில் அமையும் 'அருந்ததிசேர் விழிமடவார்' என்னும் மரபுத்தொடர் அவர் உணர்வைப் புலப்படுத்துகின்றது.

'மூர்த்திச் . சிறியதாயினும் கீர்த்தி பெரிது' என்னுங் கருத்தை ஆசிரியர் வலியுறுத்த எண்ணுகின்றார். மேலும், உண்மைத் தன்மை வாய்ந்தவை; எக்காலத்தும் எப்பொழுதும் தம் தன்மையிலிருந்து மாறுவ தில்லை; புகழுக்குரியவை என்றும் புகழையும் அல்லாதன இகழ்ச்சியை யும் பெறுவது இயல்பு என்பதையும் அறிவுறுத்தக் கருதுகின்றார். இதன் விளைவு,

''பசுக்கிழடு ஆனாலும் பாலுருசி போயிடுமோ
குப்பையிலே போட்டாலும் குன்றுமணி மங்கிடுமோ
கடுகதுதான் சிறுத்தாலும் காரமது போயிடுமோ'' *(60)*

எனும் பழமொழித் தொடர்களை எடுத்துக் காட்டுகின்றார்.

வயதான மருத்துவச்சி தான் அவ்வளவு தூரம் நடக்க இயலுமா என வினவ, தொழில் திறனையும் அவளுடைய உடல் வலிமையையும் புகழும் ஒட்டன் பதிலிறுப்பதாக இப்பழமொழிகளைப் பயன்படுத்தும் ஆசிரியர், மன உறுதியிருப்பின் எந்தச் செயலையும் வெற்றிகரமாகச் செய்ய இயலும் என்பதை மக்களிடையே அறிவுறுத்துகின்றார்.

"வீட்டெலிக்கும் காட்டெலிக்கும் வெருகதுதான் பயப்படுமோ
ஆட்டுக்குட்டிக்கு ஓனாய்தான் அஞ்சுமோ கோனாரே" (134)

எனும் பழமொழிகளின்வழி,

குமரப்பராசன், தோட்டுக்காரியைக் கவர்ந்துசென்று மணக்க விரும்புகிறான். அவன் எண்ணத்திற்கு மறுப்புக் கூறுகிறாள் தோட்டுக்காரி. "அனந்தம் வந்து விடிந்தாலும் அந்தரத்தில் மடிந்தாலும் நான் உன்னை மாலையிடாமல் விடமாட்டேன்" என்று வீரவுரை கூறுகிறான் குமரப்பராசன். வீரம் பேசிய குமரப்பராசனை எதிர்த்து குமரப்பராசனை வீட்டெலி, காட்டெலி எனவும் தன்னை வெருகு எனவும் கொண்டு, "வீட்டெலிக்கும் காட்டெலிக்கும் (இந்த) வெருகதுதான் பயப்படுமோ" என்று கூறுகின்றாள். அதேபோல தன்னை ஓநாயாகவும் குமரப்பனை ஆட்டுக்குட்டியாகவும் உவமித்து "ஆட்டுக்குட்டிக்கு ஓனாய்தான் அஞ்சுமோ கோனாரே" என்று இழித்துப் பேசுகிறாள். அவள் கூறும் இந்த உவமைத் தொடர்கள் தமிழ்நாட்டுப் பழமொழிகளாகக் காணப்படுகின்றன.

அணிகள்

இலக்கியத்திற்கு அழகு சேர்க்கும் அணிகள் பலவற்றை இக்கதைப் பாடலினுள் காணமுடிகின்றது. தன்மை நவிற்சி, உவமை, உருவகம், அதிசயம் எனும் அணிநலன் இத்தலைப்பின் கீழ் ஆய்வு செய்யப் படுகின்றன.

உவமை

அணிநலம், சொல்ல வரும் கருத்திற்கு அணியாகத் திகழ்கின்றது. அணிகள் சொல்லப்பெறுஞ் செய்தி சிறப்படையப் பெரிதும் துணை புரிகின்றன.

"கருத்துக்கு நயமும் செவிக்கு இனிமையும்
தந்து செய்யுளைச் சொல்லாலும் பொருளாலும்
அழகு படுத்துவது அணி"

எனும் கலைக்களஞ்சியக் கருத்து இவண் நோக்கத் தக்கது.

"அணிபெருமை யொழுங்கழகா பரண முனையெல்லை
யலங்கார மாலையச் சினாவி படைவிருப்பின்"

அழகு, வனப்பு, ஒப்பனை, ஆபரணம், பெருமை, இனிமை, வரிசை எனும் பல பொருள்களையுடையது அணி என்பதை இந்த நாநார்த்த தீபிகை வரிகள் உணர்த்துகின்றன.

இத்தகு சிறப்புப்பெற்ற அணிகள் பல உள. அவற்றுள் தலைசிறந்து விளங்குவது உவமை.

மனிதனது சிந்தனை வளர்ச்சிபெறத் தொடங்கிய அன்றே உவமை தோன்றியது. ஒத்த தன்மையுடைய இரண்டு பொருள்களைக் கண்ட வுடன் இது இதனைப் போன்றுள்ளது என்று கூறும் நிலையை மனிதன் தானாகவே அடைந்து விடுகின்றான். இதன் வளர்ச்சி நிலையே உவமையாகிறது. உவமை வள்ர்ச்சி பெற்று இன்றைய நிலையில் தனக்கெனச் சிறந்த இலக்கணத்தைக் கொண்டிலங்குகிறது.

அணிகளுக்கான இலக்கணங்களைக் கூறுமுகமாகத் தோன்றிய தண்டியலங்காரம் உவமை குறித்துக் கூறுவதாவது:

''பண்புந் தொழிலும் பயனுமென் றிவற்றின்
ஒன்றும் பலவும் பொருளொடு பொருள்புணர்த்
தொப்புமை தோன்றச் செப்புவ துவமை''

இவைகளின் வழி, ஒரு பொருளை விளக்க அதையொத்த பிறி தொரு பொருளை ஒப்புமைப்படுத்திக் கூறி விளங்க வைத்தல் உவமை என்பது தெரியவருகின்றது. இதற்கு,

''உவமை என்பது பொருளைத் தக்க
ஒப்புமைகொண்டு உணர்த்துவதாகும்''

எனும் ரா. சீனிவாசன் அவர்களின் கூற்று அரணாக அமைகிறது.

உவமிப்பதன்வழி, ஒரு பொருளை நன்கு விளங்கிக் கொள்வ தோடன்றி பொருளின் சிறப்பையும் உயர்வையும் நன்கு உணர முடிகின்றது. இம்முறையில் அமையப்பெற்ற உவமைகள் பலவற்றையும் கொண்டு அழகு பெறுவது தோட்டுக்காரி கதைப்பாடல் எனும் இந்நூல். இதன்வழி அறியப்பெறும் உவமைச் சிறப்புக்களாவன:

இந்நூலுள் எடுத்தாளப்பெறுகின்ற உவமைகள், பெரும்பாலும் பண்பு, தொழில், பயன் என்ற மூன்று நிலையிலும் அமைகின்றன.

பண்பு உவமை

ஆசிரியர் தன்னை அடக்கமாகக் கூறிக்கொள்ளும் முகத்தான், **தன்னை கோரைப்புல்லுக்குச் சமமாகவும் சான்றோரை நன்கு வளர்ந்த பூமரத்துக்கு ஒப்பாகவும் எடுத்துக் காட்டுகின்றார். தன்னை பித்தளை என்றும் சான்றோரைத் தங்கம் என்றும் உவமிக்கின்றார்.**

> ''போதச்செருமி வளர்ந்த பூமரத்துக் கொப்பாய்
> புல்லுக்கோரை தான்செருமி நிற்பது சரியோ'' (-8)
>
> ''மாற்றரிய தங்கம் பொன்தனக் கிணையதாக
> வையத்தில் பித்தளை தான்சரி என்றாப்போல் (-8)

என்பன உவமைத்தொடர்கள். இவ் உவமைகளுள் சான்றோரைத் தங்கம் என்பதும் தன்னைப் பித்தளை என்பதும் உருவகங்களாகவும் அமைகின்றன.

மந்திரப்பூமாலை, தான் மலடியாக இருப்பதை எண்ணி தன்னை ஒரு வெற்று மரத்திற்கு உவமையாகப் பேசுகிறாள். பிள்ளைப் பேறுடைய மகளிர் எல்லோரும் சேர்ந்த நிலை ஒரு தோப்பாகவும் அதிலே தான் காய்ப்பு இன்றி நிற்கின்ற ஒரு தனிமரமாகவும் இருப்பதை,

> ''நாலுமரத் தோப்பதிலே நடுமரம்போல் நானொருத்தி'' (-23)

என்று கூறி அவள் நொந்து கொள்வதன் வழி அறியமுடிகின்றது.

தோட்டுக்காரியின் பிறப்பு கதிரவன் தோற்றத்திற்குச் சமமாக உவமிக்கப்படுகிறது.

> ''கதிரோன் உதித்ததுபோல் கன்னிநல்லா ளந்தத் தோட்டுக்காரி''
> (-76)

பிறந்ததாக ஆசிரியர் உவமிப்பதனை இவ் அடி சுட்டுகின்றது.

தொழில் உவமை

ஆசிரியர், தாம் ஒன்றும் அறியாதவர், பாட்டு இயற்றும் திறன் அற்றவர் என்பதாக அடக்கமாக நினைப்பதை, தன்னை ஈயைக் கொள்ளும் பூச்சிக்குச் சமமான ஈப்புலி என்று கொள்வதன் வழியும், கேட்போரை, தமிழும் செய்யுள் திறனும் உணர்ந்த சான்றோராகக் கருதுவதை, அவர்களை புலிக்குட்டிக்குச் சமமாகக் கொள்வதன் வழியும் அவரின் உவமைச் சிறப்பினை நன்கு அறிய முடிகின்றது.

> ''ஈத்துப்புலிக்கு ஈப்புலி சரியென் றாப்போல்'' (-8)

எனும், ஆசிரியரின் இவ உவமைத் தொடர் வழி அதனை நன்கு அறியமுடிகின்றது.

பிள்ளை இல்லாக் குறையால், பலவகை தான தருமங்களிலே ஈடுபட்ட மந்திரப்பூமாலையின் செயலுக்கு இரங்கி, சரியான வழி இருக்க அதை விடுத்து வேறு வழியில் வெகுதூரம் நடந்து களைத்து விட்டாய் என்று குறத்தி உவமிக்கும் தொழில் உவமையாகிறது.

''விளக்கிருக்கத் தீத்தேடித் திரிந்தவரைப் போலே
வெகுதூரம் நீநடந்து சடைத்துவிட்டாய் தாயே'' (42)

இப்பாடல் அடிகள்.

மந்திரப்பூமாலை கோவில் குளங்களெல்லாம் சென்று வந்ததை, அறிந்த குறத்தி, உண்மையை எடுத்துரைக்கும் உவமைத் தொடராக,

''கையதிலே புண்ணிருக்கக் கண்ணாடிவைத்துப் பார்த்ததுபோல்
கண்டகண்ட கோவிலெல்லாம் சென்றுதவ மிருந்தாய்'' (43)

எனும் இப்பாடல் அடிகள் அமைகின்றன.

பயன் உவமை

ஒட்டன் மருத்துவச்சியை அழைக்க, தான் கிழவி நடந்துவர இயலாது என்று மருத்துவச்சி மறுத்துரைக்க, அவளை, புகழுமாற்றால் ஒட்டன் கூறும் சிறப்பான உண்மையாக,

''பசுக்கிழடு ஆனாலும் பாலுருசி போயிடுமோ
குப்பையிலே போட்டாலும் குன்றுமணி மங்கிடுமோ
கடுகதுதான் சிறுத்தாலும் காரமது போயிடுமோ'' (-60)

எனும் இப்பாடலடிகள் விளங்குகின்றன.

உருவகம்

உவமை வேறு, பொருள் வேறு என்று தனித்தனியே வேறுபடுத்திக் கூறாது அவை இரண்டும் ஒன்றே என்னும் பொருள் தோன்றுமாறு அமைத்துக் கூறுவது உருவக அணி ஆகும்.

''உவமையும் பொருளும் வேற்றுமை யொழிவித்
தொன்றென மாட்டினஃ துருவக மாகும்''

எனும் தண்டியலங்கார நூற்பா இதனை உணர்த்துகின்றது.

மந்திரப்பூமாலை தன்னுடைய வருத்தத்தால் தன்னைப் பலவாறாக உருவகப்படுத்திக் கூறும் கூற்று, பெரும்பாலும் விரி உருவகமாக அமைவதை நூலுள் காணமுடிகிறது.

மந்திரப் பூமாலை குழந்தை இல்லாக் குறையால் தன்னை,

''அம்புபட்ட மானாகவும், ஆலையில் இடப்பட்ட துரும்பாகவும் கிளையை இழந்த மந்தியாகவும், ஆடாத செக்காகவும் அரசன் இல்லாத நகரமாகவும், ஓடாத தேராகவும் ஊமையின் கனவாகவும், மின்னல் இல்லா மேகமாகவும் வேரற்ற மரமாகவும், கரைசேராக் கப்பலாகவும் கயிறுஅற்ற பாய்மரமாகவும்'' (-21)

தன்னைப் பல்வாறு உருவகித்துக்கொள்வதை இவை உணர்த்துகின்றன.

இவ் உருவக அமைப்புத் தொடர்கள் பூமாலையின் நிலையை எடுத்துக் கூறுவதாக அமைந்தாலும் பிள்ளைப்பேறு அற்றவர்களின் உள்ள நிலையை மக்கள் உணர்ந்து உணருமாறு அமைகின்றன.

தன்மை நவிற்சி

எந்த ஒரு பொருளையும் செய்யுளுள் அமைத்துப் பாடும்போது அப்பொருளின் தன்மையை உள்ளவாறு அழகுபட எடுத்துரைப்பது தன்மை நவிற்சி அணி எனப்படும்.

நூலுள் அரசு, கோட்டை, படைகள், பணியாளர், மகளிர், நாடு போன்ற பலவும் உள்ளவாறு அழகுபடக் கூறப்படும் நிலை சிறப்புற அமைந்துள்ளது.

''கொடிமரமாம் நெடுந்தெருவாம் கொலுகுமணி மேடைகளாம்
அடியார்கள் வந்துதொழும் அரண்மனையும் சாடியாம்
....
தேவிமார் கொலுவிருக்கும் செம்பொன்மணி மேடைகளாம்
ஆணிப்பொன் பொற்கதவும் அழகுமணிக் கோட்டையிலே
மாணிக்கக் கோட்டையிலே வாழ்ந்திருந்தார் ராசாக்கள்'' (-14)

என்பன கோட்டை, அரண்மனை போன்றவற்றை எடுத்துக்கூறும் தன்மை நவிற்சி அடிகளாக அமைகின்றன.

''வாளும்படைக் காலாள்கள் அஞ்சுலச்சம் கோடிபடை
யீட்டிவெடி கேடயங்கள் எண்ணிலச்சம் கோடிபடை
....
சட்டையிட்ட பட்டாணிமார் சலுப்பத் துலுக்கர்களும்
....
பெண்ணார்கள் குரவையிடப் போரரசன் வீற்றிருந்தான்''

எனுமிவை, அரசு வீற்றிருக்கும் நிலையினைக் கூறும் தன்மை நவிற்சி அடிகள்.

அதிசய அணி

கவிஞர், உள்ளத்துள் நினைக்கும் பொருளினை அழகுபட எடுத்துரைக்கும் போது உலக வரம்பு கடவாது ஆனால், ஆன்றோர் வியக்குமாறு உரைப்பது அதிசய அணி எனப்படும். பொருளையோ, குணத்தையோ, தொழிலையோ, ஐயத்தையோ, துணிவையோ குறித்து இவ் அணி நிகழ்த்துவது உண்டு.

தோட்டுக்காரி தோழியருடன் பந்தாடுகிறாள். அவர்கள் தேர்ந்தெடுத்த பந்தின் பெயரைச் சொல்லுவதாகக் குறிப்பிட்டுத் தொடங்கிறார் ஆசிரியர். அவர் கூறும் பந்து வகைகளைப் பற்றிய தொடர்கள் சான்றோர் அதிசயிக்கும் வண்ணம், ஆனால் உலக வரம்பு கடவா வண்ணம் அமைவதைக் கண்டு மகிழ முடிகிறது. சுமார், இருபத்து மூன்று வகைப் பந்துகள் இப்பாடலுள் அமைகின்றன. முத்துப்பந்து, நீலபந்து, மூணு நிறமான பந்து, பட்டு நூலால் செய்த பந்து போன்றவை அமையும் அடிகளுள் 'பொன்னு நல்ல வர்ணப்பந்து, தங்கத் தரியிட்ட பந்து, தங்க மரகதப் பந்து, மரகத மாணிக்கப்பந்து, மாதுளம்பூ வாளிப் பந்து போன்றவை மன்னர் நிலைக்கும் அதிசயிக்கத் தக்க பந்துகளாகவே அமைகின்றன (பா. 86).

இதேபோன்று, பட்டின் வகை கூறும் பாடலும் அதிசய அணியின் பாற்பட்டதாகவே மகிழ்ச்சியூட்டுகிறது. சுமார் இருபது வகைப் பட்டுகள் எடுத்துக்காட்டப்படுகின்றன. அவற்றுள், ஆணி தரியில் நெய்தறுத்தது, பஞ்ச வர்ணமுடையது, கஸ்தூரி பட்டு, காடல் நிறப்பட்டு, வங்காளப் பட்டு போன்றவை சாதாரணமாக அமைகின்றன. ஆனால்,

''மாணிக்கப் பட்டுடனே மரகதப் பட்டுச்சேலை
....
வெள்ளைக்காரன் கப்பலிலே விரைவாகக் கொண்டுவந்த
உள்ளிச் சருகுபோலே ஒருபட்டு விலையைக்கேளும்
ஒன்பது முழத்துக்குப்பொன் ஒன்பதினாயி ரம்விலையாம்
....
ஆத்தூருச் சாலியன்நெய்த அதியப்பட்டு ஒன்றதுக்கு
பதினாயிரம் பொன்விலையும் ஒருஆனைக்குட்டி யும்
கொடுத்தார்'' (-117)

என்னும் அடிகளுள் பட்டின் பெயரும் விலையும் சான்றோர் வியப்பனவாக அமைவது குறிப்பிடத்தக்கது.

இன்பியல் முடிவு

படைப்பிலக்கியவாதிகள் தங்கள் படைப்புகளின் முடிவுகளை இன்பியல், துன்பியல் என்ற இருவகையில் அமைப்பது இயல்பு. மக்கள் மனமகிழ்விற்கே பெரிதும் முக்கியத்துவம் தர முயலுவதால் இன்பியல் முடிவே பெரிதும் படைப்பிலக்கியங்களில் காணமுடிகின்றது. வியாபாரக் கண்கொண்டு நோக்குமிடத்துத் துன்பியல் முடிவு நீங்காது இடம்பெறுகிறது. சான்றாகத் திரைப்படம் அமைகிறது.

நாடகம், நாவல் போன்றன பெரிதும் இன்பியல் முடிவையே தழுவி நிற்கும்.

''துன்ப உணர்வு நாடகத்தில் பரந்து காணப்படினும்
இறுதி முடிவு இன்பமாகவே அமையும்''

என்னும் டாக்டர் ஏ.என்.பெருமாள் அவர்களின் கூற்றிற்கேற்பவே கதை கூறும் பாங்கில் அமையப்பெற்ற இக்கதைப்பாடலும் துன்ப உணர்வுகள் பெருகியவிடத்தும் இறுதி இன்ப உணர்வுக்கே வழிவகுத்து இன்பியல் அமைப்பைத் தழுவியுள்ளது.

''அம்புபட்ட மானானேன் அலையிலிட்ட துரும்பானேன்
கொம்பிழந்த மந்தியைப்போல் குழந்தையில்லாக் குறையானேன்
....
வீணாக நானொருத்தி வெறுமலடாய் இருக்கிறேன்
பயிராக எனக்குஒரு பாலனில்லாக் குறையாலே
....
காய்க்கும் பருவத்திலே-நான்-கன்னிமல டானேனே'' (-21)

என்று மலடியான மந்திரப்பூமாலை தன் நிலை கூறி வருந்துவதை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

''வேட்டையும் ஆடி மன்னன் வீரிய மாக வேதான்
கோட்டைக்குள் பெண்ணும்கொண்டு குமரப்ப ராசன் தானும்
நாடிய படைகளோடே நாழிகை தன்னில் வந்து
பூட்டதுவும் திறந்து மாடப் புரைதனில் இருத்து மென்றார்''
(-138)

எனும் இவ்வடிகள் தோட்டுக்காரியைச் சிறைபிடித்தமையை விளக்கு கின்றன. சிறைபிடித்தமையால் போர் உருப்பெறுகின்றது. போரினால் பல அழிவுகள் ஏற்படுகின்றன.

''அவருட படையும் இவருட படையும்
அணிநெ ருங்கியே பொருதவர் பட்டார்
சமரிலே முடுகியே பொருதவர் பட்டுச்
சாடி உதிரங்கள் ஆறாய் ஓட
உடனே காகமும் கழுகும் குடிக்க
கூடியே காளிகள் கழுகும் சேர
கோட்டையும் முட்டப் பதியும் அழிய'' (-147)

எனும் இவ்வடிகள் போரினால் ஏற்பட்ட அழிவுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. இவ்வாறாக அழிவுகள் பல நேர்ந்ததைக் கண்ட

தோட்டுக்காரி தம்மால் உருப்பெற்றதே இந்தப்போரும், அழிவும் எனக் வருந்தி உயிர்துறக்க எண்ணுகிறாள். இறைவனிடம் வேள்வித்தீ வேண்டுகிறாள்.

''புகையோடே தீயெரிய பொற்கொடியாள் தோட்டுக்காரி
மகதேவா துணையெனவே வலமாகச் சுற்றிவந்தாள்
....
முக்காலும் சுற்றிவந்து மொலுமொலுவென்று குரவையிட்டு
தங்காமல் தோட்டுக்காரி சாடிவிட்டாள் தீயதிலே'' (-155)

இறையருளால் தோன்றிய வேள்வித் தீக்குள் தோட்டுக்காரி வீழ்ந்ததை இவ் அடிகள் உணர்த்துகின்றன. தோட்டுக்காரி உயிர் துறந்ததை அறிந்த குமரப்பராசன் அவள் இல்லாது வாழ்தல் இயலாத காரியம் என வருந்தித் தானும் அத்தீக்குள் வீழ்கிறான். இதனைத்தான்,

''சாலமுடன் நாமிருந்தால் தாரணயோர் ஏசுவாரே
ஏசுவாரே நாமிருந்தால் இறந்தால் பலன்தான் என்று
....
வேடிக்கையாய் ஓடிவந்து வெள்ளியப் பாறைதனிலே
சாடிவிட்டார் வேள்வியிலே தாரும்வரம் நமக்கெனவே''(-157)

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன.

இவ்வாறாக அடுத்தடுத்துப் பல துன்பங்கள் உருப்பெறுவதால் துன்ப உணர்வே பெரிதும் இழையோடி நிற்கிறது. ஆனால் இறுதியில்,

''உயிரதுதான் இறந்தபின்பு பின்னும்சிவன் மனதிரங்கி
பின்னும்அந்த யீஸ்வரனார் மறுபிறவி தான்கொடுத்தார்
....
பலசொருபக் காரனென்றும் பாவைபல சொரூபியென்றும்
....
விண்ணோர்கள் தான்மகிழ வேறே சொரூபமாக
....
பலசொருபக் காரியம்மன் பெருமலைபோ லேபிறந்தாள்''
(-158)

என் இவ்வடிகள், மறுபிறவி எடுத்துப் பலரும் போற்றற்குரிய சிறப்பினை அவ்விருவரும் அடைகின்றனர் என்பதை உணர்த்து வதன் வழி இன்ப உணர்வு மேலிட்டு இன்பியல் முடிவாக அமைகிறது இக்கதைப் பாடல்.

> "மரபு முறை நோக்கில் பார்த்தால்
> தமிழர்கள் துன்பியல் காட்சிகளுக்கு
> அன்னியர்களாகவே தோன்றுகின்றனர்"

என்னும் ஏ. என். பெருமாள் அவர்களின் கூற்று இவண் எண்ணிப் பார்த்தற்குரியது.

முடிவுரை

இந்த ஆய்வேடு சுவடிப்பதிப்பாக உருவாயிற்று என்றாலும், இதனுள் மூலம் மட்டும் கூடியதாகப் பதிப்பிக்காது ஆய்வு முன்னுரையுடன் கூடியதாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பொருள் விளக்கம், நூல் குறித்துப் பல செய்திகள் அறிதல், நூலோடு தொடர்புடைய பிற செய்திகளை அறிதல், நூலின் வழி அறியப்பெறும் சமுதாயக் கூறுகளை அறிதல் என்ற பல வகையிலும் துணைபுரிவதாக அமைகின்றது ஆய்வு முன்னுரை.

மூலத்தில் உள்ளது உள்ளவாறு பதிப்பித்தலே சிறப்பு என்பது முன்னோர் கூற்று எனினும், உள்ளது உள்ளவாறு பதிப்பித்தல் என்பது, பிழைகளுடன் கூடிய பொருள் விளங்காத நூலையே உருவாக்க வழிவகுக்கும். அந்நிலையினின்று விடுபட்டுப் பிழை உள்ளவிடத்துக் கற்போர் உளமேற்கும் வகையில் தேவையான திருத்தம் செய்து நூலின் பொருள் விளங்குமாறு இந்நூல் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

ஆய்வதற்குரிய செய்திகள்

இந்நூல் குறித்து இன்னும் பல செய்திகளை ஆராய வழி உள்ளது. முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்யும் நிலையிலான பல செய்திகள் இதனுள் காணப்பெறுகின்றன.

1. நூல் எழுந்த காலத்தியச் சமுதாய நிலை
2. நூலின் நடைச்சிறப்பு
3. நூலின் வழி அறியப்பெறும் ஊர்ப்பெயராய்வு
4. நூலுள் பயின்று வரும் சொல்லாய்வு
5. நூலின் இலக்கிய நயம்.

என்று, சமுதாய வரலாறு, இலக்கிய வரலாது, மொழி வரலாறு ஆகிய துறைகளுடன் சார்ந்த ஆய்வாக மலர இந்நூலுக்கு மேலும் வாய்ப்புள்ளது.

தோட்டுக்காரி கதை

அரிஓம், நன்றாக, குருவே துணை

இவை கன்னங்குளத்திலிருக்கும் இரா. பொன்னையா நாடார் குமாரர் இராம நாடார் படித்து வருகிற தோட்டுக்காரி கதை. நன்றாக நீடூழி காலம் வாழ்க.

சுவாமி துணை

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குருவை வணங்குவது குணம்
கல்வி அழியாத பொருள்.

சிரிராம ஜெயம்

காப்பு

1. புத்திரனைப் பெறுவது பூலோகத்தில் மாதர்கடன்
கடவுளை வணங்குவது காருண்ணியத்தில் பாலர்கடன்
பிள்ளைதான் குற்றம்செய்தால் பொறுப்பது பிதாவின்கடன்
காலதூதர் வரும்பொழுது காப்பது கடவுள்கடனே.

விநாயகர் காப்பு

2. சீரணி செல்வ மோங்கும் தெச்சணாப் பூமி தன்னில்
பாரணி யான முட்டப் பதிதனில் தோட்டுக் காரி
தாரணி தனில்பி றந்த கதைதனை வில்லில் கூற
காரணி யுமையாள் யீன்ற கண்பதி காப்ப தாமே.

விநாயகர்

3. பூரணமாய்த் தோட்டுக் காரிகதை தன்னை
பூதலத்தி லுள்ளமனு வோர்கள் கேட்கக்
காரணமாய் இக்கதையைக் காசினியில் கூற
கந்தனுக்கு மூத்தபிள்ளை வந்துதவ வேணும்.

சரஸ்வதி, முருகர், காளி

வேணும்தமிழ் எந்தனுக்கு தாயேசரசு வதியே
வெள்ளிமலை தனில்வாழும் வள்ளிமண வாளா
ஆணவஞ்சேர் தோட்டுக்காரி அம்மன்கதை கூற
ஆனபத்திர காளியுன தருள்தரவும் வேணும்.

திருமால், இலக்குமி

பத்திரமாய்ப் பாற்கடலில் நித்திரைசெய் கின்ற
பள்ளிகொண்ட மாலும்லட் சுமியும்துணை யாமே
சித்திரமாய்த் தோட்டுக்காரி தன்னுடைய கதையைச்
செந்தமிழோர் முன்னெழுதி வைத்திருந்தா ரில்லை.

எழுதியோர்

இல்லைஇந்தக் காவியமும் இதற்குமுன் னொருவர்
ஏடெழுதி சேர்த்துக்கதை பாடிவைத்தா ரில்லை
வில்லில்கதை தங்கள்தங்கள் விஸ்தாரத்தி னாலே
வேளைக்குவண் ணம்படிப்போர் பெரியோர்கள் ஆனாலும்
பெரியோர்கள் தங்களுட பாதம் ஆதரித்து
என்தலைமேல் கொண்டுபடிக்கின்றேன் தேனார்சரஸ்வதி
திருவருளினாலே.

எழுதியோர் வரலாறு

செந்தமிழை இப்போது சேர்த்துஎழுதி வைத்தோர்
வையகம் புகழும்நல்ல மாடநா டார்குடியில்
வலங்கைக் குலமதிலே வந்த புகழாளர்
நாராயண ரைத்துதித்த இராம சுவாமிநாடார்
அவருடைய புதல்வரென்ற பால்நாடா ரவர்தான்
ஆராய்ந்து அவர்பாடிச் சொன்ன தமிழாமே.

அவையடக்கம்

எண்பேர் எழுத்தையும் இன்னது என்றறியேன்
எட்டு ரெண்டும் அறியாத நாளில்
இக்கதையை எந்தன்னைப் படிக்கவே வைத்தார்
நன்மை யல்லவுங்கள் தன்பெருமை யாலே
செந்தமிழ் தங்கள்பாதம் நாவில் மறவேன்
மணம்சேரும் செந்தமிழைப் பிழையும்சொல்லித் திருத்தி

வையகத்தில் எந்தன்னைப் படிக்கவே வைத்த
அய்யா பொன்னையாநாடார் அருமைகளை மறவேன்
அண்ணாவி பாடிவைத்த பொருளொன்றும் மறவேன்
மற்றுமுள்ள செந்தமிழ்ப் புலவோர்கள் தங்கள்
வாய்த்தபாதம் போற்றிக்கொண்டு ஏற்றதமிழ் சொன்னேன்
புத்தி தெரியாத சிறுபிள்ளை பிழைசெய்தால்
பேணிக் கொண்டு தாய்தகப்பன் பொறுப்பது போலே
அப்படிப்போ லேதமிழோர் ஆராய்ந்த பேர்கள்
அறியாச்சிறி யோன்சொல்லை ஆதரித்துக் கொள்வீர்!
சொல்படிப்பில் உங்கள்பாதம் எப்போதும் சுமப்பேன்
சொல்பிழைகள் தானிருந்தால் பொறுப்பது தான்கடமை
எப்படிப்போல் நானடியேன் சொன்ன தமிழோன்
ஈத்தும்புலிக்கு ஈப்புலி சரியென் றாப்போல்
மாற்றரிய தங்கம் பொன்தனக் கிணையதாக
வையத்தில் பித்தளை தான்சரி என்றாப்போல்
போதச்செருமி வளர்ந்த பூமரத்துக் கொப்பாய்
புல்லுக்கோரை தான்செருமி நிற்பது சரியோ
வேதப்பிரமன் படைத்த பல்லுயிருக் கொப்பாய்
விஸ்த்தாரக் கண்ணாளர் செய்யும் சித்திரம் சரியோ
மானக்கிளை வீட்டில்உளைக்க ஆனைசரி யாமோ
ஆட்டுக்குட்டி சாட்டுப்பொதி தான்சுமக்கு மோதான்
சேனைபரி யானைபடை தான்சரி வதற்கு
சித்தெறும்பைப் பத்தியிட்டு தான்சரிவு தெப்போ
அப்படியே அடியேன்நான் செப்பினசொல் யெல்லாம்
ஆனாலும் செந்தமிழார் ஆதரிக்க வேணும்
மறைவாழி தமிழ்வாழி மானிடவர் வாழி.

காப்பு

9. மங்கையுமை சங்கையுள்ள சங்கரரும் வாழ்க
நாட்டி லுள்ளபேரும் எல்லோரும் வாழ்க
நிறைவுடனே கன்னங்குளம் ஊரதுவும் வாழ்க
நித்தியகலி யாணியாக வாழ்க வேணும்

தெட்சணாப் பூமி யான தென்கன்னிக் குமரி நாட்டில்
மிக்கதோர் விதியி னாலே வெள்ளியர்ப் பாறை தன்னில்
மயில்குழல் தோட்டுக் காரி மடிந்தபின் வந்தவாறு
செப்பமாய்ப் புவியோர் கேட்கச் செப்பியே யுரைக்கின் றேனே.

கதையின் வரலாறு

நாடு

10. நாடான நாடதிலே நல்லபுகழ் நாடதிலே
வாடாத பகவதியாள் வாழும்நல்ல நாடதிலே
நீடுபுக ழாகவேதான் நின்னிலமெல் லாம்புகழும்
மாடுதன்னி லேறுகின்ற மகதேவர் திருவருளால்
கடலாம் திரைமுகமாம் கனகமணி மண்டபமாம்
அடவான கொடிமரமாம் அதியமணி பொற்தேரும்
தென்குமரி நாடதிலே தெச்சணா பூமியிலே
சீரிலங்கும் நன்னாடு சிறப்புடையோன் தன்னாடு

முட்டப்பதி

11. மோருக்கு முத்தளக்கும் முட்டப் பதிதனிலே
பாருக்குள் நெறிநடக்கும் பாரமுட்டப் பதிதனிலே
மணம்சேரும் ராசாக்கள் வாழும்முட்டப் பதிதனிலே
பணமெடுத்துப் பாண்டியாடி பகுதர்க வேயிருப்பார்
வல்லமுட்டப் பதிதனிலே வாழ்ந்திருந்தார் ராசாக்கள்
கொல்ல(ம்)மட்டும் குமரிமட்டும் கோழிமுக டேறிமேயும
கயமதிலே கிடக்கும்முத்து கரையில்வந்து கரைசேரும்
திசைமகிழக் கோட்டையிட்டுச் சிறந்தமுட்டப் பதிதனிலே

கோட்டை அமைவிடம்

12. வட்டாரக் கோட்டையிட்டு வாய்த்தபெரும் படையும்வைத்து
தட்டா ரிரப்பதிலும் சாத்தாவின் கோவில்மட்டும்
வாச்சான் குளமதிலும் வன்னிமுத்து இளமரமும்
தீப்பாஞ்சி சாலையிலும் சிறந்தசுக்காம் பாறையிலும்
வாகையடி கோவில்மட்டும் வளரும்ஒத்த ஆலத்திலும்
தேவர்வந்து தான்மகிழும் செந்தாழை மூடதிலும்
தாழைமரம் பூந்தோப்பும் சாத்தாவின் கோவில்மட்டும்
அளக்குடியும் பொழிக்கரையும் அம்மச்சியா ரிளந்தோப்பும்
கருவலப் பாறையிலும் கண்ணாளர் ஓடையிலும்
பருவான சாட்டுவண்டிப் பாதையிலும் சாலையிலும்
வாக்குராணிப் பாறையிலும் வழிபோற சாலையிலும்
பட்டணத்தார் குடியிருப்பும் பாலாறு ஓடையிலும்
உக்கிரமாய்க் கோட்டையிட்டு உடனேஅர சாண்டிருந்தார்

இருவர் கோட்டை

13. கோட்டையிட்டு அரசாண்டான் கோனாண்டி ராசாவும்
கோனாண்டி ராசாவும் குண்டுக்கண்ணு ராசாவும்
தானாகக் கோட்டையிட்டுத் தக்கமுட்டப் பதிதனிலே
வாளும்மணி முடிசூடி வாய்த்தபெரும் படையும்வைத்து
ஆளுக்கொரு கோட்டையிட்டு அழகுமுட்டப் பதிதனிலே

கோட்டைகளின் சிறப்பு

14. கோட்டைகளாம் வாவிகளாம் குளிக்கும்நீ ராவிகளாம்
வாட்டமில்லாக் கோபுரமாம் வாய்த்தநல்ல் நெடுந்தெருவாம்
கொடிமரமாம் நெடுந்தெருவாம் கொலுகுமணி மேடைகளாம்
அடியார்கள் வந்துதொழும் அரண்மனையும் சாவடியாம்
மாடத்தெரு வீதிகளாம் வாய்த்தநல்ல நெடுந்தெருவாம்
ஆர்க்கமுள்ள தேவியர்கள் அருமையுட னேயிருக்க
தேவிமார் கொலுவிருக்கும் செம்பொன்மணி மேடைகளாம்
ஆணிப்பொன் பொற்கதவும் அழகுமணிக் கோட்டையிலே
மாணிக்கக் கோட்டையிலே வாழ்ந்திருந்தார் ராசாக்கள்.

கோனாண்டி அரசாட்சி

15. பட்டணத்து ராசாக்கள் பகுத்துடனே முடிசூடி
கட்டாக ஒருகுடைக்குள் கருத்தான ராசமன்னன்
கரிபரியும் காலாளும் கம்பமத யானைகளும்
கம்பமத யானைகளும். கருத்துள்ள மந்திரியும்
செருமிநிற்கும் பரிகலமும் சிறந்தமந் திரிமாரும்
வாளும்பரி சைக்காரர் வளைந்துநிற்கும் சேவுகரும்
வாளும்படைக் காலாள்கள் அஞ்சுலச்சம் கோடிபடை
யீட்டிவெடி கேடயங்கள் எண்ணிலச்சம் கோடிபடை
தொட்டியப் பெரும்படையும் தொட்டியரும் ரெட்டியரும்
சட்டையிட்ட பட்டாணிமார் சலுப்பத் துலுக்கர்களும்
கம்பளத் தொட்டியரும் கருநாகப் பேய்ப்படையும்
உம்பளச் சேவுகரும் ஒருகோடி காலாளும்
முன்னூறு தண்டியலும் மூடாங்குக் காரர்களும்
சொல்பெரிய வன்னியரும் சூழவெள்ளைக் காரர்களும்
வில்லருடன் மலையாளம் வேண்டும்வெள்ளைக் காரர்களும்
கொம்பாஞ்சி சேவுகரும் கும்பினிக ளும்நெருங்க
முன்னூறு பாளையமும் முடுக்குநாட்டு வன்னியரும்

பெண்ணார்கள் குரவையிடப் பேரரசன் விற்றிருந்தான்
மீறிவரும் மாற்றானை விரட்டிவெட்டி ஒருகுடைக்குள்
ஆறிலொரு கடமைதண்டி அசையாத மணியும்கெட்டி
கூறிலொன்றும் குறையாமல் குவலயத்தை யரசாண்டிருந்தான்
முட்டப்பதி நாட்டையெல்லாம் முடிசூடி ஒருகுடைக்குள்
(ஆண்டிருந்தார்)
கட்டுடன் கோனாண்டிராசன் கருத்துடனர சாண்டிருந்தான்

தேவியின் வருத்தம்

16. இப்படிப் படைக ளோடே இலங்கும்கோ னாண்டி ராசன்
செப்பமாய்ப் படைக ளோடே சிறந்தர சாளும் நாளில்
மலர்ப்பணித் தேவி யார்க்கு மதலைதான் ஒன்றில் லாமல்
தப்பவர வாகத் தேவி சஞ்ச லித்திருந்தாரே.

முடிசூடுதல்

17. அப்படி மன்னன் அரசாண் டிருக்க
ஆளும் படையோடே வாளும் நெருங்க
நெருங்கும் படைகள் நேரிட்டு நிற்க
நேரியக் காரரும் சீறிட்டு நிற்க
நிற்க வெகுபணிக் காரரொரு புத்தி
நீட்டிய பெருயீட்டிக் காரரொரு பத்தி
பக்கத்தி லேவெடிக் காரரொரு பத்தி
பல்லாக்குத் தண்டியல் காரரொரு பத்தி
சிங்கார வாச்சியம் கோடிஒரு பத்தி
க(ர்)ப்பம் கொடுவந்து நிற்பாரொரு பத்தி
கணக்கதி காரங்கள் பார்ப்பாரொரு பத்தி
கைகட்டிக் கும்பிட்டு நிற்பாரொரு பத்தி
வணக்கமாய்க் கைகட்டி நிற்பாரொரு பத்தி
வாசல் பிரதானி மார்களொரு பத்தி
கோட்டையில் பீரங்கி ஏத்தி இழுப்பார்
கொத்தாளத் தில்படை கூடியே நிற்பார்
நாட்டுக் கரசனும் அஞ்சிப் பதறி
நடுங்கிக் கிடுடென்று சிலபேர்கள் நிற்க
ஆளும் சிலபேர்கள் ஊழியம் செய்ய
அதிலே சிலபேர்கள் அதிகாரம் பண்ண
வாழும் கணக்கு எழுதுவார் சிலபேர்
மணிப்பத்தி ரங்கள் பதிப்பார் சிலபேர்

பதிவான முட்டப் பதிதன்னில் ராசன்
பாவித்துக் கோவித்து ராசனப் போது
அதிகப் புகழான செங்கோலும் ஏந்தி
ஆர்க்கமாய்த் தங்கமுடி யும்த. ரித்து
மூத்தநயி னார்க்குக் கோவிலும் வைத்து
மூன்றுநே ரம்செப பூசை நடத்தி னார்.

கோனாண்டியின் செங்கோல் சிறப்பு

18. வாய்த்தகோ னாண்டி ராசன்
வருசத்தில் ரெண்டுதிரு நாள்ந டத்தி
பார்ப்பார்க ளுக்குத்தானக் கொடைகொ டுத்து
பத்திபெற சாஸ்தி ரங்களும் வைத்து
குடியான பேரை அடித்துக்
கொடுமைசெய் யாமல்கோ னாண்டி ராசன்
சடையாமல் முட்டப்பதி நாடு தன்னில்
சமர்த்தனார் (ராச) மன்னன்இருந் தரசாண் டாரே.

தேவி மந்திரப்பூமாலையின் பிள்ளைஏக்கம் புலம்பல்

19. அப்படியே முட்டப்பதி நாட்டிலந்த் ராசமன்னன்
ஆளும்படை யோடிருக்கும், நாளில் - (ஆளும்படை)
செப்பரிய பட்டணத்தில் தெய்வராசன் பெற்றமகள்
தேவிஎன்னும் மந்திரப்பூ மாலை (தேவி என்னும்)
மாலையிட்டு மணம்செய்து காலம்வெகு காலமதாய்
மங்கையர்க்குச் சந்ததியில் லாமல் (மங்கையர்க்கு)
காலம்வெகு காலமதாய் வாலவயது செல்லுமுன்னே
கைக்குழந்தை பெற்றேனில்லை யென்றாள் (கைக்குழந்தை)
கோலம்நல்ல கோலமிது குழந்தையில்லா திருந்தால்
கொஞ்சமொழி சொல்லிநகைப் பாரே (கொஞ்சமொழி)
ஏசுவார் நகைத்திடுவார் என்தரத்துப் பெண்களென்னை
இத்தனைக்கும் பிரமன்படைத் தானோ (இத்தனைக்கும்)
ஆசைகொண்ட தேசமதை ஆண்டுமுடி சூடுதற்கு
அன்பாய்ஒரு தம்பியும்வேண் டாமோ (அன்பாய்)
வேண்டாமோ என்னுடைய மெல்லியிளந் தோழியரே
வெம்பிமனம் சாம்பிவாடு றேனே (வெம்பி)
ஆண்டபர மேஸ்வரனே அடியாள்தலை தனிலே

அன்றெழுதி வைத்தபடி தானோ (அன்றெழுதி)
வைத்தபடி தானோஎன்னை வையகத்தி லுள்ளபேர்கள்
மலடிஎன் றென்னைநகைப் பாரே (மலடி)
சித்துடையும் தானுடுத்துச் சேரமுன்னெற்றி நரைத்து
சேராமல டானேனே சிவனே (சேராமலடு)
மல்டி மலடிஎன்று மானிடவர் சொல்லும்போது
மாளுதுட லாவிகுன்னு தையோ (மாளுதுட)
முழுதும் வழியிலென்னை முன்னேகண்ட பேர்களெல்லாம்
என்முகத்தில் எதிர்த்துமுழி யாரே (என்முகத்தில்)
அருளும் படிக்கு என்னை இருளி இருளிஎன்று
ஆரும்சொல்லி ஏசை நகைப் பாரே (ஆரும்)
இருளி இருளியென்று என்னையுமே சொல்லும்போது
என்னுடைய சரீரம்வாடு தையோ (என்னுடைய)
பெற்றெடுத்த பிள்ளைதன்னை முத்தமிட்டுப் பால்கொடுத்துஎன்
பேதலிப்புத் தீராதோ சிவனே (என் பேதலிப்பு)
இத்தனைக்கும் நானொருத்தி இளமயில் மலடிருக்க
என்தலையில். பிரமன்படைத் தானோ (என் தலையில்)
படைத்த பிரமனுக்கும் பார்வதி சிவன்தனக்கும்நான்
பாவதோசம் செய்துநடந் தேனோ (நான் பாவ)
அடைத்துக் கதவைப்பூட்டி அந்தரத்தில் இருந்தாலும்
ஆனாலும் மோட்சம்உண்டே பெண்கா (ஆனாலும்)
பெண்களைப்போல் நானும்இந்தப் பூதலத்தி லேயிருந்து
பேதலித் திருந்துவாடு றேனே (பேதலித்)
சேரடி சதங்கைதண்டை கிங்கிணியும் தானசைய்
தெருவதிலே ஓடிவிளை யாட (தெருவதிலே)
விரைவாய் எடுத்தணைத்து வேந்தர்பெரு மான்மகிழ
மெள்ளச்சிரித்துக் கொஞ்சவும்வேண் டாமோ (மெள்ளச்)
தள்ளிநடை யிட்டுப்பிள்ளை மெள்ளவிளை யாடிக்கொண்டு
தாய்மடியில் ஏறவும்வேண் டாமோ (தாய்மடியில்)
பள்ளிலே சென்றிருந்து பிள்ளைகளோ டேபடிக்கும்
பாவனையைக் கண்டுமகி ழேனோ (பாவனையைக்கண்டு)
சந்தியிலே பந்தடிக்க எந்தன்மகன் தன்னைக்கண்டு
தாகம்தெளிந் தென்னாசை தீரானோ (தாகம்தெளிந்)
மதலைச் சிறுமொழியை வைத்துவிளை யாடிக்கொண்டுஎன்
மன்னவரும் கேட்டு மகிழாரோ (என்மன்னவரும்)
குழந்தைச் சிறுமொழியைக் கூடியிருந்த பேர்கள்கேட்டுக்
கோப்புக்கட்டிக் கூடச் சிரியாரோ (கோப்பு)

இப்படியே தான்புலம்பி மந்திரப்பூ மாலைபம்மன்
ஏங்கியே மூச்செறிந்து இதுவிதி தானோவென்றாள்

மந்திரப்பூமாலை புலம்பிக் கூறுதல்

20. என்றுசொல்லித் திருத்தேவி ஏங்கிநெடு மூச்செறிந்து
கன்னிமுகம் தான்வாடி கண்ணீர்தான் பாய்ந்திடவே
புனுகொழுகும் மாதுமின்னாள் போரரசன் திருத்தேவி
அழுதகண்ணீர் ஆறாய்ஓட அவள்புலம்பி ஏதுசொல்வாள்

தன்நிலை கூறிப் புலம்புதல்

21. அம்புபட்ட மானானேன் அலையிலிட்ட துரும்பானேன்
கொம்பிழந்த மந்தியைப்போல் குழந்தையில்லாக் குறையானேன்
ஆடாத செக்கானேன் அரசிழந்த பதியானேன்
ஓடாத தேரானேன் ஊமைகண்ட கனவானேன்
மின்னிழந்த மஞ்சானேன் வேரிழந்த மரமானேன்
காணாத கடலோடிக் கரைசேராக் கப்பலானேன்
வீணாக நானொருத்தி வெறுமலடாய் இருக்குகிறேன்
பயிராக எனக்குஒரு பாலனில்லாக் குறையாலே
கயறற்ற பாய்மரம்போல் கட்டாய்இருந்து வாடுகிறேன்
பெற்றெடுப்பார் தங்கள்முன்னே - (நான்) - வெற்றுடலாய் நிற்கிறேனே
யீன்றெடுப்பார் தங்கள்முன்னே இளமலடாய் நிற்கிறேனே
காய்க்கும் பருவத்திலே - (நான்) - கன்னிமல டானேனே
பூக்கும் பருவத்திலே பூமாறி நிற்கிறேனே

பிள்ளைப்பாசம்

22. திண்ணையிலே மணல்பரத்தி - (நான்) - சிறுதடத்தைப் பாரேனோ
எண்ணைதலை மேலேவைத்து எடுத்துவிளை யாடேனோ
நல்லிதமாய் நானிருந்து - (இந்த) - நாட்டி லிறந்துபோனால்
குடம்சுமந்து கொள்ளிவைக்க - (ஒரு) - குழந்தையொன்று வேண்டாமோ
எள்ளும் புலநீரும் இறைக்கமகன் வேண்டாமோ
முன்கை தனைச்சிரைத்து முகத்துமுடி தானிறக்க
அங்கங் கடல்வரைக்கும் அழுதுவரப் பிள்ளையில்லை
கரிக்கரைக்கும் தேங்காய்தன்னைக் கையேந்தப் பிள்ளையில்லை
கோரிவைக்கும் தண்ணீரைக் குறையாக்கப் பிள்ளையில்லை

தூத்துபபோடும் முத்தம்தன்னைத் தூளாக்கப் பிள்ளையில்லை
சிறுகலத்தில் சோறுமிட்டுச் சீனியிட்டு முன்பில்வைத்து
உண்(ணு)மகனே என்றுசொல்லி ஊட்டேனோ மடியில்வைத்து
பள்ளிக்கு வைத்தெழுத (ஒரு) பாலகன்தான் வேண்டாமோ
தெற்குத் தெருவதிலே செல்லமகன் கலியாணம்
ஒக்கரையும் பிள்ளையுடன் உடனேநின்று பாரேனோ
வேலைக்கொச்சை விழிமடவார் மெல்லியோர்கள்
எனைப்பார்த்து
பால்கொச்சை வீசுதென்று பகராரோ ஒருவார்த்தை

மலடி என வருந்துதல்

23. காலம்நல்ல மழைகள்பெய்து கலப்பையோடு கொழுவெடுத்து
வீசும் பதந்தனிலே விதைக்கவரும் உழவரெல்லாம்
எனைஎதிரே கண்டவர்கள் இவள்மலடி என்பாரே
நாலுமரத் தோப்பதிலே நடுமரம்போல் நானொருத்தி
நாலுமரம் காய்த்திருக்க நடுமரம் மலடாச்சே
பூக்கும் பருவத்திலே பூமாறி இருக்கலாச்சே
காய்க்கும் பருவத்திலே கன்னிமல டானேனே

என்ன பாவம் செய்தேன் என வருந்துதல்

24. மூலையிலே நெல்லிருக்க முழுச்சாவி கலந்தேனோ
கொத்தைக் குறைத்தேனோ குறைமரக்கால் அளந்தேனோ
பிச்சைக்கு வந்தபேரை (நான்) பின்னேவரச் சொன்னேனோ
முன்செய்த தீவினையோ முதல்செய்த பொல்லாங்கோ
தாலிகட்டும் வேளையிலே சனியன்வந்து தொடர்ந்தானோ
மாலையிடும் வேளையிலே மாற்றான்வந்து பிடித்தானோ
தொட்டுவலக் கைபிடித்துச் சுற்றிவந்த தோசமிதோ
அனைவோரும் எனைப்பார்த்து அறப்பழித்துப் பேசுவாரே
மந்திரப்பூ மாலையம்மன் மன்னவர்முன் **விழுந்தழுதாள்**
தந்திரஞ்சேர் மன்னவர்முன் தானழுதாள் திருத்தேவி

மன்னன் தத்தெடுத்துத் தருவதாகக் கூறித் தேற்றுதல்

25. அழுதகண்ணீர் தனைத்துடைத்து அரசபெரு மாளுரைப்பார்
புனுகொழுகும் குழலாளே பொன்னரிய தேவியரே
பார்த்தாலும் குறையாது பன்னிரெண்டால் ஏறாது
நம்முடைய கொல்லையிலே நல்லமுட்டப் பதிதனிலே

உனக்கேற்ற மதலைகண்டால் உடனேவந்து சொல்லுமென்றார்
மனக்கவலை வையாதே வாய்த்ததிருத் தேவியரே
தேடியதோர் பொன்கொடுத்து தெப்பெடுத்துத் தாரேனென்றார்
வாரிப் பணம்கொடுத்து வளர்க்கப்பிள்ளை தாரேனென்றார்

மந்திரப்பூமாலையின் மறுத்துரை

26. கோடிப்பணம் தான்கொடுத்துக் கொண்டுபிள்ளை
தாரேனென்றார்
மன்னவர்தன் சொல்கேட்டு மறுத்துரைப்பாள் தேவியரும்
மன்னவரே என்னமொழி செப்பினீர்காண் என்னோடே
தேடினபொன் கொடுத்தாலும் தெப்பெடுத்த பிள்ளையென்பார்
வாரிப்பணம் கொடுத்தாலும் வளர்த்தபிள்ளை என்பாரே
கோடிப்பணம் கொடுத்தாலும் (அது) கொண்டபிள்ளை
என்பார்கள்
கொண்டுமோரு கடைவார்களோ கொத்துக்கோட்டை
மச்சேறுமோ
கொத்துக்குடி நம்மளுக்குத் துணையாமோ காவலரே
தெப்பெடுத்த பிள்ளையது செத்தக்கரைப் பல்லியல்லோ
பணந்தேடிக் குமித்துவைத்தால் பச்சத்துடன் இருக்குமது
மனப்படியாய்ப் பறைந்ததுண்டால் வளராதே நம்மோட
சீரிப் பறைந்ததுண்டால் - (அது) - சேராதே நம்மோடே
பொன்னைமெத்தப் படைத்தாலும் பொருளைமெத்தப்
படைத்தாலும்
காதவழி போனதுண்டால் கால்வாரிக் கெட்டிடுமோ
தூரவழி போனதுண்டால் தோள்வாரிக் கெட்டிடுமோ
அன்னசுத்தம் இருந்தாலும் ஆயிரம்பேர் இருந்தாலும்
உம்மையற்ற பிற்காலம் ஒருவருண்டோ எனக்குதவி
வாழ்ந்தகாலம் வாழ்ந்ததுண்டால் மனுசர்பல பேர்களுண்டு
தாழ்ந்தகாலம் தாழ்ந்ததுண்டால் (ஒரு) சந்ததிதான்
வேண்டாமோ
வேண்டாமோ என்கணவா (இந்த) மேதினியோர்
தங்கள்முன்னே
என்றுசொல்லி மாதுமின்னாள் ஏதுசொல்வாள் மன்னருடன்

தவஞ்செய்யத் தேவி புறப்படுதல்

வீறாக ஆண்டிருக்கும் விளங்குமுடி ராசமன்னா
போறேன்நான் ஊருவழி பிள்ளைதவம் செய்வதற்கு
களஞ்சியத்தில் பணமெடுத்துக் காவலரே தாருமென்றாள்

மன்னன் தடுத்து நிறுத்துதல்

28. சொல்லும்மொழி தனைக்கேட்டுச் சொல்பெரிய ராசமன்னன்
நல்லதுகாண் தேவியரே நாட்டுவழி போவானேன்
நாட்டுவழி போவதற்கு நாதன்விதிப் படிதானோ
ஊருவழி நீபோக (உன்) ஊழிவிதிப் படிதானோ
கூட்டுக்கிளி போலிருந்தோம் கொடியிடையே இருபேரும்
காட்டுவழி நீபோகக் கருமவிதிப் படிதானோ
போனவழி நீயறியாய் பொழுதடையும் திசையறியாய்
நெல்காயும் புறமறியாய் நீண்டகரை போகறியாய்
தென்வடக்கு நேர்கிழக்குத் திசைகள்நாலும் நீயறியாய்
தலம்விட்டுப் போகவேண்டாம் தவசிருக்க வேணுமென்றால்
நிலமது நிலமைக்குள்ளே நிச்சயம்செய் கின்றாரே

மந்திரப்பூமாலை தானஞ் செய்தல்

29. அந்தமொழி தன்னைக்கேட்டுத் திருத்தேவி யாரும்
அன்னதான மதுசொர்ணக் கொடைகள் கொடுக்க
கட்டிக் கருவலம் பெட்டகம்தன்னை எடுத்து
காணிக்கை போடவே மாணிக்கப்பொன்னை யெடுத்தாள்
எடுத்தாளே பொன்னும் பணங்களும்சேர அவளும்
ஏந்திளையா ளந்த மந்திரப்பூ மாலையம்மை
மந்திரக் கன்னியுட னவள்சுந்தரக் கன்னி
மங்கைபிரா மணக்கன்னி வடுவச்சி யோடே
சுந்தர நாச்சியுட னவள்ஆவுட நாச்சி
சூழவே தோழிமார் ஏழுபெண்களவர் கூட
வாழும் பதியான முட்டப்பதியில் அவள்தான்
மங்கையர் தவசிசெய்து வணங்கியேதான மிட்டாள்
பணமெடுத்துப் பலபேர்க்கும் - (அம்மை) - பார்ப்பார்க்குத் தானமிட்டாள்
குணமுடைய மாதுமின்னாள் கோனாண்டி ராசன்தேவி
ஆண்டிபர தேசியர்க்கும் அந்தணர்க்கும் நாவலர்க்கும்
வேண்டியபொன் தானமிட்டாள் வேந்தனுட திருத்தேவி
இறப்பவர்க்கும் பிறப்பவர்க்கும் எல்லோர்க்கும் ஒருப்போலே
பார்ப்பார்க்குத் தானமிட்டாள் - (ஒரு) - பாலன்ஒன்று வேணுமென்று
காதத்துக்குக் காதவழி கல்மடங்கள் கட்டிவைத்தாள்
தூரத்துக்குத் தூரவழி சுமைதாங்கி நாட்டிவைத்தாள்

நீராவி வெட்டிவைத்தாள் நினந்தகல்லும் கட்டிவைத்தாள்
கரையாளர் தங்களுக்குக் கலப்பைகொழு தானமிட்டாள்
தண்ணீர்ப்பந்தல் போடுவாளாம் தவனக்கஞ்சி காய்ச்சிவைத்தாள்
பாதைவழி போறவர்க்குப் பந்தலிட்டாள் வழிதனிலே
பந்தலிட்டாள் வழிதனிலே பவளக்கால் தானிறுத்தி
வழிதனிலே பந்தலிட்டாள் மடப்பள்ளிகள் தான்முடித்தாள்
அழிந்தகோவில் கட்டிவைத்தாள் அரனார்க்கும் பூசைசெய்தாள்
நந்தா வனங்கள்வைத்தாள் நடசாலை அவள்முடித்தாள்
சந்ததிக்குத் தவசிருந்து தானக்கொடை தான்கொடுத்தாள்
பூங்கா வனங்கள்வைத்தாள் புண்ணியதா னங்கொடுத்தாள்
பாங்கான வேதியர்க்கும் பால்பசுவும் தான்கொடுத்தாள்
கோதானம் மாதானம் கொடுத்தாளே திருத்தேவி
கோதான மும்கொடுத்தாள் (ஒரு) குழந்தையொன்று
வேணுமென்று
மாதான மும்கொடுத்தாள் மதலையொன்று வேணுமென்று.

வழிபடுதல்

30. தளிர்த்தமரச் சோலைகளைச் சன்னதிஎன் றடிதொழுதாள்
குளிர்ந்தமரச் சோலைகளைக் கோவிலென்று கைதொழுதாள்
தென்சிவந்த நாவலய்யாக்கும் திருவனந்தப் பெருமாளுக்கும்
பொன்னுமுடி சமைத்துவைத்தால் பிள்ளைதரு வாரெனவே
வஞ்சமற்ற வேலவர்க்கும் வானுமலை அய்யனுக்கும்
அஞ்சிவர்ண முடிசமைத்து ஆபரணம் சாத்திவைத்தாள்
அதனாலே ஒருபலனும் ஆயிழையும் காணாமல்
இதுவிதி தானோவென்று இருந்தாள்முட்டப் பதிதனிலே.

விதிப்பயனை நினைந்து வருந்துதல்

31. மதியே சடைத்து முகம்கோடி வாடி, இருந்து அழுதாலும்
விதிதான் நமக்கு வருமொழிய வீணில் அழுதால் வருவதுண்டோ
கதியே நமக்குப் பிரமனன்று கட்டாய் தலையில் எழுதினானோ
கதிதான் நமக்கு எனச்சடைத்துக் கிலேசத் துடனே இருந்தாளே.

இருந்து மனமும் மிகச்சடைத்து ஏற்ற முட்டப் பதிதனிலே
திருந்துபுகழ் மாதுமின்னாள் திருத்தேவி யானவள்தான்
வருந்தி மெத்த வேசடைத்து மந்தி ரப்பூ மாலையம்மன்
அருந்ததி சேர்விழி மடவார் அறச் சடைத்து முகம்வாடி

குறமகள் வரவு

32. அறச் சடைத்து முகம்வாடி ஆங்கி ருக்கும் வேளையிலே
குறக் குலத்தில் ஒருமடந்தை குறிகள் சொல்லிப் பிழைக்கவென்று
ஆறு வடிந்தோட அடவான தடவரையில்
ஏறுவாடி மலைதனிலே இருந்தமலங் குறத்தியவள்
மலைதனிலே வெகுநாளாய் மழைமாரி பொழியாமல்
சிலவேடக் குறவருக்குத் தின்பொசிப்பம் கிடையாமல்
காட்டுவள்ளிக் கிழங்குடனே கனிபழமும் கிடையாமல்
நாட்டுவளக் குறிகள்சொல்லி நாம்பிழைப்போ மென்றுசொல்லி
வருத்திமெத்த வேசடைத்து மலைவேடன் தன்மகள்தான்
இருந்தமலை விட்டிழுகி எழுந்துமலங் குறத்தியவள்
குறத்திகையால் நாருவெட்டிக் குடுக்கைவட்டச் சிரட்டையுடன்
மறத்தியைப்போல் உடையுடுத்து வலதுகையில் கொப்பிடுக்கி
கொப்பிடுக்கிக் குழையிடுக்கிக் குறப்பெட்டியும் தலையில்வைத்து
செப்பனையாள் செங்குறத்தி திசைநோக்கி வழிநடந்தாள்.

குறமகள் முட்டப்பதியை அடைதல்

33. நடந்துஅவள் சடுதியில் நல்லவட்டப் பாறைவிட்டு
நாங்குமலைச் சோலைகளும் நல்லசுனை வாவிவிட்டு
கடந்து நடந்தவளும் கானவன மும்கடந்து
கட்டுடனே ஏறுவாடி ஊரும்சந்தை யுங்கடந்து
சந்தையும்மூத் தாவழியும் தூனுமே மிகக்கடந்து
சித்திரத்து டன்நடந்து விஸ்தார மலங்குறத்தி
கைகிலுக்கை வட்டியுடன் கையில்பிள்ளை தாமெடுத்து
காரிகையும் பிள்ளையுடன் கனகப்பள்ளி வாசல்விட்டு
தெற்குவள்ளி ஊரும்விட்டுச் சீக்கிரத்தில் யவளும்
தென்குமரி நாடதிலே சீக்கிரத்தில் போகவென்று
பழையபதி தான்கடந்து பளகைநெல் லூரும்விட்டு
பத்திபெற வேயவளும் பெற்றபிள்ளை தான்நடத்தி
சாலைவெளி யேநடந்து தத்திரம் தத்திரமென்று
தாகத்துட னேகுறத்தி தாக்குடனே விரைவாக
ஓலைதோடும் காதுடனே உடலும் மிகக்குலுங்க
உற்றகுறப் பெண்ணவளும் வழிநடந்து சடுதியிலே
சீரணியும் பூங்குழலாள் திருத்தத்துட னேநடந்து
சிந்தைமெய்த்துச் சந்தோசமாய்ச் சிறப்புடனே தானவளும்
காரணிக் கருங்குளமும் காரிவாரி ஊரும்விட்டுக்

காப்பிலங்க வேகுறத்தி பால்குளம் மிகக்கடந்து
ஓடிவழி தான்நடந்து ஒத்தப்பனைக் கோட்டையிட்டு
உன்னிதமாய் உக்கிறாணிப் பாறையது வுங்கடந்து
நாட்டுவழி தான்கடந்து நடசாலை வழியாக
நாட்டத்துட னேதளவாய் வாய்த்தமட மும்கடந்து
தீப்பாஞ்சி யுங்கடந்து தெற்குஒற்றை ஆலும்விட்டு
சீக்கிரம் நடந்து முட்டப்பதியில் சிறப்பாய் வந்தாளே.

குறமகளைக் கோட்டைக்குள் அழைத்துச்செல்லல்

34. வந்தாள் குறத்தி யொருநினவில் வளமாம் யொருநீ ராவியிலே
தேன்தினை மாவும் மலைக்கிழங்கும் தின்றே யவளும் பசியாறி
கொந்தார்க் குழலாள் இருக்கையிலே கோட்டைக்கு அகத்தே இருந்த
வந்தே அவளை மிகக்கூட்டி வசமாய்க் கோட்டைக்குள் போனாரே

கோனாண்டி குறியின் திறத்தை வினவுதல்

35. போனாள் குறத்தியும் மானார் இருக்கும்தவத்தில்
பொன்னான மந்திரப் பூமாலை யம்மன்முன்பில்
தேனாரும் கோனாண்டி ராசாவும் சந்தோசமாக
சிந்தை மகிழ்ந்தவர் வந்தகுறத்தியைக் கண்டார்
கண்டுமகிழ்ந்து கலிதீர்ந்து நம்மளுக் கென்று
கைப்பிடித்துக்குறி மெய்யாய் உரைப்பாயோ வென்றார்.

குறமகள் குறவர்தம் சிறப்பைக் கூறுதல்

36. என்ற பொழுதே உலகராசா ளவரோடே
ஏது சொல்வாள் மலையரசன் மகள்தானும்
காட்டுக்கிழங்கும் தினையும் பொசித்து இருப்போம்
கன்னிமார் வந்தென்மேல் சன்னத மாகுதுயிப்போ
வீட்டுவழிசென்று பிச்சை யிரக்கவே மாட்டோம்
மெய்யல்லாமல் குறிபொய் யுரைப்பது மில்லை
நாட்டுக்குறவர்தம் வீட்டிலே தண்ணீர் குடியோம்
நன்றாய் மலைக்கன்னி மாருக்குப் பூசை யிடுவோம்
காட்டுவிருதுடன் காக்காய் இறைச்சியும் கூட்டோம்
கைப்பிடித்துக்குறி மெய்யாகச் சொல்லுவோ மென்றாள்
அந்தமொழி கேட்டுச் சந்தோசமாக மகிழ்ந்து
அட்டவணைக்குநீ கிட்டவா வென்றழைத் தாரே.

குறிசொல்லத் தொடங்குதல்

37. அழைத்திடத் தேவிகிட்ட அருகிலே வந்திருந்து
வளைத்தமிழ் தேவி யார்தம் வலதுகை தொட்டு நன்றாய்
முழுதுங்கை வரையும் பார்த்து முகக்குறி தனையும் நோக்கி
கழுத்தினில் பலனும் பார்த்துக் கைப்பிடித் துரைக்கின் றாளே
தினத்திந்தினா தினத்திந்தினா தினத்திந்தினா தினனா
தினனாதிந் தினாதிநன்னா தினத்திந்தினா தினனா
காருலாவும் சோலைமேவும் கன்னிமலங் குறத்தி
கருத்துடனே தேவியார்தம் கைப்பிடித்துச் சொல்வார்.

இறைவன் அடிதொழுதல்

38. அத்திமுக நயினார்க்கு வித்தளந்து வைத்தாள்
அடைக்காயும் வெற்றிலையும் அவள்வாங்கி வைத்தாள்
முத்துநிற நாழிவைத்து திருவிளக்கும் ஏற்றி
முக்கண்ணனை அடிதொழுது வித்தெடுத்துப் பார்த்தாள்.

குறிசொல்லத் தெய்வங்களை அழைத்தல்

39. இந்திரனே வேலவனே வந்துகுறி சொல்லும்
என்றுமலங் கன்னிகளே இப்போவந்து சொல்லும்
வந்துசொல்லும் செந்தூரில் வடிவேல்பெரு மாளே
வள்ளிதன்னை மாலையிட்ட வள்ளிமண வாளா
மலையிலுள்ள தேவதையே மாடன்தம்பி ரானே
மந்திரத்தில் அடங்காத தந்திரமூர்த் திகளே
முத்தழகா கருப்பழகா முழுதும்முத்து ராசா
முன்னேவந்து சொல்லிவா நல்லதம்பி மாடா
திருநீற்றைத் தானெடுத்து நெற்றியிலே பூசித்
தெய்வங்களை அடிதொழுது பூவெடுத்துப் போட்டாள்

குறி சொல்லுதல்

40. கையதிலே பிரம்பெடுத்து உடலைச்சற்றே குலுக்கி
காப்புப்பச்சை வளையலது கலகலெனக் குலுங்க
அம்மையேநீ பதறாதே உண்மைசொல்வேன் கேளு
ஆண்டமலை தெய்வம்வந்து பூண்டுதடி குறியில்
துலங்குதடி துலங்குதடி குறிமுகம்தான் தாயே
சொல்லவேண்டாம் என்றல்லவோ திசக்குதடி குறியைத்
தியக்கினாலும் மயக்கினாலும் திருத்திச்சொல்லித் தாரேன்

குறத்தி தன் பெருமையைக் கூறுதல்

41. தேன்மொழியே மந்திரப்பூ மணிமாலை தாயே
இத்தனைநாள் என்குறிதான் பொய்த்ததுவு மில்லை
யீழம்மலை யாளம்மட்டும் சென்றுகுறி சொன்னேன்
மனதிலே நீகேட்ட காரியங்க ளெல்லாம்
வகைவகையாய் நான்உனக்கு வகுத்துரைப்பேன் கேளு
காலிகன்று பொன்னுடமை போனதுவும் இல்லை
கெட்டுப்பெட்டிச் சேலைதுகில் போனதுவும் இல்லை
காசிதன்னில் கள்ளர்வந்து கொள்ளையாட வில்லை
ஆளடிமைப் பள்ளுப்பறை சேதப்பட வில்லை
அம்மையுன் மனதிலே நினைத்ததைக்கே ளம்மா
வேறேஒரு குற்றம்குறை யில்லையடி தாயே
மெய்யாகச் சொல்லுகிறேன் வேல்முருக னாணை
கையதிலே கண்டகுறி லட்சணத்தைக் கேளு
காரிகையே மந்திரப்பூ மணிமாலை தாயே
வாடியம்மா யிப்போது உன்தனக்குக் குறியை
மலைக்கன்னிமார் இப்போவந்து துவக்குகிறார் குறியை
தாடியம்மா வலதுகையைத் தந்துகுறி கேளு

தேவியின் குறை கூறுதல்

42. தவமான ஒருகுழந்தை தானுமில்லாக் குறைதான்
பொன்பணங்கள் இல்லையென்று உனக்குக்குறை யில்லை
பிள்ளையில்லா மனச்சடைவு உண்டுமடி தாயே
கண்டகண்ட கோவிலெல்லாம் சென்றுதவ மிருந்தாய்
கருவூலத்துப் பொன்னையெல்லாம் கைவசமாய் அளித்தாய்
அளித்ததினால் ஒருபலனும் அம்மைகண்டா யில்லை
விளக்கிருக்கத் தீத்தேடித் திரிந்தவரைப் போலே
வெகுதூரம் நீநடந்து சடைத்துவிட்டாய் தாயே.

பிள்ளைப்பேறு பற்றிக் கூறுதல்

43. கையதிலே புண்ணிருக்கக் கண்ணாடிவைத்துப் பார்த்ததுபோல்
கண்கண்ட கோவிலெல்லாம் சென்றுதவ மிருந்தாய்
உள்ளடிக்குள் பிள்ளைப்பலன் உண்டுமடி தாயே
உடையவனார் ஆணைப்படி உண்மைசொன்னேன் தாயே
மூத்தநயி னார்தனக்குத் திருக்கோவில் முடித்து
முழுப்பூசை யும்நடத்தித் திருநாளும் செய்தால்

ஏத்தரிய உலகிலுள்ளோர் எல்லோரும் காண
உனதுகையில் குழந்தையொன்று யீன்றெடுப்பாய் தாயே
பிறப்பதுவும் உந்தனக்குப் பெண்பிள்ளைதான் பிறக்கும்
பேரும்தோட்டுக் காரிஎன்று பேரிடவும் வேணும்

பிள்ளை வரலாறு கூறுதல்

44. பிறந்தாலும் உந்தனுக்கு முழுதும்பிள்ளை யில்லை
அருமையுள்ள தேவியரே உரிமையுடன் கேளும்
அன்றுராவு முகூர்த்தத்திலே அரசனுட தேவி
அடுத்தகோட்டை தனிலிருக்கும் அரசர்குலத் தேவி
குண்டுக்கண்ணு ராசனுக்குக் குழந்தையொன்று பிறக்கும்
குமரப்ப ர்ரசனென்று அவர்வளரும் நாளில்
இருபேரும் சரிவயதாய் இவர்வளரும் நாளில்
இணக்கமுடன் குண்டுக்கண்ணு ராசன்மகன் தனக்கு
பன்னிரெண்டு வயததிலே தோட்டுக்காரி தன்னை
பாரக்கும ரப்பனுக்குப் பெண்கேட்டு வருவார்
மாட்டோமென்று நீங்களப்போ வம்புசெய்வ தாலே
உபாயமிட்டு வேட்டையாடி எடுத்துக்கொண்டு போவார்
மகளாலே முட்டப்பதி அழியுமடி தாயே
இருபேரும் வேள்வியிலே இறந்துபிறப் பார்கள்
என்றுசொல்லி மலங்குறத்தி (அன்று) குறிதுலக்கி னாளே

கோவில் கட்டுதல்

45. வண்ணமுள்ள மாதுமின்னாள் மலங்குறத்தி தனக்கு
அன்னசொர்ண முங்கொடுத்து அனுப்பிவிட்டாள் சடுதியிலே
மலங்குறத்தி போனபின்பு வடிவன்கோ னாண்டிராசன்
கண்ணாளர் தனைவருத்திக் கனகமலை மரங்கள்வெட்டி
வெட்டிநன்றாய் பணிப்படுத்தி விதவிதமாய் வேலைசெய்து
மூத்தநயி னார்தனக்கு முகித்தாரே திருக்கோவில்
கோவில்கட்டி ராசமன்னன் குருபூசையும் தான்நடத்தி
ஆவலுடன் கோவிலிலே அரசனுட திருத்தேவி
வாசமுடன் திருப்பதியில் வந்துவயன மிருந்தாரே.

மந்திரப்பூமாலை விரதமிருத்தல்

46. வந்து தேவி வயன மிருக்கவே
மாத்து டுத்தவள் தீர்த்தமும் ஆடியே
தீர்த்த மாடித் திருநீறும் பூசியே

அன்னந் தண்ணீ ரும்பொசி யாமலே
ஒன்றும் பொசியாம லொருசந்தி யாகவே
பூவும் போட்டு அடிதொழு தாளம்மை
தொழுது இருந்தாளே மூன்று பொழுதாக
சொல் பெரிய திருத்தேவி யாரும்தான்
பழுதில் லாமலே முட்டப்ப தியிலே
பாலனுக் குவந்து வயன மிருந்தாரே.
பாலனுக்குத் தவசிபண்ணிப் பரமசிவம் தனைத்தொழுது
ஆலமுண்டோன் திருப்பாதத்தை அடிபணிந்து தானிருந்தார்.

கனாக் காணுதல்

47. எண்ணமெல்லாம் எண்ணிஎண்ணி இருந்தவளும் தான்புலம்பி
கண்துயிலும் மாதுமின்னாள் கனவுகண்டாள் திருத்தேவி
மைவிழியாள் கண்ணதிலே (ஒரு) மாயக்கனா கண்டனளாம்
தெய்வலோகத்துப் பொற்கிளிதான் திருமடியில் வரவும்கண்டாள்
மந்திரவாள் உறைகழற்றி மடிதனிலே வைக்கக்கண்டாள்
பாம்புவந்து மடிஏறிப் படம்விரித்து ஆடக்கண்டாள்
வேட்டாளி கூடுதெத்தி விரைவாய்க்குஞ்சு பொரிக்கக்கண்டாள்
கட்டுவெத்திலை கொண்டுவந்து கைதனிலே
கொடுக்கக்கண்டாள்.

கனவினை மன்னனிடம் உரைத்தல்

48. அன்றுராவு விடிந்தபின் அரசனுட முன்பில்வந்து
வந்துபணிந் தடிதொழுது வகைவகையாய்த் தேவியரும்
கண்டநல்ல கனவையெல்லாம் காவலர்க்குச் சொல்லுவாளாம்
இன்றுகண்ட சொப்பனத்தை என்கணவா சொல்லக்கேளும்
மந்திரவாள் தரவும்கண்டேன் வாங்கிவைக்க முறியக்கண்டேன்
வேட்டாளி கூடுதெத்தி விரைவாய்க்குஞ்சு பொரிக்கக்கண்டேன்
பாம்புவர நானுங்கண்டேன் படம்விரித்து ஆடக்கண்டேன்
பொற்கிளிதான் வரவும்கண்டேன் பொன்னரிய மேடையிலே
பைங்கிளியை எடுக்கையிலே பறந்தோடிப் போகக்கண்டேன்.

மன்னனும் தேவியும் மகிழ்ந்திருத்தல்

49. அந்தமொழி தனைக்கேட்டு அரசன்மனத் தில்அடக்கி
வந்துசொன்ன கனவதுதான் (இது) மாயக்கனா வென்றறிந்து
சந்தோசமாய்த் தான்சிரித்துத் தேவியர்க்கு ஏதுசொல்வார்
இந்தக்கனா கண்டபோது இனிநமக்குக் குறைகளில்லை

பொன்னரிய தேவியரே பிள்ளையுண்டு நமக்கினிமேல்
மன்னவரும் தேவியரும் மகிழ்ந்திருந்தார் கோவிலிலே.

தேவி கருவுறுதல்

50. கோவில் புக்கியே இருபேரும் கொஞ்சி மருவியே இருக்கையிலே
ஆவி மருவியே இருபேரும் அரைத்த சந்தனம் பூசிக்கொண்டு
பூசிப் புனைந்தவர் இருபேரும் பொன்னும் மாளிகைக் குள்ளர்க
சாந்து புனுகது மிகவணிந்து தானும் மருவியே இருபேரும்
பாராட் டுங்குழல் இளமடவார் மன்ன னுடனே தேவியரும்
தாரா டும்பாம் பதுபோலத் தானும் மருவியே பாராட்ட
அன்பு உருக மனம்உருக ஆசை வெள்ளங் கரைபுரள
இன்பு உருக மனம்உருக யீருட லதுவும் ஒருடலாய்
மூலா சர தத்தோடே மேவி யணைகிற வேளையிலே
சாலா யுதிரம் தான்திரண்டு தானே பிள்ளை உருவளர
தனித்த கருவுக் குழிதனிலே பரம சிவரின் திருவருளால்
கடுகாகி நல்ல மிளகாகி அரநெல்லின் அளவின் காயாகி
மாங்காய் தேங்காய் விளங்காய் போலேவளரு தல்லோ
கர்ப்பமது
உதிரம் முற்றி உருவளர்ந்து உடனே திங்களொன் றானதுவே.

கரு வளருதல்

51. ஒன்றான திங்களிலே உருவளர குழந்தையது
இரண்டான•திங்களிலே நல்லஆலம் பழம்போலே
மூன்றான திங்களிலே முத்துப்போலே உருவளர
சோலை இளங்கிளி மொழியாட்கு தோகை நல்ல மயிலாட்கு
நாலான திங்களிலே நல்லகர்ப்பம் உருவளர
வஞ்சியிடை தேவியர்க்கு வயிறதிலே தரித்தகர்ப்பம்
அஞ்சான திங்களிலே அரைவயிறு சூலானாள்
அத்தனுட திருவருளால் ஆயிழையாள் தன்தனக்கு
மெத்த நல்ல வியாகுலமாய் வேண்டும் பண்டம் தேடுவாளாம்
கோவில்கால் மேலிருந்து கோனாண்டி ராசன்தேவி
காவி மண்ணும் பூந்தோடும் கண்ட பண்டம் தேடுவாளாம்
தேடுவாளாம் சிறுபுளிப்பு தேங்காய்மாங் காயுடனே
ஆறான திங்களிலே அரனார்க்கும் பொங்கலிட்டாள்
அரனார்க்கும் பொங்கலிட்டாள் அயனக்கொடை
தான்கொடுத்தாள்

உடல் வருத்தம்

52. ஏழான திங்களிலே இடையுதல்லோ மேனியெல்லாம்
சாந்தணியும் மேனியெல்லாம் தையல்நல்லாள் தேவியர்க்கு
மருத்துவமாய் இருந்தபெண்கள் வியவஞ்சோறு தான்கொடுத்தார்
எட்டான திங்களிலே கட்டுமுட்டாய் வருகுதென்பாள்
கட்டுமுட்டாய் வருகுதென்பாள் (என்) காலும்மண்ணைப் புரட்டுதென்பாள்
இருந்தாப்போல் இருந்தேனில்லை இளமடலாய் இருந்தேனில்லை
பெற்றெடுப்பார் தங்கள்முன்னே வெற்றுடலாய் இருந்தேனில்லை
ஈன்றெடுப்பார் தங்கள்முன்னே இளமலடாய் இருந்தேனில்லை
சாகவென்றோ தவசிருந்து (இந்தச்) சந்ததியை உண்டானேன்
போகுதடி என்னுயிர்தான் பிழைப்பதற்கு ஏதுமில்லை
ஒன்பதான திங்களிலே உகந்துகர்ப்பம் துடித்திடுமாம்.

ஈத்துப்புரை கட்டுதல்

53. மெத்தஉடல் வருத்தம்தன்னை மெய்த்தளர்ந்து கண்டுமன்னன்
இஸ்டத்துட னேயவட்கு (நல்ல) ஈத்துப்புரை கட்டவென்று
கட்டி முடிக்கவென்று (தெய்வக்) கம்மாளரை வரவழைத்து
அழைத்துச் சடுதியிலே அழகான மரம்தரித்து
தரித்துப் பணிப்படுத்து (சட்டமாய்) ஈத்துப்புரை தான்முடித்தார்
ஈத்துப் புரைதனிலே (ஏந்திழை) கோனாண்டி ராசன்தேவி
பார்ப்பார்க்குத் தானமிட்டுப் பாலும்பொங்கிக் குரவையிட்டு
திருத்தப்புகழ் தேவியர்க்குத் திங்கள்பத்தும் திகைந்தபோது
காப்பாய்த் திருவுளமே (என்னைக்) காட்டிக்கொடாதேஎன் தேவதையே
என்று புலம்பியவள் ஈத்துப்புரைக்குள் போனாளே.

பேறுகாலம்

54. ஈத்துப் புரைக்குள் தான்புகுந்து
எடுத்த குடத்தில் நீராடி
வாய்த்த ஏழு தோழியர்கள்
வலமும் இடமும் சூழ்ந்துநிற்க
சாய்த்துப் பிடித்துத் தலைதங்கித்
திடமாய்ச் சிலபேர் மனம்தேற்றி
வாய்த்த வயிறு முன்னோக
வசமாய் மருத்துவத்தை அழைப்போமென்றார்.

ஒட்டனை அழைத்தல்

55. திருத்தமாய்த் தேவி யார்க்குத் திங்கள்தான் திகைந்த போது
சிரசினில் எழுதி வைத்த தெய்வமே துணையே என்று
கருதியே ஒட்டன் தன்னைக் காவலர் வரவ ழைத்து
கண்ணறிந்த மருத்து வத்தைக் கடுகவே (அழைத்து) வாவென்
றாரே

மருத்துவத்தை அழைத்துவர ஒட்டனை அனுப்புதல்

56. சுந்தரஞ்சேர் ஒட்டாநீ சொல்லுமொழி தனைக்கேட்டு
எத்தனைபேர் வையகத்தில் இருந்தார்க ளானாலும்
புத்தியுள்ள மருத்துவத்தைப் போய்அழைத்து வாருமென்றார்
தீட்டுபுகழ் மருத்துவத்தைச் சென்றழைத்து வாருமென்றார்
வாட்டமற்ற மருத்துவத்தை வரவழைத்து வாருமென்றார்
கண்ணறிந்த மருத்துவத்தைக் கைகூட்டி வாருமென்றார்.

ஒட்டன் கடந்து சென்ற வழி

57. என்றபோது ஒட்ட னுந்தான் ஏற்றமுட்டப் பதியும் விட்டு
முட்டப்பதி யுங்க டந்து மூணுமுக்கு விளையும் விட்டு
தட்டா ரிரப்பும் விட்டுச் சாயப்பனை மூடும் விட்டு
துலுக்கனார் பள்ளி விட்டுத் தோரணக்கல் விளையும் விட்டு
வாச்சான் குளமும் விட்டு வாகையடி கோவில் விட்டு
நாச்சியார்த் தோட்டம் விட்டு நந்தாவனத் தோப்பும் விட்டு
புகழ்பெரிய ஒட்ட னவன் மருத்துவத்தாள் (இருக்கும்) பதியில்
வந்தான்

ஒட்டன் மருத்துவத்தை அழைத்தல்

58. வந்துநின்று தான்விளித்தான் மருத்துவம்கேட் டெழுந்திருந்தாள்
இந்தநடுச் சாமத்திலே எவனடாவர விளித்ததென்றாள்
விளித்தேன்காண் முட்டப்பதி வேந்தனுட தேவியர்க்குத்
தெளிந்தபுகழ் மருத்துவமே திங்கள்பத்தும் திகைந்ததுகாண்
உன்னைக்கூட என்னைவிட்டார் உடனேவர வேணுமென்றான்
தாங்காமல் இங்குவந்தேன் தானொட்டன் உனைக்கூட

மருத்துவம்-ஒட்டன் உரையாடல்

59. என்று சொன்னான் ஒட்டனுந்தான் ஏதுசொல்வாள்
மருத்துவத்தாள்
பொன்கழஞ்சு பேசாமல் பிறகேநான் வருவேனோ
வருவேனோ என்றுசொன்னாய் மருத்துவமே உந்தனக்கு
ஒருகழஞ்சி பொன்தருவேன் உடனேவர வேணுமென்றான்
ஒருகழஞ்சி பொன்தனக்கு வீடுவிட்டு வருவேனோ
இருகழஞ்சி பொன்தருவேன் எழுந்திரடி மருத்துவமே
இருகழஞ்சி பொன்னதுதான் இழுத்தரைக்கும் மிளகாமோ
முக்கழஞ்சி பொன்தாரேன் மொய்குழலே மருத்துவமே
முக்கழஞ்சி பொன்னதுதான் (என்) மோதிரத்தின் செலவடக்கம்
த்தாக்குடை மருத்துவமே சந்தோசமாய் உந்தனக்கு
நாற்கழஞ்சி பொன்தாரேன் நன்னுதலே மருத்துவமே
நாற்கழஞ்சி பொன்னதுதான் (என்) நடைபடிக்கல்
செலவல்லவோ
வஞ்சியிடை பெண்கொடியே மருத்துவமே உந்தனுக்கு
ஐங்கழஞ்சி பொன்தருவேன் ஆயிழையே மருத்துவமே
ஐங்கழஞ்சி பொன்எனக்கு அருமையல்ல நீபோடா
வீறுடனே வார்த்தைசொல்லும் விஸ்தார மருத்துவமே
ஆறுகழஞ்சி பொன்தாரேன் அருமையுள்ள மருத்துவமே
ஆறுகழஞ்சி பொன்தனக்கு அயல்ஊருக்கு வருவேனோ
ஏழுகழஞ்சி பொன்தருவேன் எழுந்திரடி மருத்துவமே
ஏழுகழஞ்சி (பொன்) என்றபோது எழுந்திருந்து தலையசைத்தாள்
எண்கழஞ்சி பொன்தாரேன் ஏந்திழையே மருத்துவமே
எண்கழஞ்சி (பொன்) என்றபோது கிட்டவந்து தலையசைத்தாள்
ஒன்பதுகழஞ்சி பொன்தருவேன் உடனேவர வேணுமென்றான்
ஒன்பது கழஞ்சி (பொன்) என்றபோது உபசரித்துச்
சிரித்துக்கொண்டாள்
பத்துகழஞ்சி பொன்தருவேன் பைங்கொடியே மருத்துவமே
பத்துகழஞ்சி (பொன்) என்றபோது படிகடந்து
வெளியில்வந்தாள்.

இருவரும் முட்டப்பதியை அடைதல்

60. கட்டுப்பட்டிச் சேலைத்தன்னைக் கட்டிச்சுற்றி
உடுத்துக்கொண்டாள்
கொட்டாம் பெட்டியைக் கையிலெடுத்தாள்
கொப்பூழறுக்கக்கத்தி எடுத்தாள்

தயிலக்குத்தி எண்ணெயுடன் தடிக்கம்பும் கையிலெடுத்தாள்
ஒட்டனோட ஒருவார்த்தைக் கேட்டாளே மருத்துவமும்
படைராசன் தூதுவனே பரிவான வார்த்தையைக்கேள்
நான்கிழவி உன்னோடே நடந்துவர மாட்டனே
என்றுசொன்னாள் மருத்துவமும் ஏதுசொல்வான்
ஒட்டனுந்தான்
செப்பரிய மருத்துவமே செய்தியொன்று நீகேளு
நீகிழவி யானாலும் (உன்) நெஞ்சித்திடம் போயிடுமோ
பசுக்கிழடு யானாலும் பாலுருசி போயிடுமோ
குப்பையிலே போட்டாலும் குன்றுமணி மங்கிடுமோ
கடுகதுதான் சிறுத்தாலும் காரமது போயிடுமோ
என்றுசொல்லி இருபேரும் இமைக்கும்முன்னே வழிநடந்து
வழிநடந்து சடுதியிலே வாராரே இருபேரும்
சீக்கிரம் நடந்துமுட் டப்பதியில் வந்தாரே

நேரம் கடந்தமை வினவுதல்

61. முட்டப் பதியில் மருத்துவத் தாளும்
மோகன யீத்துப் புரையிலே வந்தாள்
வந்து மருத்துவம் தன்னையும் கண்டு
மந்திரப் பூமாலை அம்மையும் சொல்வாள்
சுந்தரப் பெண்ணே மருத்துவத் தாளே
சீக்கிரம் வராத செய்திதான் என்ன
என்று மந்திரப்பூ மாலையும் சொல்ல.

மருத்துவம் காரணங் கூறுதல்

62. ஏது சொல்வாள் மருத்துவத் தாளும்
வாரா திருப்பேனோ உன்பேரு கேட்டால்
மக்கள் எனக்குத்தாயே நாலாறு உண்டு
சீராகத் தேடப் பிராயமும் இல்லை
நினைத்த பொழுதிலே எனைத்தேடும் அம்மா
பிள்ளைகளுக்கு அன்ன தண்ணீர் கொடுத்து
புத்தியும் சொல்லி மனைதனி லிருத்தி
கள்ளிகள் வீட்டிலே கொள்ளைசெய் யாமலே
காத்திருக்கச் சொல்லி ஆளும் இருத்தி
சந்தோச மாகவே இங்கேநான் வந்தேன்
தாய மாடினேன் அதினாலே சற்றே
வரும்போது நல்ல எதிர்ப்பது கண்டேன்.

மருத்துவம் பார்த்தல்

63. மாய னருளாலே மோசம் வராது
அருமைக் குழலாள் மருத்துவத் தாளும்
ஆதர வாகவே வார்த்தையும் சொல்லி
சொல்லிக் குடத்திலே தண்ணீரும் வைத்து
துரும்புக் குழிக்குள்ளே சாஸ்திரமும் செய்து
நெல்லளந்து பிள்ளை யாருமே வைத்து
நெஞ்சும் உடலுக்கு எண்ணெயு மிட்டு
வல்ல மருத்துவத் தாளும் தனக்கு
வசமாய் இருக்க முக்காலியு மிட்டு
சீராய் இருக்கத் தேவி யர்க்கு.

தேவியின் உடல் வருத்தம்

64. சிறப்புடன் வயிறுநொந்து தியங்கியே மயங்கினாளே
அந்நேரம் மதிமயங்கி அசர்ந்துவிட்டாள் தேவியாரும்
வயிறுநொந்து மனம்பதறி அபயமிட்டாள் திருத்தேவி
அபையமென்பாள் ஆத்துமம் சோருதென்பாள்
பகையாக நானும்இந்தச் சந்ததியை உண்டானேன்
வண்ணமுள்ள தோழியரே மானாரே மருத்துவமே
என்னைஇனித் தேடாதே இப்போது இறந்துபோவேன்

மருத்துவம் தேற்றுதல்

65. இறந்திடுவேன் என்றுசொன்ன ஏந்திழையாள் முகம்நோக்கி
சிறந்தபுகழ் மருத்துவத்தாள் ஏதுமொழி சொல்லுவாளாம்
மனம்பதறி வாய்க்குழறி அபயமிடாதே தாயே
பிறக்கும்பிள்ளை பதறாதே பேதலிக்க வேண்டாங்காண்

தேவி வலியால் வருந்துதல்

66. உள்ளமொழி சொல்லாமல் ஒளிக்கிறாய் மருத்துவமே
பிள்ளையில்லை மருத்துவமே பெருவயிறு கொண்டேனடி
வம்பிலேநான் தவசிருந்து வலுநெருப்பைப் பயின்றேனே
கால்கள்கடுக்குதே மருத்துவமே கைசோர்ந்து
வருகுதேஎந்தனுக்கு
வாழைத்தண்டைப் போலேசித்திர வண்ணத் துடைகள்ரெண்டும்
கட்டுமுட்டாய் வருகுதம்மா கைதருவார் ஒருவரில்லை
சாவேனோ பிழைப்பேனோ சங்கையுள்ள மருத்துவமே

என்னைப்போலே பெண்பிறந்து இருக்கலையோ-இந்தப்-
பூமிதன்னில்
நானொருத்தி பெண்பிறந்து-இந்த-நாடோலம் ஆனேனே
இந்தப்பிள்ளை தந்தவரே இனிப்பிள்ளை வேண்டாமையா
மதலைக்குத் தவசிருந்து மடிகிறேன் தாய்மாரே
இப்போது இறந்திடுவேன்-என்-மன்னவர்க்குச்
சொல்லிடுங்கோ
போகுதடி என்னுயிர்தான் பிழைப்பதற்கு ஏதுமில்லை
-என்-கணவனைத்தான் அறியாமல் கருமருந்தைத்
தின்றேனில்லை
படிகடரக் குழந்தையுது பையைவிட் டேனழுக
அய்யோவென்று அபையமிட்டு அலறிமண்ணில் விழுந்தாளே.

குழந்தை பிறத்தல்

67. பாங்கான தோழி மார்தாங்கிப் பிடிக்க
பதறாதே அம்மா என்றவர் சொல்ல
சொல்லும் பொழுது மருத்துவத் தாளும்
சித்திரக் குத்தியில் எண்ணெய் எடுத்து
நல்ல குளியலில் எண்ணெயை விட்டு
நன்றாக ஓதி வயிற்றிலே போட
தயிலம் எடுத்து வயிற்றிலே போட
சந்ததி வந்து பிறப்பதுக் குத்தான்
ஒயிலான கன்னிக் குடமும் உடைய
உருத்திரண்டு பிள்ளை தானும் பிறக்க
பிறக்கவே கண்டு மருத்துவத் தாளும்
பெருக்கவே சந்தோச மாக மகிழ்ந்து
சிறக்கவே பொன்னின் கலத்தை எடுத்து
செய்ய மருத்துவத் தாளேந்து வாளாம்
பொன்னின் கலத்தில் குழந்தையன் னேரம்
பொன்னுந் தோட்டுக்காரி அம்மைபிறந் தாளே

கோனாண்டி ராசன் மகிழ்தல்

68. கோனாண்டி ராசாவும் மந்திரி மாரும்
கோடிப் படையெல்லாம் கேட்டு மகிழ்ந்தார்
தானாண் டிருந்த பரிகலத் தோரும்
சந்தோசப் பட்டார் படைத்தலைவர் மாரும்

மருத்துவம் குரவையிடுதல்

69. அப்போது நல்ல மருத்துவத் தாளும்
அழகு குழந்தை தன்னை யெடுத்து
கொப்பாடை நீக்கிக் குழந்தை எடுத்து
கொப்பி ழுறுத்துக் குரவையு மிட்டாள்

குமரப்பராசன் பிறத்தல்

70. அப்போது குண்டுக்கண்ணு ராசனுட தேவி
அந்த நேரம்ஒரு ஆண்பிள்ளை பெற்றாள்
பெற்றார் இருபேரும் ஒருமுகூர்த் தத்தில்
பேரும் குமரப்ப ராசனாம் என்று
இருபே ரும்ஒரு முகூர்த்தத்தி லேதான்
இங்கித மாகவே அங்கே வளர.

மருத்துவம் பரிசில் பெறுதல்

71. தோட்டுக்காரி யம்மன் பிறந்த பொழுதில்
சூழ்ந்து மடவார் பொலியது கொடுத்தார்
வாட்டமில் லாத மரகத முத்தும்
மாணிக்க முத்தோடு பொன்னும் கொடுத்தார்
மட்டில்லாப் பொன்னும் பணங்களும் சேர
வாரில் பொதிந்தாள் மருத்துவத் தாளும்
வாழும் மருத்துவம் சந்தோச மாக
மடவார்கள் இட்ட பொலிவகைக ளெல்லாம்
ஏழு எருதிலும் ஆறு சுமட்டிலும்
ஏந்திழை யாள்பொலி கொண்டுபோ னாளே

குழந்தையைத் தொட்டிலில் இடுதல்

72. மருத்துவத்தாள் போனபின்பு கருத்துடனே தேவியரும்
வாசமுடன் குழந்தைதன்னை எடுத்தவளும் சேனையூட்டி
சீனியுடன் சேனையூட்டித் திருத்தமுள்ள தேவியரும்
பாலூட்டி மேலான தொட்டிலி லேகிடத்தி
பட்டாலே அணவடையும் கட்டாக யிட்டு
வெள்ளானைக் கொம்பதி னாலே சமைத்த
வீறான நாகமணித் தொட்டிலி லேகிடத்தி

பிள்ளையைத் தொட்டிலிலே நானே கிடத்தி
பெற்ற தாயாரும் பிரிய முடனே
தாயாரும் பிள்ளை தனக்குப் பாலூட்டி
சந்தோச மாகத் தாலாட்டு வாளாம்

தாலாட்டுப்பாடுதல்

73\. ராரி ராரி ராராரோ கண்ணே ராரி ராரி ராரோ
தாலாட்டும் வேல்விழியாள் தராசன் திருத்தேவி
சீராட்டாய் பிள்ளைதன்னைத் திருத்தேவிதா லாட்டுவாளாம்
யீனாத வாழையது இளவாழை யீன்றகண்ணோ
வாழைக் குருத்தோநீ வருக்கைப்பலாச் சுளையோநீ
தென்னமரக் கனியோநீ தெய்வசூடா மணியோநீ
மணியே மணிவிளக்கே மாணிக்கக் கண்ணமுதோ
கணியாமல் வந்துதித்த கிட்டாத ரத்தினமோ
மானார்கள் மனகிழ வையகத்தோர் தான்புகழ
தேனாக வந்துதித்த சிறந்த மணிவிளக்கோ
மலடி மலடிஎன்று-இந்த-வையகத்தோர் ஏசாமல்
மலடிஎன்ற சொல்மாற்ற மாணிக்கமாய் வந்தகண்ணோ
இருளி இருளிஎன்று என்இனத்தார் ஏசாமல்
இருளிஎன்ற சொல்மாற்றி யீடேற்ற வந்தவளோ
பாலளக்கும் நாழியிலே பணம்அளக்க வந்தவளோ
மோரளக்கும் நாழியிலே-அம்மா-முத்தளக்க வந்தவளோ
உரைசிறந்த பொன்னையெல்லாம். ஓதிவைக்க வந்தவளோ
பெண்ணரசே என்தனக்கு-என்-பேதலிப்பைத் தீர்த்தகண்ணோ
பட்டணத்தார் ஓடையிலே பந்தடித்து விளையாட
பரமசிவம் தானிரங்கிப் பாவனையாய்த் தந்தகண்ணோ
வாய்த்தமுட்டப் பதிதனிலே வாழ்வாக எந்தனக்கு
மூத்தநயி னார்இணங்கி முகனையுடன் தந்தகண்ணோ
என்றுசொல்லித் தாலாட்டி இன்பமுடன் இருந்தாளே.

மதலை மொழிகேட்டு இருவரும் மகிழ்ந்திருத்தல்

74\. இருந்து மனமகிழ்ந்து மந்திரப்பூ மாலையம்மன்
எடுத்துமடி தனிலே வைத்து (எடுத்து)
வைத்துமக ளைஇருத்தி முத்தமிட்டு விளையாடி
மதலைமொழி கேட்டுமகிழ்ந்து (மதலை மொழி)
மகிழ்ந்து சிரி்ந்துஅவள் முத்திமட்டு விளையாடி

அலங்கரித்து ம்கிழ்தல்

75. கேட்டரச னும்மகிழ்ந்து நாட்டமுடனே பிள்ளைக்கு
கிங்கிணியும் நூபுரமும் பூட்டி (கிங்கிணியும்)
பூட்டி யலங்கரித்துத் தோட்டுக்காரி யம்மனுக்கு
போதவே பணிகளும் அணிந்தார் (போதவே)
அணிந்து சதங்கைதண்டை ஆபரணம் கிங்கிணியும்
அழகாகவே அணிந்துநன்றாய் (அழகாகவே)
நன்றாக வேயணிந்து நாட்டமுடனே பிள்ளையை
நாளொரு பகலுமாக நளினமாய்த் தான்வளர்த்தார்
வளர்ந்தாள் இளங்கிளிபோல் வாப்புருக்கித் தங்கம்
வார்த்ததுபோல்
குழந்தைப் பிள்ளையவள்தான் நல்ல கொஞ்சுங்கிளி மயில்
போலழகாய்
அழகாய்ச் சிலைபோலே ஆயிழையாள் தோட்டுக் காரிக்குத்தான்
காதுகுத்தித் தோடுமிட்டு அவள்கையில் பச்சை வளையலிட்டு
பிள்ளை ஏழெட்டு நல்ல வய்தாகி வயது மிகுந்துவர
வஞ்சி இளமயில் போலழகாய் மயில்போல் அழகுடைய
நல்லமங்கை தோட்டுக்காரி அம்மனுக்குப் பட்டாடை தானுடுத்து
நல்ல பாடகம் தண்டை சிலம்பணிந்து
கட்டான முத்துவடம் வெள்ளிக் காப்புக்கடையமும் காலிலிட்டு
மாணிக்கப் பொற்பணியும் நல்லவங்காளப் பச்சை வளையலதும்
ஆணிப்பொன் மாலையுடன் நல்லஆபரண முத்து மாலைகளும்
மாலைவட மாலைகளும் மார்பினி லிட்ட பதக்கங்களும்
பொன்னுக்குப் பொன்னழகி நல்லபொன்னுந் தோட்டுக்காரி
யம்மனுக்கு
சோலைக் கிளிமொழியா ளந்ததோகை தோட்டுக்காரி யம்மனுக்கு
இட்டார் பணிகளெல்லாம் நல்லஇரத்தினத் தோடுடன்
ஆடுகொப்பும்
ஆடுகொப்பும் தான்சூடி அந்த ஆயிழையாள் தோட்டுக்
காரிக்குத்தான்
வச்சரப் பொற்கொடியாள் மங்கை தோட்டுக்காரி யம்மனுக்கு
உச்சித் திருப்பிழையும்-நல்ல-கொண்டைக்குப் பிச்சிப்பூ
மாலைசுற்றி
அஞ்சனக்கண் மையுமிட்டார் ஆயிழையாள் தோட்டுக்
காரிக்குத்தான்

தோட்டுக்காரி வளருதல்

76. கதிரோன் உதித்ததுபோல் கன்னிநல்லா ளந்தத் தோட்டுக்காரி
சதிரமணி மேடையிலே நல்ல தங்கப்பொன் சாவடியில்
பதினாறு தோழியுடன் பைங்கொடியாள் தோட்டுக்காரி
தங்களிலே பந்தடித்து சரசமிட்டு விளையாடி
பெண்களெல்லாம் ஒருப்போலே புகளும்மணி மேடையிலே
ஒருப்போலே பெண்களுடன் உலகாளும் ராசன்மக்கள்
பருவவய தாய்வளர்ந்து பன்னிரெண்டு வயதாச்சு
பதிஉடன் முட்டப் பதியில் வளர்ந்தாளே
பருவமாய்த் தோட்டுக்காரி யம்மனும்
பாரமுட்டப் பதியில் வளரவே
வளரவே தோட்டுக்காரி சிங்காரமாய்
மன்னன் கோனாண்டி ராசனுடன்மகள்
கோனாண்டிமக ராசனும் வீரனும்
கொலுவாக மகளை வளர்க்கவே
தானும் தன்னுட சேனையுமாகவே
தாங்களங்கே இருக்கின்ற வேளையில்
பாங்கிமார்கள் குரவைகள் பாடவே
படையோ டிருந்தாரே கோட்டையிலே
இப்படியே தோட்டுக்காரி இவள்வளரும் நாளையிலே

குமரப்பராசன் வளருதல்

77. சொல்பெரிய மலைமார்பன் சீர்பெரிய ராசாக்கள்
கொந்தளப்பூ ராசாவும் குண்டுக்கண்ணு ராசாவும்
இந்திரன்போல் பகுதாக இருந்தாரே கொலுவதிலே
தட்டா ரிரப்பதிலே தங்களுட கோட்டையிலே
கொலுவாக வேவள்ர்ந்தான் குமரப்ப ராசாவும்
வளர்ந்தானே ராசமன்னன் வடிவன் கும ரப்பராசன்
இளந்தரத்துத் தோழருடன் இலங்கும்கும ரப்பராசன்
வளர்ந்தவனும் பதினாறு வயதான வேளையிலே

ஆயுதமேற்றல்

78. கட்டுடனே உடைஉடுத்துக் காதில்வர்ணப் பொன்னுமிட்டு
பொட்டுமிட்டு நீறணிந்து புனுகுசவ் வாதும்பூசி
கோரி மயிர்முடிந்து கொண்டைகட்டிச் சிங்கியிட்டு
பொற்சரிகைத் தலைப்பாவும் பொன்னெழுத்துத் தூவட்டமும்

வச்சிர முகத்தழகும் வலதுகையி லுடைவாளும்
கடயம்வெள்ளித் தாயத்துடன் கனகமுத்துப் பொற்பணியும்
படையில்வெல்லு மதிசூரன் பாரன்கும ரப்பராசாவும்
தன்திருமுன் சேவுகரும் தாண்டும்படைத் தலைவர்களும்
குண்டுக்கண்ணு ராசன்மகன் கொலுவாக வேஇருக்க
நன்றாகக் கோட்டைக்குள்ளே நாலுலட்சப் படையோடே
குன்றாத வடிவழகன் குமரப்ப ராசாவும்
நன்றான சிறுக்கனுடன் நல்லமந் திரிமாரும்
ஒருப்போலே தங்களுட உள்கோட்டையி லிருந்தாரே
தட்டாரிரப்பதிலே வட்டக்கோட் டைதனிலே தானாகவே
அவனிருக்க

குமரப்பராசன் கொலுவீற்றிருக்குஞ் சிறப்பு

79. வட்டப் பரிசைக் காரரொரு பத்தி
வங்காளத் தொட்டியக் காரரொரு பத்தி
சிங்கார மான துரைமக்க ளோடே
சேவிக்கும் பாளையக் காரொரொரு பத்தி
பத்தி பத்தியாய்ப் படைகள் நெருங்க
பாளையக் காரரும் சேவித்து நிற்க
வெற்றி முரசு மேளம் முழங்க
வெள்ளவட் டக்குடை எங்கும் செரும
சேருங் குதிரையும் பட்டாணிமாரும்
பல்லாக்கு வல்லயக் காரரும் கூட
பாரத் துரைமக் களொருப் போலே
சல்லிகட் டும்வெடிக் காரரும் கூட
தண்டியல் கோலா வண்டியும் கூட
பட்டுக் குடையும் பகழக்குடையும்
பத்தி பத்தியாயு முத்துக்குடையும்
கட்டான சேராடி வட்டக் குடையும்
காரியக் காரரும் கூடச் செரும
வாளும் பரிசை வள்ளைந்து செரும
மட்டில்லாக் கோடிப் பெரும்படை யோடே
ஆளில் அழகன் குமரப்ப ராசன்
அரசன் மன்னன் கொலுவீற் றிருந்தான்.

கோட்டைக்கு எழுந்தருளுதல்

80. கொலுவதி லிருந்து மன்னன் குமரப்ப ராசன் தானும்
வலுவுடன் கோட்டை பார்க்க மந்திரி மார்க ளோடே
பலமுடன் படைக ளோடே புரவிகள் சீனி வைத்து
தலம்விட்டு ராச மன்னன் தானெழுந் தருளி னாரே.

கோட்டையைப் பார்வையிடல்

81. எழுந்த படைகளோடே வளைந்துநல்ல குதிரைகளும்
இடிபோல் வெடிமுழங்க டம்மானம் கொட்டிவர
வளைந்து படைசெரும மந்திரிமார் சூழ்ந்துவர
வன்னியரும் சென்னியரும் மட்டில்லாப் பெரும்படையும்
மன்னன்கும ரப்பராசன் முன்னவே எழுந்தருள
பொன்னுமுடிக் காவலவன் மன்னன்கும ரப்பராசன்
போதப்படை யோடேமன்னன் ஆரவார மாகவேதான்
கொஞ்சவெண்சா மரைகள்வீச கொலுவாக எழுந்தருள
குஞ்சிராமச் சிறுக்கனவன் கூடவே அப்பமிட
பஞ்சவர்ணத் தீவெட்டிகள் பல்லாக்கு முன்பிடிக்க
பக்கத்தில் குதிரைக்காரர் ஒக்கவே படைநெருங்க
பட்டாளமும் கும்பினியும் பாளையங்க ளும்செரும
தட்டாரிரப்பு வட்டமான தங்களுட கோட்டைவிட்டு
தந்திர மாகவேதான் குமரப்ப ராசமன்னன்
முட்டப்பதி கோட்டைதன்னைக் கிட்டச்சென்று பார்க்கவென்று
முடுக்கிப்பல் லாக்கிலேறித் துடுக்கன்கும ரப்பராசன்
பூவண்டன்மார் விரவிக்கொண்டு போமெனவே என்றுசொல்லி
போருக்கு வீரமுள்ள குமரப்ப ராசமன்னன்
மாவண்டரை வெட்டிவெல்லும் மன்னன்கும ரப்பராசன்
மட்டிலாப்பெரும் படையோடே வந்தவர் கோட்டைபார்த்தார்
ஒன்றலரை வெட்டிவெல்லும் உலகமெல்லாம் புகழ்படைத்த
மன்னனுக்கு மன்னவன் வடிவன்கும ரப்பராசன்
தானிருந்து அரசாண்ட தட்டாரிரப் பும்விட்டு
கோனாண்டி ராசனுட கோட்டைவந்து பார்த்தனராம்.

கோட்டையின் சிறப்புக் கண்டு மகிழ்தல்

82. நாலுகோட்டை மதிலதையும் நாட்டிநிற்கும் தோரணமும்
செயலான கொத்தளமும் சிறந்தமணி மேடைகளும்
கொத்தளத்துக் கொடிமரமும் கோட்டையும் சித்திரமும்

சுற்றிலுள்ள கரிபரியும் சூதான வாசல்களும்
காட்டஒண்ணா லகில்கிடங்கும் கருவிகள் சொரிந்திருப்பும்
அடக்கமுள்ள கோட்டையிது ஆரும்வெல்லப் போகாது
சீரான கோட்டையுந்தன் சிறப்பையெல்லாம் தான்பார்த்து
பாராளும் குடைக்கரத்தான் பாரன்கும ரப்பராசன்
கண்டுநன்றாய்க் கோட்டைதன்னைக் கருத்தாகத் தான்பார்த்து
நன்றுநன்று இக்கோட்டை நல்லவேலை யென்று சொல்லி
கண்டுநன்றாய் மனமகிழ்ந்து கருத்துடனே நிற்கையிலே.

தோட்டுக்காரி தோழிகளுடன் பந்தாட விழைதல்

83. குன்றாத குடைக்கரத்தான் கோனாண்டி ராசன்மகள்
வண்டாடும் பூங்குழலாள் வளர்தோட்டுக் காரியம்மன்
வந்தமன்னன் தன்னுடைய வளமைதன்னை அறியாமல்
சுந்தரஞ்சே ருங்குழலாள் துடியிடையாள் தோட்டுக்காரி
வெளிகாணாமல் தானிருந்த மெல்லிநல்லாள் தோட்டுக்காரி
அழிவுவரும் காலமதில் அறையைவிட்டு எழுந்திருந்து
பதினாறு தோழியுடன் பாங்கியவர்கள் தன்னுடைய
விதிவாற தறியாமல் மேலான மேடையிலே
கட்டான மேடையிலே கருத்தாகப் பூட்டிவைத்த
திட்டிவாசல் தான்திறந்து திருவெளிச்சம் காண்பதற்கு
வண்டாடும் பூங்குழலாள் வளர்தோட்டுக் காரியம்மன்
எல்லோரும் காண்பதற்கு ஏகவெளி யாய்த்தெரிய
பதமான பெண்களெல்லாம் பகரும்விதி அறியாமல்
கதவேழும் தான்திறந்து கையில்பந்து தானெடுத்தார்
பந்தடித்து விளையாடிப் பாங்கியர்கள் தானினைத்து
கொந்தளப்பூ மேடையிலே கூடியேபந் தாடுவாராம்.

பந்தாடுதல்

84. பந்தெடுத் தாடிவாறாள் என்நாச்சியார்
பந்தெடுத் தாடிவாறாள்
பந்தெடுத் தாடிவாறாள் தோட்டுக்காரி
பந்தெடுத் தாடிவாறாள்
பந்தெடுத் தாடுவாள் சந்தோச மாகவே
பக்கத்தில் தோழிமார் ஒக்க ஒருப்போலே
தத்தித் திரிகிட தோமென வென்று
சங்கையாய்ச் செங்கை வளையல் குலுங்க

பாடகம் தண்டை சிலம்புப் புலம்ப
பட்டுச்சல் லாரிகள் விட்டுப் பிரிந்திட (பந்தெடுத்)
ஆடகம் மாமணி பந்தெடுத் தாடியே
அம்மானை பம்பரம் போட்டுப் பிடித்தவள்
பம்பர மும்பல பந்தும் எடுத்தவள்
பாவித் தெடுத்தவ ளாடியே கொண்டாடி
கெம்பீர மாய்ப்பொன்னும் தோட்டுக்காரி யம்மன்
கிட்டி நவமணி இரத்தினம் போலவே (பந்தெடுத்)

தோழியர் உடன் ஆடுதல்

85. எடுத்தாளே பந்து தன்னை இலங்கும்தோட்டுக் காரி யம்மன்
முடுத்தன மாகப் பெண்கள் மேடையில் வந்து கூடி
வகுத்தனர் மடவோர் பந்து வகையுடன் தன்கை யாலே
தொழுதந்தத் தோழி மார்கள் கும்பிட்டு வாங்கி னாரே.

கன்னல்மொழி மாதுமின்னாள் காரிகையாள் தோட்டுக்காரி
கட்டுடனே பந்தெடுத்தார் கன்னியர்பந் தாடுதற்கு
ஆடும்பந்து அமரும்பந்து அம்மானை போட்டுப்பிடித்தார்
ஆளுக்கொரு பந்தெடுத்தார் அம்மனுட தோழியர்கள்
தோழிமாரும் தோட்டுக்காரி அம்மனும் மனமகிழ
தெட்டெடுத்த பந்தின்பேரைச் சொல்லுகிறேன் கேளுமினி.

பந்தின் வகை

86. முத்துப்பந்து நீலப்பந்து முன்னடம் சிறந்தபந்து
மூணுநிற மானபந்து பூணிநிற முட்டப்பந்து
பூணிநிற மானபந்து பொன்னாலே முடித்தபந்து
பொன்னுநல்ல வர்ணபந்து பொங்காரச் சிங்காரபந்து
பெட்டகத்துக் குள்ளிருந்து பட்டுநூலால் செய்தபந்து
பட்டுநூலுப் புதுப்பந்து பகளமுத்து வாளிப்பந்து
மங்கைதோட்டுக் காரிக்குத்தான் தங்கத்தால் சமைத்தபந்து
தரியிட்ட வரிப்பந்து தங்கத்தரி யிட்ட பந்து
சகலாத்துப் பந்துடனே தங்கமர கதப்பந்து
மரகத மாணிக்கத்தால் வர்ணமிட்ட சின்னபந்து
மாதளம்பூ வாளிப்பந்து மங்கைதோட்டுக் காரிக்குத்தான்
சின்னப்பந்து சிறுபந்து தெய்வஉலகில் உள்ளபந்து
சீரான தோட்டுக்காரிக்கு நேரிழைபூ வாளிப்பந்து

பந்தடித்த வகை

87 பூவாளிப் பந்துடனே பொன்னாலே அம்மானையும்
பொன்னுந் தோட்டுக் காரியம்மன் அம்மானை போட்டுப்பிடித்து
அம்மானை போட்டுப்பிடித்து அடித்தாளே பந்துதனை
அடித்தபந் தானதுவும் ஆகாசத்தி லேஉசர
அந்தப்பந்தைச் சந்தோசமாய் அங்கொருத்தி தான்பிடிக்க
பிடித்த பந்தைஎடுத்து பின்னொருத்தி தானெறிய
பொன்னுந்தோட்டுக் காரியம்மன் வர்ணப்பந்து தானடிக்க
அடிக்கவே பந்தவளும் அங்கொருத்தி தான்பிடிக்க
அந்தப்பந்து துள்ளியோடி ஆகாசத்தி லேஉசர
உசர்ந்தபந்து தரையில்விழும் முன்னொருத்தி தான்பிடிக்க
பந்தொருத்தி தான்பிடிக்க வந்தொருத்தி தான்பரிக்க
பட்டுச்சேலைக் காரியவள்கட்டுமல்லுத் தான்பிடிக்க
சந்தோசமாய்த் தோட்டுக்காரி அம்மனும் மனம்மகிழ்ந்து
மடவார்கள் வந்துநின்று குரவையது தான்பாட
தோட்டுக்காரி யம்மன்தொந் தோமெனவே பந்தடித்தாள்
பாட்டுப்படித்துக் கொண்டா ளொருத்தி
பகுமான மாகச் சிரிப்பா ளொருத்தி
கோதி முடிந்த முடிகள் சரிய.
கொண்டை மாலை குலைந்து விழவே

விளையாட்டின் விளைவுகள்

88. மார்பிலே பூசிய சந்த னங்களும்
மஞ்சணைகளும் வேர்த்துச் சொரிய
வாசம்புனுகுசவ் வாதும் மணக்க
மல்லிகை முல்லை கமகம வென்ன
பூசும் மஞ்சளும் பொட்டும் உருக
பொன்னுந் தோட்டுக்காரி யம்மனப் போது
மந்திர மாகவே இந்திர லோகத்தில்
அந்தத் தரிதரி ஆடாதே பந்தே
அந்தத் தரிகிடன்றாடாதே பந்தே
தரிகிடன் றாடாதே பந்தே
தொந்தித் தமிதிமி தோமென வேதான்
தோழியர்க் கென்றுநீ ஆடாதே பந்தே
உனக்கெனக் கென்று ஆடாதே பந்தே
என்தோழியர்க் கென்றுநீ ஆடாதே பந்தே

அணிகலன்களின் அசைவு

89. துடியிடை அசைய மயிலது கூவ
கொவ்வை முகத்திலே லச்சுமி நிற்க
கையில் வளையல் கலகல வென்ன
காப்புடன் கையில் கடையம் யிலங்க
மையிடும்கண்ணில் வரிக்குறி கொஞ்ச
மரகத மாணிக்கத் தோடு மிலங்க
பச்சைவளை யோடு உச்சித் திருவும்
பட்டமும் சூட்டிப் பிறையு மிலங்க
ஆடுகொப் பாட தோடு மிலங்க
அழகான நல்லபொற் பணியு மிலங்க
மூடாங் கும்அவள் சூடிய பட்டும்
மோகன மாகிய மூக்குத்தி மின்ன
மின்னிடும் பட்டும் பொன்னோடு மணியும்
மிச்ச மாகிய உச்சிப் பிறையும்
உன்னித மாகவே கட்டி யுடுத்த
உருவெழுத் துப்பட் டாடை துலங்க
பட்டு முறுக்கன் பணிச்சேலை யுடனே
பாடகம் தண்டை கலீகலீ ரென்ன
கனக அடங்கலும் மயிலடி பீலியும்
வடிவுள்ள நாயகி தோட்டுக்கா ரிக்கு
மார்பி லணிந்த பணியு மிலங்க
மாணிக்க மாலையும் மரகத மிலங்க
மல்லிகை மாலை குடைமா லைகளும்
மார்பினில் இட்ட பதைக்க மிலங்க
மாலையும் உக்கெட்டுக் காரைச் சவடி
மந்திர மாகிய பதக்க மிலங்க
பந்தடித்து விளையாடி தோட்டுக்காரி யம்மன்நின்றாள்

குமரப்பராசனின் மயக்கம்

90. பந்தடித்து விளையாடி பாவைதோட்டுக் காரியம்மன்
கொந்தளப்பூ மேடையிலே கூடிநிற்கும் வேளையிலே
விளையாடி அவர்கள்நிற்கும் வேடிக்கை விஸ்தாரமதை
குழையாடும் காதழகும் கொடியிடையாள் உடலழகும்
படையாளும் ராசமன்னன் பாரன்கும ரப்பராசன்
வடிவழகி யழகுகண்டு மையல்கொண்டு தடுமாறி

கண்ணழகும் கருத்தழகும் காதழகும் முகத்தழகும்
பெண்ணழகி வடிவுகண்டு பேதலித்து மூச்செறிந்து
தையலுட வடிவதையும் தானவரும் கண்டபோதே
மையல்கொண்டு தடுமாறி மதிமயங்கி ஏதுசொல்வார்
சூழுலகில் கண்டதில்லை துடியிடையாள் தன்னைப்போலே
வாழும்படி நாமிவளை மாலையிட வேணுமென்று
மாலையிட வேணுமென்று மனதிலெண்ணி உள்ளடக்கி
கோலநெடும் படைநெருங்க மந்திரிமார் சூழ்ந்துவர
தன்னுடைய கோட்டையிலே சடுதியிலே வந்துவிட்டார்
கோட்டைக்கூடத் துள்ளேசென்று குமரப்ப ராசாவும்
பூட்டுமணி கோட்டைக்குள்ளே புகுந்தவரும் சரிந்துகொண்டார்
சாய்ந்தாரே மெத்தையிலே தலைவலிக்கு தென்றுசொல்லி
காமக்குளிர் பிடித்தவர்போல் கஞ்சிதண்ணீர் குடியாமல்
தானுறங்கும் மெத்தையிலே தலைவலிக்கு தென்றுசொல்லி
பட்டாலே மூடிக்கொண்டு பழக்கமொழி பேசாமல்
கட்டாகச் சமைத்துவைத்த கரிசோறும் பொசியாமல்
அன்னந்தண்ணீர் குடியாமல் அழகான ராசமன்னன்

குண்டுக்கண்ணுராசன் காரணம் வினவுதல்

91. மன்னன்கும ரப்பராசன் மனச்சடவாய் இருப்பதெல்லாம்
கொந்தளப்பூ ராசாவும் குண்டுக்கண்ணு ராசாவும்
வந்துகண்டார் சடுதியிலே மகனுடைய மனச்சடவை
மாதிலங்கும் •தினப்புசனே வடிவுடைய ராசமன்னா
ஏதுகுறை தானுனக்கு இச்சடவு வருவானேன்
ஆனைபரி பட்டதுண்டோ அமைச்சர்பட்டுப் போனதுண்டோ
சேனைப்படைத் தலைவர்வந்து சிறந்தகப்பம் கேட்டதுண்டோ
ஏதுகுறை யானாலும் என்னோடே சொல்லுமென்றார்

குமரப்பராசன் காரணங் கூறுதல்

92. மன்னவர்கள் தான்கேட்க மறுத்துமொழி ஏதுசொல்வார்
என்னசொல்வேன் நானினிமேல் இலங்குமுடிக் காவலனே
மன்னவனே என்னுடைய மனச்சடவைக் கேளுமென்றாரே
ஆண்டவனே என்னுடைய பொன்னுந் தம்பிரானே
அய்யாவே நானும்இப்போ சொல்லு மொழிகேளும்
கண்டமுட்டப் பதிநாட்டை சுத்திப்பார்க்கச் சென்றேன்
கோடிப்படை யோடேநானும் பல்லாக் கேறிக்கொண்டு
கோட்டைசுற்றிப் பார்த்துக்கொண்டு கூடிநிற்கும் நேரம்

கோனாண்டி ராசன்மகள் கோதை தோட்டுக்காரி
வாட்டமற்ற மேடையிலே வந்து பந்தடித்தாள்
வடிவுகண்டு நானுமோ மயங்கி விட்டேன்மன்னா
திடமாக எந்தனுக்கு நீரவளை யிப்போ
கடல்சூழ்ந்த வையகத்தில் தோட்டுக்காரி யைப்போல்
காசினியில் இப்படிப்பெண் கண்டதில்லை மன்னா
திடமாக எந்தனுக்கு நீரவளை யிப்போ
செப்பமாய் மணம்முடித்து செய்துதர வேணும்
ஆவலுடன் மாலையிட்டு தராதே யிருந்தால்
அம்புவியில் என்னுயிரை வைத்திருப்ப தில்லை
காவலரே நீரும்இப்போ கண்டிருக்க வேதான்
கையிலுறை வாள்நிறுத்தி சாடிஉயிர் மாள்வேன்
உடன்வாளைத் தான்நிறுத்திஎன்னுயிரை விடுவேன்
உலகத்திலே நானும்இப்போ உமக்கு மகனில்லை
திடமாகச் சொன்னேன்காண் என்தகப்ப னாரே
தென்குமரி யம்மைதிரு வாணையிது மெய்தான்

குண்டுக்கண்ணுராசன் தேற்றுதல்

93. குமரப்ப ராசனும் உரைத்தமொழி கேட்டு
குண்டுக்கண்ணுராசன் மறுவார்த்தை சொல்லுவாராம்
மக்கா கொடியிடையே குமரப்ப ராசாவே
வம்பதிலே நீயிறக்க வேண்டாங்காண் மகனே
வேண்டும்படி உந்தனக்கு நான்மணம் முடித்து
விரைவுடன் தருவேனிப்போ மெய்யிது தானேவென்றார்

கோனாண்டி ராசனுக்குத் திருநீட்டெழுதல்

94. அந்தநே ரத்தில்குண்டுக் கண்ணுராசன் தானும்
அனேகமந் திரிமாரையும் கூட்டிக் கொண்டு
சிந்தை யாகவே எல்லோரையுங் கூட்டி
தெரிந்து பார்த்துத் திருநீட் டெழுதினாரே
எழுதி னதிரு வாசக நீட்டதும்
பழுதில் லாததோர் கோனான்டி ராசாவே
பச்ச முள்ளதோர் வாள்வீரர்க் கல்லவோ
அல்ல வென்றொரு வார்த்தைபே சாமலே
அன்பாய் உன்மகள் தோட்டுக் காரிதன்னை
நல்ல மன்னன் குமரப்ப ராசர்க்கு
நலமாய் மணம்செய்து தரவேணு மென்று

உன்னித மாய்த்திரு நீட்டெ முதியே
நீட்டெ முதியே ஒட்டன் கையிலேத்தான்
கிண்ணய லாய்க்கொடுத் தங்க னுப்பினார்

ஒட்டன் திருநீட்டைக் கொடுத்தல்

95. ஒட்டன் ஓடி நடந்து சடுதியில்
உற்றமுட் டப்பதி தன்னில் வந்தவன்
வந்த ஒட்டன் வணங்கிச் சடுதியில்
மன்னன் கோனாண்டி ராசன் கையிலே
கொண்டு வந்தவன் நீட்டைக் கொடுக்கவே

கோனாண்டி ராசன் கோபங்கொள்ளுதல்

96. கூடி மந்திரி மாருமே வாசித்தார்
நன்றாக ஓலை வாசகத்தைக் கேட்டு
நல்ல கோனாண்டி ராசன் சினந்தவன்
சினத்து ருக்கியே பல்லைக் கடித்தவன்
சிங்கம் போலவே வேங்கைப் புலிபோலே
மனதி லேமிகக் கோபங்கள் கொண்டவன்

ஒட்டனைச் சினந்து விரட்டுதல்

97. வந்த ஒட்டனை ஏசிப் பறைந்தவர்
பறையா ததோர் வார்த்தைகள் பேசியே
பயல்பெண் கேட்டு வந்தவ னாரடா
முறை மாமன் மகனோ அவனோடா
முடுக்கி வெட்டி அவனைச் சுடுமென்றார்
ஆமோ டாஅவன் எனக்கு நிகரோதான்
அறியா னோஎன் கீர்த்தியும் செய்கையும்
போடா வெளியே கோட்டைக்குள் நில்லாதே
பிடித்துக் கட்டி அடித்து விடுமென்றார்
மறுத்து வார்த்தை அவன்சொன்ன தேஉண்டால்
வாய்க்குள் நாக்கை இழுத்து அறுமென்றார்
செறுத்து வார்த்தை அவன்சொன்ன தேஉண்டால்
சிங்க நாகக் கழுவிலே போடென்றார்
பொந்தில் பூனை பதுங்கிக் கிடந்தாப்போல்
புல்லெலி போலே ஒளித்துக் கிடவாமல்
எந்த னக்கு இவன்சரி தானோடா

எண்ணா மல்இவன் வந்துபெண் கேட்க
யீந்தங் காட்டுக்குள் கோட்டை போட்டதாலே
எனக்குச் சரியென் றிருக்கிறா னோபயல்
பார்த்தி ருக்கச் சொல்லடா பதனமாய்
படைகள் வந்தால் பொடியாக்கிப் போடுவேன்
ஆல கால விசம்போலே சீறியே
அக்கினி போலே இருகண் சிவந்தவன்
ஓலைச் சீலை போலே கிழித்தவன்
விட்டெறிந் தவனைச் சுட்டுப்போ டென்றான்
கிட்டக் கூப்பிட்டுக் குட்டுரெண்டு போட்டு
கீழ்நா டிப்பல் லுதிர அடித்தார்
போடா ஒட்டாநீ கோட்டைக்குள் நில்லாதே
பிதடியைப் பிடித்துத்தள்ளி போவென்று அனுப்பிவிட்டார்.

ஒட்டன் செய்தி சொல்லுதல்

98. அந்த நேரத்தில் ஒட்ட னவன்ஓடி
அருமை யாய்த்தான் நாம்பிழைத் தோமென்று
சந்தோச மாய்தெய்வம் வந்து காத்தது
தலைபி ழைத்தது கொலைகள் வராமலே
என்று புலம்பி கடிதாய் நடந்தவன்
ஏத்த குண்டுக்கண்ணு ராசாவி னோடே
சென்று மொழியது தான்கொஞ்சம் உரைத்து
செய்தி சொல்ல வாயில் பல்லுமில்லை
நன்றாக நீரங்கே என்னை அனுப்பினீர்
நாயிலும் கேடாய் அடிபட்டு வந்தேனே
வண்டத் தனத்துக்கு என்னைவிட் டீரே
வாயில் பல்லும் பறிகள் கொடுத்தேனே
கன்னத்தோ டேகூடச் சென்னி வலிக்குது
கண்டபே ரெல்லாம் சிருப்பாணி யாச்சுது
மாட்சிமை யுள்ள பூச்சிமை யும்போச்சு
வாய்பிளந் துமொழி சொல்லவும் போகாது
கன்னத்தில் பட்ட அடியது வலுவாலே
கா(ய்)ச்சின கூழும் குடிக்கவே போகாது
உள்ள படிசெய்தி சொல்ல வேணுமானால்
ஒருபனை ஓலை எழுதவும் காணாது
என்றுதான் ஒட்டன் சொன்ன மொழிகேட்டு
கேட்ட பேர்களெல்லாம் தலைகவிழ்ந் தார்களே.

குண்டுக்கண்ணுராசன் போரிட எண்ணுதல்

99. முகமது கவிழ்ந்து வாடி முடுக்குள்ள ராச மன்னன்
செகமதில் இந்தச் செய்தியென் செவியிலே கேட்ப தற்கோ
உகமது விடிந்து திப்போ ஊழ்வினை தானோ வென்று
பகவதி தனைத் தொழுது படையுடன் வாளெடுத் தாரே.

படையைத் திரட்டுதல்

100. உரைறவாளை மிகக்குலுக்கி உடனேஅவன் வண்டுறுக்கி
குடைநகுலன் குண்டுக்கண்ணு ராசனவன் ஏதுசொல்வான்
நெஞ்சில் வடுவைத்தானே நிலையழியப் பறைந்தானே
என்சோறு உண்டவர்கள் இல்லையோடா சேவுகனே
வாருமடா சேவுகனே வலுப்படைநான் போ்வதற்கு
ஆனையோடு குதிரைகளை அலங்கரியும் சேவுகனே
பூனையல்லோ அவனெனக்குப் புலியோடே எதிர்ப்பானோ
கல்லணை வைத்துக்குதிரைக் கடிவாளம் போடுமென்றார்
எல்லாரும் ஒருப்போலேபடை ஏறுமடா இப்போது
குண்டு மருந்துவெடிகள் கூடக்கொண்டு வாருமடா
வண்டியிலே பாரவெடி தானுங்கொண்டு வாருங்கடா
சுட்டிப்பட்டி மகனுடைய தலையறுத்துக் கொண்டுவர
குண்டுக்கண்ணு ராசாவும் கோவித்துக்கொண் டேதுசொல்வார்
கொல்லமட்டும் குமரிமட்டும்-கூண்ட-முட்டப்பதி நாடுமட்டும்
எல்லைமட்டும் எனக்கல்லவோ எதிர்ப்பானோ என்னோடே
வெட்டாத படையும்வெட்டி வேண்டாத கர்ப்பமும்வாங்கி
ஒட்டனையும் பங்கம்செய்தான் உரைப்பாக வார்த்தைசொன்னான்
கோட்டைதட்டித் தீக்கொளுத்திக் கொள்ளையிட்டுத் தானழித்து
தீட்டுபுகழ் தேவியரைச் சிறைஎடுத்து வாரும்மென்றாரே.

குமரப்பராசன் உறுதிமொழி கூறுதல்

101. அந்தவார்த்தை கேட்டபோது குமரப்ப ராசமன்னன்
ஆரவார மாகவந்து அய்யாவைத் தான்தொழுது
தொழுது அடிபணிந்து குமரப்ப ராசமன்னன்
துங்கவிட வாளதையும் அங்கேசென்று தான்பறித்து
பழுது வராமலந்தப் படைகளையும் தானமர்த்தி
பாளையக் காரருடன் வேளையிது அல்லவென்று
அல்லகாணும் என்னுடைய அய்யாவே சொல்லக்கேளும்
அடியேனான் இங்கிருக்க ஆண்டவனே போகணுமோ

சொல்லுகிறேன் செய்திதன்னை எண்ணிஎட்டு நாளையிலே
சண்டிபட்டி மகன்தலையை அறுப்பதற்கு நான்போறாதோ
போருநாம் பொருவதெல்லாம் பொறுத்துக் கொடுவும்சற்றே
பெண்ணைக்கொண்டு வாரதற்கு எண்ணமில்லை என்தனக்கு
சீருடனே நல்லமணம் செய்வதில்லை என்றதற்குச்
சென்றெடுத்துக் கொண்டுவர திறமில்லை யோஎனக்கு
கோட்டைக்குள்ளே நீரிருங்காண் குதிரைப்பெரும் படையோடே
கூட்டப்புளிக் காட்டைச்சுற்றி வேட்டையாட வேணுமெனக்கு
பார்த்திருவும் அய்யாவே ஏற்றவேட்டை யாடிவாறேன்
கோட்டையிலே நீரிருங்காண் குதிரைப்பெரும் படையோடே
மற்றபடை யானதையும் ஒக்கவேஅனுப்பு மென்றாரே.

போருக்குப் புறப்படுதல்

102. வண்டணி மாலை மார்பன் வடிவுள்ள குமரப்ப ராசன்
தண்டமிழ் தகப்ப னோடே தானிருந் தேது சொல்வான்
எண்டிசை தோட்டுக் காரி யைஎடுத் துநானும்
கொண்டு மகள்தான் வருவே னிப்போ கோட்டையி
லிருமென்றாரே.

வஞ்சினம் கூறுதல்

103. கோட்டையிலே நீரிருவும் குதிரைப்பெரும் படையோடே
வேட்டையது ஆடுதற்கு விரைந்துபடை நான்போறேன்
பெண்தராம லிருந்ததற்கும் பேசிமொழி பறைந்ததற்கும்
வன்பாக ஒட்டனைத்தான் வடுப்படுத்தி விட்டதற்கும்
குவளைவிழி யானவள்தான் கோனாண்டி ராசனுட
மகளைஅவன் என்தனக்கு மாலையிடேன் என்றதற்கும்
சபையறிய மணம்முடித்துத் தாராம லிருந்ததற்கும்
அபகீர்த்தி யாய்நடத்தி அவனுடைய மகள்தனையும்
மகளான அவனுடைய வலுதோட்டுக் காரிதன்னை
புகழாக நானெடுத்துப் புதுமையுடன் வராவிட்டால்
குமரப்ப ராசனல்ல கொண்டுவரா தேயிருந்தால்
என்றுசொல்லிக் கையடித்து இருதயத்தி லேயடக்கி
வண்டுறுக்கிப் பல்கடித்த மார்புதட்டிப் பாசையிட்டு
பாசையிட்டு வாதுசொல்லி பாரன்கும ரப்பராசன்
வீசிப்பெரும் படையோடே வேட்டையாட வேண்டுமென்றாரே.

படையின் சிறப்பு

104. வேட்டைக்குப் போகவென்று நல்ல வீரன் குமரப்ப ராசாவும்
தடித்த சேவுகரும் நல்ல தங்கச் சிவிகையும் காலாளும்
காலாளும் கரிபரியும் கம்ப மதநல்ல யானைகளும்
செயலாய்ப் பெரும்படையும் நல்ல சிங்காரத் தோட்டியர்
சேவுகரும்
கூட்டப் பெரும்படையும் நல்ல கொஞ்சும் வெண்சாமரை
யுங்கொடியும்
வேட்டைத் தலைவர்களும் வெகுநாயும் பாசக்கயி றும்குறடும்
நாயும்பல யீட்டிகளும்-நல்ல-வல்லயக் காரரும் கூடவர
நாயும் பலநாயும்-நல்ல-பட்டையம் சொட்டை யுடைவாளும்
எறியும் கவணுகளும்-நல்ல-யீட்டி கடத்தலை வாளுடனே
வாளும் எறிகவணும்-நல்ல-வல்லயக் காரர் பெரும்படையும்
ஆளும் வெகுசனமும்-நல்ல-ஆனை பரிகளும் சேனைகளும்
சேனை படையுடனே-நல்ல-தீரன் குமரப்ப ராசாவும்
ஆனை தனிலேறி குஞ்சி ராமச் சிறுக்க னடப்பமிட
அடப்பக் குடையுடனேபல ஆயுதக் காரர் அணிநெருங்கத்
தடுப்பாய் இருபுறமும் தங்க வெள்ளித்தடிக் காரர்களும்
வெள்ளைவெண்சா மரையுடனே-நல்ல-வெங்கல டம்மானம்
கொட்டிவர
பள்ளிக் குடைகள்நடத்த-சிலர்-பக்கத்தில் கட்டியம் கூறிவர
கூறும் புகழ்வளரும்-வலு-கொண்டை வீரன்கும ரப்பராசன்
ஏறும் மதகரிக்கு-மணி-எட்டுத் திக்கிலும் கிலுகிலென்ன
வீறாக ராவுத்தன்மார்-நல்ல-மெட்டுச்சட்டையிட்ட பட்டாணிமார்
வலுவான பாளையமும்-நல்ல-வாச்சான் குழல்காரர்
தான்வரவே
தாளம் விருதுகொம்பு-நல்ல-கட்டுடன் பட்டுக் கொடிவிருதும்
விருது படையுடனே-படை-வேட்டைக்குப் போகவே கூட்டமதாய்
அதிரப் படைகுதிரை-முன்னே-ஆட்டமாய்த் துள்ளி
அவனும்நிற்க
குதிரைப் படையுடனே கொலுவாய்க் குமரப்ப ராசாவும்
வலுஉடன் வேட்டையாட வருது தேபடை தானங்கே.

படை எல்லையைக் கடத்தல்

105. நாடிப்படை கூடியொரு கோடியாக வேதான்
நாட்டத்துடன் வேட்டைக்குத்தான் கூட்டப்படை யாக
கூட்டப்படை குள்விருது கொடியு மிலங்கவே

கொட்டுடம் மானமது கொடியு மிலங்கவே
அட்டதிசை மெய்க்கமத யானைகள் நடக்கவே
அம்பு வெடிகள்சிலர் ஆயுதம் எடுக்கவே
அடர்ந்து பெரும்படைகள் தொடர்ந்து நடக்கவே
நேருடன் வடக்கேபடை போவதுக்கு நோக்கவே
நேருவழி பாக்குளத்தை நோக்கிஅவர் பார்க்கவே
அடிக்கும் திடிமனது ஆரவார மாகவே
அட்டதிசை யும்அதிர கொட்டுகள் முழக்கவே
இஸ்ட்டத்துட னேபடைகள் கோட்டை கடந்து
எல்லைதான் கடந்துராசன் ஏவியே போகலுற்றார்.

படை சென்ற வழி

106. போகுதே பெரும்படைகள் சாலைவழி யாகவேதான்
புரவிப் பெரும்படைகள் வருகுதே பாருமென்று
வருகுது குதிரையது துருசம் நடையதாக
வன்னிமரச் சோலைவிட்டு வாச்சான் குளமும்விட்டு
கடந்து பெரும்படைகள் நல்லசுக்காம் பாறைவிட்டு
கருத்தாக நாச்சியார் குளமதுவும் தான்கடந்து
வடக்கே நடந்தபடை வாகையடிக் கோவில்விட்டு
வன்னிமர மும்கடந்து வாக்குராணிப் பாறைவிட்டு
வாய்ப்புடன் தீப்பாஞ்சி வடுவச்சி கோவில்விட்டு
வடக்கே வருகுதல்லோ வாய்த்தசாலை வழியாக
தட்டிஏறி யேபடைகள் வெட்டுங்குதி ரையுடனே
தாக்குடனே குமரப்ப ராசனுட தண்படையும்
கோடிப் படையுடனே குமரப்ப ராசாவும்
கொக்கரித்து வாறபடை கெம்மியே விரைந்துகொண்டு
ஓடியே நடந்துபடை ஒத்தபனைக் கோட்டையிட்டு
ஊக்கமுடன் பால்குளமும் உடனே கடந்துபடை
வீறுடனே படைத்தலைவர் வெட்டாமலை வேடுவரும்
வேட்டைத் தலைவருடன் கூட்டநாயும் சங்கிலியும்
ஏறுதியா வுங்கணறும் யீந்தங்காடும் பார்த்துப்பார்த்து
எட்டிஎறி வார்செடியில் கட்டியம்கல் லுமெடுத்து
குத்துச்செடி வட்டக்காடும் குமடுநல்ல பருவதமும்
கூவென் றபயமிட்டுக் கிழித்துத் தான்கலைப்பார்.

வழியில் வேட்டையாடுதல்

107. பருத்திவிளைக் காடுசுற்றிவேட்டை யாடுவா ரன்னேரம்
பாம்பணி குளத்துவழி பார்த்துவேட்டை யாடிக்கொண்டு
சங்கனெரி வட்டக்காடும் தானே பெரியகுளமும்
எங்கும்சுற்றி வேட்டையாட எழும்பின முயல்களோடே
வேகத்துடன் நாய்கள்சென்று காட்டில் முயல்கடிக்க
இளமான் குட்டிகள்துள்ள வளமாய்ச்சில பேரெறிய
வெள்ளமுயல் துள்ளிவிழ வேங்கைநாய் சென்றுகடிக்க
விருகும் கீரிப்பிள்ளையும் விரட்டிச்சிலர் தானடிக்க
பள்ளச்செடிக் குள்ளேசென்று பண்ணியைச்சில பேர்கள்குத்த
பாய்ந்து கலைந்தோடும் புள்வாயைச்சில பேரடிக்க
பப்புச்செடி யைக்கலைக்கப் பரக்கக்கரு வாலிகளைக்
குப்பைச்செடி உற்றுப்பார்த்துக் குத்துவார் வளையான்களை
வளையான் குத்திஎடுப்பார் மானைவிரட் டியடிப்பார்
முளையும் செடிபனையில் நுழையும் விடும்புகழை
முடுக்கத்தோ டேஇழுத்துக் கடிக்கச்சில பேரெடுக்க
ஓடுமிளாத் துள்ளியது உடனேவலை யில்சாட
ஒன்றியிலே சென்றுகுதிக்கக் கண்டுசில பேரடிக்க
ஆடுகுதிரை யானதுவும் ஆனவரை யாடுகளும்
அடித்துஎடுத்துக் [illegible]க்கொண்டு சிலபேர்கள் தான்வரவே
ஓடும்புலி யானதையும் ஒருவன் விரட்டிக்குத்த
உற்றகும ரப்பராசன் மெத்தவெகு மானம்செய்ய
காட்டுப் படைகளோடே கடுவாய்களைக் குத்திச்சாய்க்க
ஆட்டுத்திர ளைப்பிடிக்கும் கூட்டநரி யையடித்து
ஆரவார மாய்ச்சிலபேர் அப்புறம்விட்டுக் கொடுவரவே
கண்டமிரு கம்பிடித்து கையதிலே தூக்கிக்கொண்டு
கடந்து பெரும்படைகள் நடந்துதே தெற்கே நோக்கி
தெற்கவே நோக்கிநல்ல திம்மனும் அடித்துக்கொண்டு
பக்குவக் குழலாளம்மன் பகவதியாள் கோவில்நோக்கி
சீக்கிரம் தோட்டுக்காரியை எடுத்துக்கொண்டு போவதற்கு
உச்சிதப் படைகளோடே உடனவர் நடக்கலுற்றார்.

படை கூட்டப்புளி அடைதல்

108. நடந்துபெரும் படையதுதான் நாட்டாநரி யுங்கடந்து
துடர்ந்துபடை வருகுதடா தும்பைகுளத் தூரும்விட்டு
ஊரும் பிரபுராமும் உடங்காடும் அடித்துழப்பி

சாரிதமாய் வாறபடை சரியுதல்லோ நேருதெற்கு
இடத்தேசுத்தி வாறபடை ஏத்தபண்ணை யூருமிட்டு
கடத்தலைவாள் காரருடன் கத்திகேடை யம்எடுத்து
கொக்கரித்து வருகுதடா கொல்லாங் குளத்துவழியே
வழிநடந்து சடுதியிலே வலத்தேசுத்தி வாறபடை
பொழிக்கரை தானோக்கி போகச்சில பேரைவிட்டு
வாரணிசேர் மலைமார்பன் வடிவன்கும ரப்பராசன்
காரணிக் கருங்குளமும் கன்னங்குள மானதிலும்
ஆட்டத்துட னேபடைகள் ஆயத்துரை யுந்தொடுப்பார்
கூட்டப்புளி தனிலேவந்து கூடிப்படை நிற்குதல்லோ

தோழியரை அழைத்தல்

109. இப்படிப் படையதுதான் இங்கேநிற்கும் நேரமதில்
எண்ணிலமுங் கீர்த்திபெற்ற குமரப்ப ராசமன்னன்
கற்புடைய மாதுமின்னாள் பொன்னுந்தோட்டுக் காரியவள்
கருமவிதி வாறதையும் கன்னிநல்லர்ள் அறியாமல்
சொல்பெரிய தோழியர்கள் தங்களையும் தான்கூட்டி
சுனையது ஆடுதற்கு தோழிமாரை அழைத்தாரே
தோழிமார் தனையழைத்து சுனையது ஆடப்போக
மாளிகை தன்னைவிட்டு மங்கையர் வெளியில்வந்து
நீளிய அரைப்புசீவக்காய் நெல்லிக்காய் பருப்புதன்னை
நாழிகை தனைஎடுத்து நாயகி மார்கள்வந்தார்

தோழியர்

110. வந்தாரே தோழிமார் சந்தோச மாக
வல்லி மரகத வல்லி மீனாட்சி
சுந்தர னாச்சி மணிமுத்து மாலை
தோட்டுக் காரிக்கு அடப்பக் காரியும்
மந்திர மாமணி வீசறிக் காரியும்
வட்டக் குடைக்காரி செம்பட்டுக் காரி
செம்பட்டுக் காரி பிடிமொந்தைக் காரி
மோக முத்துப் பிராமணக் கன்னி

பல்லக்கில் ஏறுதல்

111. பக்கத்திலே பெண்கள் பதினாறு பேர்கள்
பன்னீர்க் குடமதுங் கையிலெ டுத்து
கையிலே மஞ்சணை செப்புச் சிமிழும்
காப்புடன் பச்சை வளையலு மிட்டு
கண்டாங்கிப் பட்டு மூடாங்கும் சூடி
தண்டை பாடகம் சிலம்பு புலம்ப
தாயாரைச் சேர்ந்தவர் ஆசாரம் செய்ய
மஞ்சணை மிஞ்சக் கழுத்திலே பூசி
வந்துமட வார்கள் சந்தோச மாக
வாடைசவ் வாது மணங்களும் பூசி
கொஞ்சிக் குலாவி சுனையாடப் போக
கூடி மாடவர்கள் ஒருபோலே வேதான்
பச்சை நிறத்தாள் மணிதோட்டுக் காரி
பல்லாக்கி லேவந்து ஏறும்நே ரத்தில்

தீநிமித்தம்

112. உச்சதி லேஒரு கெவுளியும் சொல்ல
ஒருத்தி யிடத்தே கருத்தாகத் தும்ம
உச்சித மாய்தோட்டுக் காரியம் மைதான்
ஊழி விதியை இளவறி யாமல்
கெச்சித மாகவே தோழிமா ரோடே
கடந்தவள் கோட்டை விட்டுநடந்தவள் வாறாளென்றே.

புறப்பாடு

113. வீட்டையும் தான்கடந்து வெளிகாணா திருந்தவளும்
கோட்டைவிட்டு சுனையாடிக் குளித்துவிளை யாடுதற்கு
நாயகியாள் தோட்டுக்காரி நாதன்விதிப் படியாலே
பாசையிட்டு ராசமன்னன் பகரம்செய்வ தறியாமல்
ஆழிவண்ணன் திருவருளால் அயன்விதித்த படியாலே
ஊழிவிதிப் படிஇவட்கு உடன்வாற தறியாமல்
சதிகாரன் பெண்கேட்ட தானுமந்த ராசமன்னன்
மதியாகச் சுனையில்வந்து விளைவதுவும் அறியாமல்
என்னமாய்ப் போவதுகாண் என்றுசொல்லி மனதிலெண்ணி.

சுனையாடுதல்

114. வண்ணமுள்ள தோட்டுக்காரி சுனையாடப் போவதற்கு
ஆடவன்னப் பெண்கொடியாள் அழகுதோட்டுக் காரியம்மன்
மூடாவுப் பல்லாக்கிலே முன்னேஅவள் எழுந்தருள
கூடிவரும் தோழியர்கள் குரவையிட்டுக் கொக்கரித்து
கொக்கரித்துப் பூஞ்சுனையில் யாடுவாராம்

ஆடை, அணி அணிதல்

115. ஆடிச்சுனை யாடிவர அம்மன்தோட்டுக் காரியவள்
தோட்டுக்காரி தன்னுடைய தோழிமாரும் தானும்வர
நாட்டத்துட னேகுனிந்து நல்லபட்டால் தலைதுவட்டி
வேட்டையாட ராசமன்னன் விரைந்துவாற தறியாமல்
அறியாமல் பெண்களெல்லாம் அன்பாக ஒன்றுபோலே
குறியாகத் தலைதுவட்டிக் கொண்டையிலே தான்பூசி
சேலைசுற்றிப் பணியணிந்து தோட்டுக்காரி தன்னுடனே
பணியுடனே ஆபரணம் பாடகம் சிலம்புதண்டை
அணியாப ரணங்களும் அழகுநல்ல பணியணிந்து

தோட்டுக்காரி ஆணை

116. அணிந்தபணிச் சேலையுடன் அம்மன்தோட்டுக் காரியம்மன்
பணியணிந்து சிவன்தனையும் பத்தியுட னேதொழுது
தொழுது பணிந்துகொண்டு தோட்டுக்காரி யம்மனவள்
பழுதில்லாத் தோழியரைப் பக்கத்திலே தானழைத்து
வாருங்கடி தோழியரே வார்த்தையொன்று சொல்லக்கேளும்
ஆரவார மாகவேதான் ஆடினோமே நாமளெல்லாம்
அடக்கமாய்ப் பெட்டகத்தில் அடைத்தோர் பட்டாடையை
பட்டாடையை அடைத்துவைத்த பாரமணிப் பெட்டகத்தில்
பெட்டகத்தைத் தானெடுத்தப் புதுப்பட்டு தானுடுக்க
எடுத்துடுத்த பட்டினுட பேரும்சொல்லக் கேளுமினி.

பட்டின் சிறப்பு

117. ஆணித்தறியில் நெய்தறுத்த அஞ்சுநிறப் பஞ்சவர்ணம்
கஸ்தூரிப் பட்டுடனே காடல்நிற மானபுட்டு
கடுவாவரி யானபட்டு காங்குகருப் புச்சிகப்பு
மயில்குழல் தோட்டுக்காரி அம்மனும் மனமகிழ
வங்காளத் திலிருந்து வந்தபட்டு மாணிக்கத்தால்

மாணிக்கப் பட்டுடனே மரகத பட்டுச்சேலை
கொங்குவங் காளப்பட்டு குளவித்துப் பட்டுச் சேலை
மிஞ்சின விலைபெற்ற பஞ்சவர்ண வீரவாளி
வெள்ளைக்காரன் கப்பலிலே விரைவாகக் கொண்டுவந்த
வெள்ளைப்புள்ளிப் பட்டத்துக்கு விலைபதி னாயிரம்பொன்
உள்ளிச் சருகுபோலே ஒருபட்டு விலையைக்கேளும்
ஒன்பது குழத்துக்குப்பொன் ஒன்பதினாயி ரம்விலையாம்
தூத்துக்குடி மேற்றன்செய்த சீத்தைவரிப் பட்டொன்றுக்கு
ஆத்தூருச் சாலியன்நெய்த அதியப்பட்டு ஒன்றதுக்கு
பதினாயிரம்பொன்விலையும் ஒருஆனைக்குட்டி யும்கொடுத்தார்
கும்பகோணம் தன்னிலுள்ள செம்புச்சரிகைப் பட்டதுக்கு
குருணிப் பணமும்ஒரு குதிரையும் தான்கொடுத்தார்
வாலிபன் வடநாட்டு சாலியன்நெய்த பட்டதுக்கு
மதுரை புதுப்பணத்தை வாரிச்சொரிந் தேகொடுத்தார்
கொடுத்தாரே பொன்பணத்தைக் கோனாண்டி ராசாவும்.

பட்டின் வகை

118. கொண்டைப்பட்டுப் போதுமோ குவலயத்தில் வந்தாயோ
கொஞ்சம்குறை யுண்டோசொல்லும் மிஞ்சின பட்டுச்சொல்ல
வர்ணமுள்ள தோட்டுக்காரி அம்மனவள் உடுப்பதற்கு
வங்காளப் பட்டுவர்ணம் சிங்காரமாய் இன்னும்கேளும்
இன்னும்நான் சொல்லக்கேளு வர்ணமுள்ள பட்டின்பேரை
இந்திரலோ கத்திலுள்ள மந்திரவீரவாளிப்பட்டு
அரியக்கரை நாட்டிலுள்ள ஆனைக்கண் பட்டுச்சேலை
அப்படிப்போல் பட்டுவர்ணம் அடியேநான் அறியமாட்டேன்
பெண்ணரசி தோட்டுக்காரி அம்மைநாய கிதனக்கு
போதுமோ போதாதோ புலவன் படித்ததுதான்
இன்னும்பட்டுச் சொல்கிறேன் எல்லோரும் இருந்துகேளும்
இலங்கும் பெரியபட்டு சலங்கைப் பூவாளிப்பட்டு
முட்டநிற நூல்நூத்து மூணுமுழம் நெய்தபட்டு
முன்சிறக்கும் தோட்டுக்காரி அம்மனவள் உடுப்பதற்கே
கோலியான் நூல்நூற்று குழலி டைத்தபட்டு
அள்ளிப் பணம்கொடுக்கும் புள்ளிபோட்ட பட்டுச்சேலை
ஆறுமுழம் நூறுபணம் அறுவங்கோட்டுப் பட்டுச்சேலை
அடியேன் அறிந்ததிலே ஆறிலொன்று பேரும்சொன்னேன்.

தோழியர் ஆசிரியரின் சிறப்பைக் கூறுதல்

119. இராமசுவாமி நாடார்சொன்ன தமிழைத்தான் தள்ளாதிங்கோ
வாட்டமற்ற தோட்டுக்காரி அம்மனுட தோழிப்பெண்கள்
மகிழ்ந்து சிரித்தவர்தான் தோட்டுக்காரி யோடேசொல்வார்
இக்கதையைச் சந்தோசமாய் ஏடெழுதி சேர்த்துவைத்த
இராமசுவாமி நாடார்சொன்னார் ஏற்றவில்லுப் புலவனுக்கு
என்ன வெகுமதிதான் வர்ணவரி சைகள்செய்தார்
காசினியோர் தான்புகழக் கனகநாட்டி லேயவரும்
காளிவாய்ப் புத்திரர்க்குக் கற்றவர்க்கு உற்றவள்ளல்
வள்ளலென்றும் வலங்கைத்தலைவன் வாய்த்தரெட்டைச்
சங்கும்பெற்றோன்
வையகத்தில் இராவணனை வாய்த்தசிறை கொண்டுவைத்தோன்
சோழனோடே தானெதிர்த்து கூடைதொடேன் என்றதுவும்
துங்கபரி வீரனவன் துரைசிங்க மானவள்ளல்
வள்ளலென்றும் வந்துதித்த இருளன் மகிபதிக்கு
மக்களென்று வந்துதித்த மகனாக நானொருவன்

குமரப்பராசன் படையை அழைத்தல்

120. ஒக்கவே சந்தோசமாய் உடனே கொடுத்தாடை
ஒக்கவே எடுத்துடுத்து உடனேநிற்கும் நேரத்திலே
மிக்கவே சிறுக்கன்ஒருவன் வெள்ளம்கோரவே வந்தானங்கே
குக்குளித்துக் கொடுத்தாரே கூட்டமான பெண்களெல்லாம்
குளித்துநின்ற சத்தமதைக் கொழுவான ராசமன்னன்
அத்தலத்தில் சுனையாட அவள்வாற வழிதனிலே
ஒத்தையிலே தானொருவன் ஒளித்திருந்து பார்த்திருந்தான்
கொம்பாளாய் இருந்தவனும் குமரப்ப ராசனுக்கு
வெம்பியே அவன்சடுதில் வெள்ளைகாட்டி யேஅழைத்தான்
அழைத்தானே பெரும்படையை அரைநொடியில் வாருமென்று
வளைத்தானே பாரதப்போர் விடியுதடா சடுதியிலே
பாரதப்போர் முடிவதெல்லாம் பைங்கொடியாள் அறியாமல்
ஏதுவரப் போகுதென்று ஏந்திழையாள் நடந்தாள்.

சுனைக்குச் சென்ற வழி

121. நடந்து சடுதியிலே நல்லதோழி மாருடனே
நாட்டுக்கல் விளையும்விட்டு சாட்டுப்பெரும் பாதைவிட்டு
மடந்தைக் கிளிமொழியாள் நடந்து சடுதியிலே

வன்னிமர மும்கடந்து கன்னிமார் குளமும்விட்டு
குளமும் பெருவழியும் வளமாய் இளமரமும்
கூடும்சோலை யோடேஅவள் நாடித்தென்னந்தோப்பும்விட்டு
அளமும் பொழிக்கரையும் அளக்குடி யானதுவும்
அந்தமுட னேயவளும் செந்தாழை ஓடைவிட்டு
பலிப்புநன்றாய் வாய்த்ததுகாண் பாவம்சற்றே இருக்கிறது
செந்தாழைப்பூ ஓடைவிட்டுத் திரவியப் பாறைவிட்டு
தேன்மொழியாள் தோட்டுக்காரி சிறந்தபூஞ் சுனையில்வந்தாள்

சுனையை அடைதல்

122. வந்தார் சுனையில் நீராட மடவார் தோட்டுக் காரியம்மன்
கூந்தல் முடியில் எண்ணையிட்டுக் குளிரத் தேய்த்து அரைப்புமிட்டு
சந்த முடனே சீக்கிரத்தில் தடமாய்ச் சுனையில் மடவார்கள்
அந்த முடனே குளித்து அழகுபூஞ் சுனையில் வந்தாரே.

ஒட்டன் குமரப்பராசனுக்கு உரைத்தல்

123. ஏழுபடித் துறைதனிலே இறங்கிச்சுனை யாடுவதை
கோளனொரு பாவிகண்டு குமரப்பனுக்கு உரைத்தான்
சீரிலங்கும் மார்புசனே சிறந்தபுகழ் ராசமன்னா
வாருமையா சுனைதனிலே வந்தாள்தோட்டுக் காரியென்றான்

குமரப்பன் படையுடன் கூடி நிற்றல்

124. என்றமொழி தனைக்கேட்டு இலங்கும்கும ரப்பராசன்
நன்றாச்சு நாமள்வந்த நல்லவேட்டை வாய்த்ததென்று
தேடிவந்த வேட்டையது சிறந்தபலிப் பாச்சுதென்று
நன்றாச்சு நன்றாகப் பாவம்சற்றே இருக்குதென்று
சலிப்பாக இருக்குதென்ன தலையில்விதி உணர்ந்ததுண்டால்
ஆனாலும் நாமள்சற்றே அஞ்சிச்செய்ய வேணுமென்று
தேனாரை நாம்எடுத்துச் சேர்த்துக்கொடு போறதற்கு
எண்ணாமல் எடுத்ததுண்டால் இதுபாவம் ஆகுமென்று
சிறுக்கனுடன் வார்த்தைசொல்லித் தெளிந்தவர்கள் அங்கேநிற்க

ஒட்டன் நீர்கோர வருதல்

125. மறுக்கும்மின்னாள் மங்கையர்கள் வரும்விதியை அறியாமல்
அம்மனும் கெங்கைதனிலே அன்புடனே ஒருபோலே
வருக்கமாய்ச் சுனைதானாடி மங்கையர் பட்டுடுத்தார்
பட்டுத்தான் உடுக்குமட்டும் பக்கத்திலே ஒளித்துநன்றாய்
விட்டதொரு ஒட்டன்தானும் மொந்தையைப் பிடித்துக்கொண்டு
ஒன்றிஒரு மரத்தினோடே ஒளிந்தவனும் பார்த்துநின்றான்
நின்றவன் தண்ணீர்கோரி நிசமுடனே வருமுன்பெண்கள்
நன்றாகச் சுனையுமாடி நலமுடனே கரையேற
மீண்டுமே சிறுக்கனங்கே - வெள்ளங் - கோரவரும் முன்னேதான்
ஒன்றுபோல் மடவார்தானும் உடனவர் பட்டுடுத்தார்
பெண்ணார்கள் குளிக்குமட்டும் பொறுப்போம்
சிறுக்காயென்றார்
உண்ணாமலை இராணியர்க்கும் உடையவர்க்கும் ஏறாது
வன்பாகச் சென்றெடுத்து வலக்காரம் செய்ததுண்டால்
பெண்பழிதான் நம்மைவிட்டுப் போகாதே தலைமுறைக்கும்
ஆனாலும் நானுமே அருளுகிறேன் ஒருவார்த்தை
மானார்தன் வாயாலே வம்புசொல்வா ளேயாகில்
தேனாரைச்சென்றெடுத்துச் சீக்கிரம்கொடு போகையிலே
தோட்டுக்காரி நம்மைஒரு தூசணங்கள் சொல்லுவதை
கேட்டுவரச் சொல்லிவிட்டார் கச்சிதமாய்ச் சிறுக்கனைத்தான்
வேட்டையாடி நாவுலர்ந்து வெள்ளம் தவிக்குதெனவே
தோட்டுக்காரி நீராடும் சுனைதனிலே இப்போசென்று
வள்ளலென்றும் மகராசன் வாய்த்தகும ரப்பராசன்
வெள்ளிமொந்தை தனையெடுத்து வெத்திரை சிறுக்கன்கையில்
கொஞ்சுமொழி தோட்டுக்காரி அவள்குளிக்கும் சுனைதனிலே
குஞ்சிராமா யிப்போவெள்ளம் கோரிக்கொடு வாருமென்றார்
ஆண்டவன்தன் சொல்கேட்டு ஆமெனவே ஓடலுற்றார்
ஓடிப்போய் பூஞ்சுனையில் உள்புகுந்து முன்னேசென்றான்

தோட்டுக்காரி வினவுதல்

126. நாடிய தோட்டுக்காரி நவிலுவாளாம் ஒருவார்த்தை
ஆரடவா நீசிறுக்கா அஞ்சாம லிங்கேவந்தாய்
தூரநில்லு நீபோடா சுனையாடிப் போகுமட்டும்
ஆறுனைத்தான் இங்கேவிட்டார் ஆடும்சுனை வாவியிலே
தூரநில்லு தூரநில்லு சுனையில்வந்து முடுக்காதே

பெண்ணரசு சுனையாடும் பூந்தோட்டக் கரைதனிலே
எண்ணாமல் வருவாயோ என்னைச்சற்றும்கவனியாமல்
பாருக்குள்ளே முடிசூடி பலபேர்க ளிருப்பதுண்டு
ஆருக்கடா நீர்கோர அஞ்சாம லிங்குவந்தாய்

ஒட்டன் விடை

127. அமரில்வெட்டித் தான்துரத்தும் அழகுமுடிக் காவலர்க்கு
குமரப்ப ராசனுக்கு வெள்ளம்கொண்டு போகவந்தேன்
என்றுசொன் னான்சிறுக்கன் ஏதுசொல்வாள் தோட்டுக்காரி.

தோட்டுக்காரி தோழியரை ஏவுதல்

128. குமரப்ப ராசனென்றால் கொம்புரெண்டு உண்டோடா
துங்கமத யானைக்கல்லோ துலங்கும்கொம்பு முளைத்திருக்கும்
உங்களுட ராசனுக்கு உச்சியிலே கொம்பு உண்டோ
முடுகிவந்த சிறுக்கனைத்தான் - என் - முகனையுள்ள தோழியரே

அடியுங்கடி சென்னியிலே அப்பாலே விரட்டுங்கடி
கல்லெடுத்து எறியுங்கடி - கடி - நாயைவிட்டு ஏவுங்கடி
பயல்பல்லைப் பறியுங்கடி - மா - பாவிவிட்ட சிறுக்கனைத்தான்
வெள்ளிமொந்தை யானதையும் விரட்டிப்பறித் துடையுங்கடி.

குமரப்பன் படையை அழைத்தல்

129. என்றுசொல்லத் தோழிமார்கள் இவர்திரண்டு விரட்டுவாராம்
சென்றுசொன்னார் சடுதியிலே செய்தியைக் கேட்டெழுந்தார்
வண்டுறுக்கிப் பல்கடித்து வாறதெல்லாம் வரட்டுமெனவே
பெண்டுகளோ நம்மளைத்தான் பிழைவார்த்தைச் சொன்னதெல்லாம்

கொண்டுவர வேணும்படை கூடியே வாருமென்றார்
வாருமென்ற சேவுகரே வளையுமடா சுனைக்கரையை
வாறது வரட்டுமவள்தான் வீறுநான் அறியவேணும்
ஆரவார மாகவேதான் குமரப்ப ராசமன்னன்
ஆனைதன்னில் ஏறிக்கொண்டு ஆலவட்டம் வீசிக்கொண்டு
அடர்ந்து படைநெருங்கப் படர்ந்துகுடை தான்நெருங்க
மடந்தைக் கிளிமொழியாள் மாதுதோட்டுக் காரிதன்னை
வந்தெடுத்துக் கொண்டுவர சந்தோசமாய் வாருமென்றார்

சேவுகர் பூஞ்சுனையை வளைத்துக்கொள்ளுதல்

130. கோடிவிரு துப்படையும் - பல - கும்பினிச் சேவுகரும்
குமரப்ப ராசமன்னன் கோடிப்படை யோடேவந்து
மடியாமல் பூஞ்சுனையை வந்தவர் வளைந்துகொண்டார்

படையைக் கண்டு தோட்டுக்காரி அஞ்சுதல்

131. வந்திடும் படையைத் தோட்டுக்காரியும் கண்டாளப்போ
கண்டுமனம் மிகப்பதறி காரிகையாள் தோட்டுக்காரி
இன்றுநமக்கு ஊழிவிதி எல்லைமுடி வாச்சுதென்று;
வாடிமெத்த மனம்பதறி மயங்கிமனம் தள்ளாடி
கோடிமனம் தள்ளாடி கொம்பனையாள் தோட்டுக்காரி
மதிசூடும் ஈஸ்வரனே மங்கையுமை பங்காளா
விதியோநான் சுனையாட வீணிலேவந் தேன்சிவனே
சதுரமுடன் சுனையாட தலத்தைவிட்டு வரும்போது
நானதிலே கண்டதடை எண்ணிச்சற்றும் பார்த்தேனில்லை
வருமம்உண்டு இவனும்நம்மை வம்புசெய்வான் என்றுசொல்லி
பொன்வண்டுபோல் விரைந்தெழுந்தாள் பூஞ்சுனைக்குள்
நின்றுகொண்டு

தோட்டுக்காரி குமரப்பனுக்கு அறிவுறுத்தல்

132. சேலைசுற்றும் பூங்குழலாள் துடியிடையாள் தோட்டுக்காரி
மாலைநல்ல பூவதுபோல் வாடிமெத்த மனம்பதறி
அடிகி முடிகிவாற அரசனைக்கண் டேதுசொல்வாள்
துடயுடைய காவலனே சுனையில்வந்து முடுக்காதேயும்
முடிகியெந்த னிடத்தில்வந்தால் மோசம்வருங் காண்உமக்கு
கடுகவினை சூழ்ந்துவிடும் காரியமும் தவறாது
தவறுவரும் என்னாலே - உன் - தலைஇழக்கும் கண்டீரோ
வீறுபடை யோடேவந்து வினைவளர்க்க வேண்டாங்காண்
வேண்டாங்காண் என்னைவந்து வீறுசெய்வீ ரேயாகில்
ஆண்டவனே இன்றுமக்கு அனத்தம்வரும் கண்டீரோ.

குமரப்பராசனின் வீர உரை

133. அனத்தம்வந்து விடிந்தாலும் அந்தரத்தில் மடிந்தாலும்
உயிரிழந்து படையிழந்து உலகம்அழிந்து போனாலும்
வயிரமுடன் நானும்உன்னை மாலையிடாமல் போவேனோ.

அகலிகையால் இந்திரனும் ஆயிரம் கண்ணானான்
சகலதலைப் பிரமன்ஒரு தலைஇழந்தார் பார்வதியால்
பண்டும்ஒரு நீலியாலே பள்கைநல்லூர் அழிந்ததுகாண்
கண்டிருந்தும் அறியாமல் கயமதிலே சாடவந்தீர்
அப்படிப்போல் என்னாலே அரசமன்னா மடியாதே
செப்பினசொல் கேளுமையா திரும்பிவிடும் கோட்டையிலே.

தோட்டுக்காரி எதிர்த்துரைத்தல்

134. மாலையிடுவீர் உம்முடைய மாமன்மகள் குமரியிருக்க
சாலைமொழி என்னோடே தான்பறைந்தால் மோசம்வரும்
மோசம்வரும் மென்றுசொல்லி மொழிக்குமொழி தான்பேசி
ஞாயமல்ல இதுஉமக்கு நம்மைப்பயம் காட்டாதேயும்
வீட்டெலிக்கும் காட்டெலிக்கும் வெருகதுதான் பயப்படுமோ
ஆட்டுக்குட்டிக்கு ஓனாய்தான் அஞ்சுமோ கோனாரே
அஞ்சாமல் முடிசூடி அரசாள மாட்டாமல்
கொஞ்சப்புத்தியாகவந்து கொலைப்படவும் தொடுத்தீரே.

குமரப்பராசாவின் மறுமொழி

135. தொடுத்தமலர் முடியாமல் தொடுத்தினிமேல் போறதில்லை
எடுத்தமலர் முகராமல் எடுத்தெறிந்தும் போவேனோ.

தோட்டுக்காரி அறவுரை கூறுதல்

136. தன்பூவைத் தானெடுத்து தான்முகந்தா லேமணங்காண்
வன்பூவைத் தான்முகந்தால் வண்டிருந்து கொட்டிவிடும்
வண்டாடுமண முண்டிருந்தால் வருவேனோ நான்விரும்பி
கண்டிருந்தும் எச்சிதன்னைக் கவிழ்ந்திருந்தும் தின்பார்களோ
சொல்லும்மொழிக் கெல்லாம்நீர் சொல்லுவீர்காண் உத்திரங்கள்
நல்லவண்ணம் புத்தியொன்று நான்சொல்லக் கேளுமென்றாள்
பண்டுமுன்னோர் பெரியோர்கள் பட்டசளன் பொருள்கேளும்
கொண்டமையல் தான்பிடித்துக் கொடுமையுடன் இறந்தவர்கள்
இறந்தவர்கள் புதுமைதன்னை இயம்புகிறேன் கேளுமினி
இறந்தாரே சிலபேர்கள் பெண்ணாலே பேதலித்து
பெண்ணாலே இறந்தவர்தம் பெருமையது நானுரைக்க
மண்ணாளும் காவலனே வளமைசொல்லக் கேளுமையா
கேளுமையா பழமொழிகள் கீர்த்திகளும் செய்திகளும்
வாழும்வள்ளி ஊர்தனிலே மகுடமுடி பாண்டியர்கள்

ஆளும்படை யோடிருந்து அரசாளும் அன்னாளில்
வன்னமுள்ள வடிவழகன் வாய்த்தகுல சேகரன்தான்
கன்னடியன் மகளாலே கனகஉயிர் இறந்தார்கள்
சீதையொரு பெண்பிறந்து தென்னிலங்கை அழிந்ததுகாண்
மாதேவி யாலேயல்லோ மடிந்துவிட்டான் கோவலவன்
வண்ணமகள் கண்ணகியால் மதுரைநகர் அழிந்ததுகாண்
எண்ணரிய நூற்றுவரும் இறந்தாரே துரோபதையால்
அகலிகையால் இந்திரனும் ஆயிரம் கண்ணானான்
சகலதலைப் பிரமன்ஒரு தலைஇழந்தார் பார்வதியால்
பண்டும்ஒரு நீலியாலே பளகைநல்லூர் அழிந்ததுகாண்
கண்டிருந்தும் அறியாமல் கயமதிலே சாடவந்தீர்
அப்படிப்போல் என்னாலே அரசமன்னா மடியாதே
செப்பினசொல் கேளுமையா திரும்பிவிடும் கோட்டையிலே.

தோட்டுக்காரிமீது யானையை ஏவுதல்

137. கோட்டையிலே உன்னையும்நான்-என்-கூடக்கொடு போகாமல்
வேட்டையாட வந்துவிட்டு-உன்னை-விட்டுவிட்டுப் போவேனோ
மையாரும் கண்ணழகி வலுதோட்டுக் காரிதன்னை
கையால்நாமள் தொட்டக்கால் கற்பழியு மென்றுசொல்லி
வலியபுகழ் மலைமார்பன் வாய்த்தகும ரப்பராசன்
கற்பழிக் காமலேதான் காரிகையை எடுப்பதற்கு
ஆனைதன்னைப் பாசைசொல்லி அவளுடைய முன்னேவிட்டார்
மானனை மின்னாளை மதயானை துதிக்கையினால்
பட்டத்துக் கருத்தானை பேர்பெரிய மதயானைதான்
தொட்டெடுத்த தேயானை தோட்டுக்காரி தன்தனையும்
அத்தனரு ளாலவளை ஆனைசென்று தானெடுத்து
மதகரிதான் வைத்திடவே மடவாள்தோட்டுக் காரியைத்தான்
வம்புசொன்ன மாதுமின்னாள் வலுதோட்டுக் காரிதன்னை
கொம்பமத யானையது சென்றெடுத்துச் சடுதியிலே
பதிவான மாதுமின்னாள் பாவைதோட்டுக்காரி தன்னை
மதயானை மேலேவைத்து மத்தகத்தி லேஇருத்தி
எடுத்துமத்த கத்தில்வைத்து இலங்கும்பட்டால் சூடிக்கொண்டு
தொடுத்துப்படை சூழ்ந்துவர தோட்டுக்காரி அம்மனைத்தான்
படைகளெல்லாம் புடைசேரும் பல்லாக்குக் காரருடனே
அடையாளக் கொடியுடனே அச்சாவெடி யும்தீர்த்து
வெற்றிக் குரவையிட்டு-வெள்ளி-வெண்சாமரை வீசிக்கொண்டு
கத்திகேடையக் காரருடன் கனகபடை யோடவரும்

சடுதியிலே தானவரும் தட்டா ரிரப்பதிலும்
மடியாமல் பெண்ணும்கொண்டு வந்தாரே கோட்டையிலே.

தோட்டுக்காரியை மாடப்புரைதனில் அடைத்தல்

138. வேட்டையும் ஆடி மன்னன் வீரிய மாக வேதான்
கோட்டைக்குள் பெண்ணும் கொண்டு குமரப்ப ராசன் தானும்
நாட்டிய படைக ளோடே நாழிகை தன்னில் வந்து
பூட்டதும் திறந்து மாடப் புரைதனில் இருத்து மென்றார்.

குமரப்பராசனை வரவேற்றல்

139. கனகமணி மண்டபத்தில் கதவேழும் தான்திறந்து
கதவேழும் தான்திறந்து காரிகைதோட்டுக் காரிதன்னை
ஆக்கமுள்ள தோழிமார்தனையும் அழகுதோட்டுக் காரியையும்
வாழும்கும ரப்பராசன் மணிதோட்டுக் காரிதன்னை
ஏழறைக் குள்ளேவைத்து இருத்திநல்ல தாள்பூட்டி
மண்டபத்துக் குள்ளிருத்தி வலுகாவல் சூழவைத்து
குண்டுக்கண்ணு ராசாவும் கொந்தளப்பூ ராசாவும்
பட்டணத்து ராசாவும் பாரத்தெய்வ ராசாவும்
அட்டதிசை தான்மகிழ என்அருமைக் குமரராசன்
இட்டபாசை யும்அழித்து இயலங்கும்கும ரப்பராசன்
வந்தான்காண் எந்தன்மகன் வசைகாத்தான் என்றுசொல்லி
சந்தோசமாய் மகன்தனக்குத் தானே வருகைசெய்தார்
கொலுவாகப் பெரும்படையும் கொடுத்தாரே பரிசைகளும்
வலுவாகக் கோட்டையிலே வரும்படைக ளிதம்பார்க்க
நலமாயிருந்து ராசாக்கள் நன்றாய்இருந்து விபரமிட்டார்

கோனாண்டியை எதிர்க்கப் படை திரட்டுதல்

140. கோனாண்டி ராசனவன்-செய்தி-கேட்டால்இப் போவருவான்
வருவான் படைகள்கொண்டு கோனாண்டி ராசமன்னன்
வசமாகக் கோட்டையிலே வலுவாக இருக்கவேணும்
ஒருப்போலே கோட்டையிலே பெரும்படையோ டிருக்கவேணும்
ஒழுங்குடனே பாளையங்கள் ஒருகோடி தான்வேணும்
பாளையமும் பட்டாளமும் பலவகையாய்ச் சேனையுடன்
பாரவெடி யானகுழலும் பதித்துவாரும் படையையிப்போ
தயிரியமாய் பார்க்கவேணும் படையிது காணாதென்று
மெள்ளப் படைகளைத்தான் கொல்லையைவிட் டழைத்தாரே.

பல நாட்டவர் படையைத் துணைக்கு அழைத்தல்

141. கொல்லத்தி லுள்ள மலையாளப் படைக்கும்
கொட்டு வடுகர்க்கும் கனகத்தொட்டி யர்க்கும்
இல்லத்து வில்வீர மலையா ளர்க்கும்
ஈடான ஊத்துமலை வன்னிய ருக்கும்
வன்னியர் கொண்டாங் குளத்திலுள் ளோர்க்கும்
வடகரை நாட்டு மறவர் படைக்கும்
பாரினில் பெரிய படைத்தலைவன் தனக்கும்
ஊத்து மலைநல்ல வன்னிய ருக்கும்
கம்பளத் தொட்டிய ருக்கு மெழுதி
கருநாடகப் படைக்கு ஓலையு மிட்டார்
கம்பளச் சேவுகர் போதாது என்று
தஞ்சர்ஊர் முகிலனை அழைத்தார்
கொஞ்சாமல் லப்படை வந்த திரையர்கள்
கோடி யறுபது நாற்பது லெட்சமும்
கொம்பாஞ்சி சேவுகரும் சூழவெள்ளைக் காரர்களும்
கூட உதவிப் படைக்காக வந்தார்
அப்படி யேபடை சீரிட்டு நிற்க.

கோனாண்டி ராசன் செய்தி அறிதல்

142. அறிந்தானே கோனாண்டி ராச னன்னேரம்
சுனையாடப் போனதுவும் சூழ்ந்தெடுத்துப் போனதுவும்
அனைவோரும் தானறிய-என்-அருமைமக ளைஎடுத்தான்
வேகத்தோடே என்மகளை-இவன்-எடுத்துக் கொடுபோக
நாட்டமுட னேபடைகள் நாழிகையில் வாருமென்றாரே.

படையுடன் செல்லுதல்

143. வாருமென்று தன்படையை வருத்தினான் சடுதியிலே
வங்காளரும் சிங்களரும் வன்னியரு மிராட்டியரும்
சேரவே பரிகரியும் செங்கண்மத யானைகளும்
ஆனைகையில் சங்கிலியும் அடிக்க இரும்புலக்கை
சேனையும் பெரும்படையும் செருமி நெருங்கிவர
திக்கெட்டுக் குடைநிகழ்த்த திடீரென் றோசையிடவே
பாரக் கரிபரியும் பதினெட்டுப் பாளையமும்
பாருபாரு பாரெனவே படைமுகத்துச் சேவுகரும்
பரந்து பெரும்படைகள் நிறைந்து வருகுதல்லோ

வாரமுள்ள ராவுத்தன்மார் வன்னப்பரி ஏறிவர
வைத்தவெடி யானதுவும் மெற்றயிடி போல்முழங்கி
முழங்கிடவே டம்மானங்கள் வெங்கலத்தம் பட்டம்கொட்ட
விருதுக் கொடியுடனே குதிரைப் படைகள்வர
நடந்து சடுதியிலே முட்டப்பதி நாடும்விட்டு
கட்டுடன் வந்துவளைந்தார் தட்டாரிரப்புக் கோட்டையிலே

போர் செய்தல்

144. படர்ந்து நிறைந்துதல்லோ பட்டணத்தார் ஓடைவிட்டு
பாலாறோடை தன்னில்வந்து காலாளும் நிறைந்துதல்லோ
அடர்ந்தபடை கோட்டையைத் தட்டிஏறி வெட்டவென்று
ஆரவார மாகவேதான் வளைந்தாரே கோட்டையிலே
வளைந்தபடை யைக்கண்டு வலுபீரங் கியைத்தீர்த்தார்
மண்டையிலே குண்டுபட்டு மடிந்தாரே கோடிபடை
இருந்துபே ரெண்ணாது எல்லோரும்ஒரு போலேதான்
ஏறிப்படை வெட்டும்முன்னே எதிர்த்துமல்லோ
போர்கள்செய்தா

கொந்தளப்பூ ராசனுடன் கோன்ாண்டி ராசாவும்
குதிரையி லேறிப்படை குதித்துமே வெட்டுவாராம்
வெட்டிச்சிலர் பட்டுவிழ வெருண்டுசில பேர்கள்ஓட
ஓடும்பேரைத் தான்பிடித்து முதுகிலே போடுமென்றார்
காடுகள் தடவரையும் கல்லுங் கிடங்கும்குமடும்
கண்டபேரைத் துண்டமிட்டு கத்தியாலே வெட்டுவாராம்.

போரில்பட்டவர்கள்

145. வெட்டுப்பட்டு விழுவாரும் தட்டுப்பட்டு விழுவாரும்
காலும் சதையுமற்று வாளும் சடைக்கவெட்டி
வாணலெச்சம் பேர்கள்பட்டார் வாளுக் கிரையாக
பட்டணத்து ராசன்பட்டான் முச்சைமுத்து ராசன்பட்டான்
பக்கத்து ஊத்துமலை வன்னியனும் கூடப்பட்டான்
கூடஉதவிப் படைக்குவந்த கொண்டையங் காட்டாரும்
மலைநாட்டு வன்னியரும் மறவர் குறவர்களும்
கொந்தளப்பூ ராசன்ஓடிக் கோனாண்டி ராசனைவெட்ட
குத்துவெட்டும் பட்டுச்சிலர் கோடிப்படை தானிறக்க
கம்பளத் தொட்டியரும் கருநாடகப் படைகளுமே
வம்பதிலே லெச்சம்பேர்கள் மடிந்தா ரொருகளத்தில்

குமரப்பராசன் இறவாதிருத்தல்

146. கண்டுபயந் தோடுவானாம் கொந்தளப்பூ ராசாவும்
ஓடிப்போற வேளையிலே ஒருவன்வெடி யாலேசுட்டான்
குண்டுபட்டுக் கொந்தளப்பூ ராசனும் மடிந்துவிட்டான்
மடிந்ததே சேனையெல்லாம் மாதுதோட்டுக் காரியாலே
மன்னன்கும ரப்பராசன் வடுப்படாமல் நின்றானே.

போர்க்களம்

147. அவருட படையும் இவருட படையும்
அணிநெ ருங்கியே பொருதவர் பட்டார்
சமரிலே முடுகியே பொருதவர் பட்டுச்
சாடி உதிரங்கள் ஆறாய் ஓட
உடனே காகமும் கழுகும் குடிக்க
கூடியே கூளிகள் கழுகும் சேர
கோட்டையும் முட்டப் பதியும் அழிய..

முட்டப்பதி அழிவு

148. பட்டண மாகிய முட்டப் பதியும்
பாழாய்க் கோட்டை அழிந்தது பாராய்
கோட்டைகள் மண்டபம் மேடைக ளெல்லாம்
குரைகடல் வந்து வளைந்தது பாராய்
கட்டாய் மண்டபம் மேடைசு ளெல்லாம்
கடலது வந்து மூடுது பாராய்
சூட்டிய விதியால் கோட்டையு மழிந்து
சுழிகடல் வந்து வளைந்திடு மாமே.

தோட்டுக்காரி அழிவை அறிதல்

149. வளைந்துகட லுள்ளாக மண்மாரி தான்பொழிய
பொழிந்துமண் மாரியது பொழிக்கரையும் மூடிடவே
படைவீரர் மடிந்ததுவும் பரராசன் பட்டதுவும்
சடைவாகத் தானிருந்து தன்னாலே மாண்டதுவும்
மாண்டவர்கள் எல்லோரும் மடிந்து பலசனமும்
ஆண்டிருந்த கோட்டையெல்லாம் அழிந்தவர்கள்
போனதெல்லாம்
எல்லோரும் தான்மடிந்து இறந்துவிட்ட செய்தியெல்லாம்
அல்லாரும் குழல்மடவார் அறிந்தாளே தோட்டுக்காரி.

அழிவைக்கண்டு வருந்தி இறக்கத் துணிதல்

150. அறிந்துதலை யோடடித்து அபயமிட்டுத் தானழுதாள்
முறிந்தமரம் போல்விழுந்து முட்டிநிலத் தில்புரண்டு
புரண்டழுது தான்விழுந்து பொன்னுந்தோட்டுக் காரியம்மன்
திரள்படைகள் நம்மாலே சேனையும் இறந்துபோச்சே
கனிவாய் மொழியழகி கன்னிதோட்டுக் காரியம்மன்
இனிஇருந்தா லாகாது இறக்கவேணு மென்றுசோரக்
ஏழுகத வும்திறந்து குரவையிட்டு மடமடவென்று
ஆர்க்கமுடன் நடந்தோடி அலைவாய்க்கரை தன்னில்வந்தாள்.

தீப்பாய வேள்வி வேண்டுதல்

151. அலைவாய்க் கரைதனிலே அழகுதோட்டுக் காரியம்மன்
சிலைபோல் வடிவழகி தீப்பாய வேணுமென்று
தீப்பாய வேணும்நமக்குத் திருவேள்வி வேணுமென்று
வாய்ப்பாக வாய்புலம்பி மகதேவ னைநினைத்தாள்
பகவதியே யீஸ்வரியே படைத்தபர மேஸ்வரனே
செகமதிய மகதேவா திருவேள்வி தாருமென்றாள்
தாருமெனக் கொருவேள்வி சடுதியிலே எனக்கெனவே
வாரிலங்கும் தனமடவார் வளர்தோட்டுக் காரியம்மன்
ஆரையெல்லாம் அடிதொழுது அழுதிரங்கி வரங்கேட்டாள்

வேள்விக் குழி தோன்றுதல்

152. தென்சிவந்த நாதரையும் திருவனந்தப் பெருமாளையும்
தஞ்சமென வேவுரைத்தாள் தாரும்திரு வேள்வியென்று
பட்டாபுரம் அகஸ்தியரும் பாரமணி சிவனிரங்கி
எட்டுமுக்கு வேள்வியது அளவிருந்த வலுப்பாறையில்
வட்டமாகக் குழித்துதல்லோ மகதேவர் திருவருளால்

வேள்வியில் நிறைந்த பொருள்கள்

153. திருவருளால் திருவேள்வி தீக்குழிவந் துதித்திடுமாம்
பருவமான திருவேள்வி பரமசிவ னார்கொடுத்தார்
கொடுத்தாரே திருவேள்வியும் கொத்தாலே மாலைகளும்
வடித்த நல்லசந்தனமும் வாடைசவ்வா துபுனுகும்
இருபத்தொரு குலைப்பூவும் மேல்குலத் திருவிறகும்
கருமத்துட னேயவட்கு கயிலாசம் தனிலிருந்து
வளர்த்தநல்ல அவள்தனக்கு மாயத்திரு வேள்வியிலே

மாயத்திரை வருவதுதான் மந்திரலோகத் துப்பட்டும்
மந்திரப்பட் டாடைவந்து மாயத்திரை யாய்வளைய
இந்திரலோ கத்திலுள்ள எண்ணைமஞ்ச ணையுடனே
பண்ணையர் குழலாட்கு பரமசிவம் தானிரங்கி
அண்ணாட்டும் எண்ணெயுடன் அரைப்புடனே மஞ்சணையும்
வளரும்திரு வேள்வியிலே வாடைப்பொடி மஞ்சளுமாய்
ஏழுஎலுமிச் சம்பழமும் ஏத்தசாம்பி ராணியுடன்
வந்து நிறைந்துதல்லோ மாயத்திரு வேள்வியிலே.

வேள்வித்தீ வேண்டுதல்

154. இந்தவகை யானதெல்லாம் யீஸ்பரனார் தான்கொடுத்தார்
சிந்துருவாய் நகையாட்குத் தீக்கொடுத்தா ரில்லையப்போ
கர்த்தனார் அவருடைய கற்பறிய வேணுமென்று
இத்தனையும் கொடுத்தசிவன் தீயதுதான் கொடுத்தாரில்லை
வருந்தினாள் தீயதுக்கு வந்துதில்லை வேள்வியிலே
திருத்தமுள்ள பங்குழலாள் தேன்மொழியாள் தோட்டுக்காரி
என்னைப் படைத்தவரே எனக்குவரம் தாருமென்றாள்.

தீயில் வீழ்தல்

155. பொன்னான ஆதீஸ்பரா பெருமாளே துணையெனவே
இப்பிறவி வேள்வியிலே இறக்குகிறேன் மகதேவா
மெய்ப்பாக மறுபிறவி விடைதாரும் சிவனேஎன்று
கற்புநெறி யுண்டாகித் தரணுமென வேகவிழ்ந்து
குப்பெனவே ஊதிடவே கொடியதீ பிடித்திடுமாம்
தீபிடித்த வேள்வியிலே திருவிறகு தனிலேபற்றி
அற்புதமாய்க் கொழுந்துவிட்டு அக்கினி பற்றிஎரிய
எரியுதடா தீநாக்கு எழும்பிக்கரும் புகையோடே
புகையோடே தீயெரிய பொற்கொடியாள் தோட்டுக்காரி
மகதேவா துணையெனவே வலமாகச் சுற்றிவந்தாள்
புகழ்தருவாய் பகவதியே என்றவளைத் தான்தொழுது
எக்கால முஞ்சிவனே எனக்குவரம் தாருமென்று
முக்காலும் சுற்றிவந்து மொலுமொலென்று குரவையிட்டு
தங்காமல் தோட்டுக்காரி சாடிவிட்டாள் தீயதிலே.

குமரப்பராசன் மண்டபத்தில் தோட்டுக்காரியைக் காணாமல் வருந்துதல்

156. பக்குவஞ்சேர் யீஸ்வரியும் பரமசிவ னும்அறிந்தார்
அறிந்துசிவ னாரறிந்து அதிகவரம் கொடுக்குமுன்னே
கணிப்பாகப் படையும்வெட்டிக் கையிலுறை வாளோடே
எதிர்ப்பார்கள் நமக்கொருவர் இனிப்பகையும் இல்லைஎன்று
வாலைக்கிளி மொழியாளை மாலையிட வேணுமென்று
பூட்டிவைத்த மண்டபத்தைப் போய்ப்பார்த்தான் சடுதியிலே
கூட்டுக்கிளி போலிருந்த கொடியிடைக் கண்டுதில்லை
கண்டுதில்லை என்சிவனே கனபாவம் ஏற்றேனே
என்றுசொல்லி ஓடிவந்து இருந்தமண்டபம் தனைப்பார்த்தார்
கதவேழும் திறந்திருக்கக் காரிகையைக் கண்டுதில்லை
விதியோ சிவனேஎன்று விழுந்தாரே தரைதனிலே
தரையில் விழுந்தெழுந்து தன்வாயி லடித்தழுது
சோலையிளங் கிளிமொழியாள் தோட்டுக்காரி அம்மனைத்தான்
மாலையிட்டுப் பார்த்தேனில்லை வாய்மொழிநான்
கேட்டேனில்லை
சேனையுடன் அவளுமிப்போ தீமுழுகப் பிறந்தாளே.

குமரப்பராசன் வேள்வித் தீயில் விழுதல்

157. சாலமுடன் நாமிருந்தால் தாரணியோர் ஏசுவாரே
ஏசுவாரே நாம்இருந்தால் இறந்தால் பலன்தான்என்று
வீசும்புகழ் மலைமார்பன் வேந்தன்கும ரப்பராசன்
வேடிக்கையாய் ஓடிவந்து வெள்ளியப் பாறைதனிலே
சாடிவிட்டார் வேள்வியிலே தாரும்வரம் நமக்கெனவே.

இருவரும் தெய்வப்பிறவி எடுத்தல்

158. உயிரதுதான் இறந்தபின்பு பின்னும்சிவன் மனதிரங்கி
பின்னும்அந்த யீஸ்வரனார் மறுபிறவி தான்கொடுத்தார்
வேள்வியிலே இருபேரும் வேறு சொரூபமாக
வாழும்வேள்வி யானதிலே மறுசொரூப மாகவேதான்
மறுசுருவம் உருவளர்ந்து மாயத்திரு வேள்வியிலே
கெருவிதமாய் இருபேரும் கெம்பீரமாய் விழிஎரிந்து
பலசொரூபக் காரனென்றும் பாவைபல சொரூபியென்றும்
சிலையுருவாய் வேள்வியிலே தெய்வஉரு வாகவேதான்
விண்ணோர்கள் தான்மகிழ வேறே சொரூபமாக

கண்முகமும் கரிப்போல காதுகளும் வடிவழகும்
வடிவெடுத்து உருமாறி வாய்த்ததிரு வேள்வியிலே
துடியுடனே இருபத்தொரு சூதான பேரும்சொல்லி
கன்னிகரு நீலியென்றும் கருங்கிடாய்க் காரனென்றும்
வலுவான வேள்வியிலே வாய்த்தமுட்டப் பதிதனிலே
பலசொரூபக் காரியம்மன் பெருமலைபோ லேபிறந்தாள்.

தெய்வப் பிறவியின் வடிவங்கள்

159. கொலுவாக உடலுடைய கூண்டகருங் கிடாக்காரன்
இருபேரும்தான் பிறந்தார் ஏற்றபெண்ணார் குரவையிட
முட்டைவெள்ளிப் பாறையிலும் மூத்தநயி னார்கோவிலிலும்
பட்டணத்தா ரோடையிலும் பலசொரூபக் காரியம்மன்
தட்டாரி ரப்பதிலும் சாத்தாவின் கோவிலிலும்
அலைவாய்க் கரைதனிலும் அளக்குடியும் பொழிமுகமும்
சிலைபோல் பலசொரூபி தீரன்கருங் கிடாய்க்காரன்
பேரும்சொல்லா மலிவர்கள் பிறந்துவிழி எரியுதடா
ஊருச்சுற்றும் வீரனடா உற்றகருங் கிடாய்க்காரன்
வீரமுத்துக் கருப்பழகன் வீரசூரப் பெருமாளும்
காரிகையாள் கருநீலிக் கரும்புருவைக் காரியம்மன்

புருவைக்காரி திரைக்காரி பூசைமாய்கை வேசக்காரி
சூலாடும் புருவையுடன் துவளும்இள மறிக்காரி
மறிக்காரி பலசொரூபி மாறாடி வந்தவள்தான்
குறிக்காரி பலசொரூபி கோலமெடுத் தாளேயம்மன்
பலசுருவம் பலவடிவ பலவேச முற்றெனவும்
நாமக்காரி கோலக்காரி நாரணத்தி காரணத்தி
சாமக்கன்னி கருநீலி தாயார்பல சொரூபக்காரி
பலபல பேரும்சொல்வார்கள் பாதாளத்துக் குள்ளிருப்பாள்.

இருவரும் சிவனையும் பார்வதியையும் காணுதல்

160. குலைவாளரக்கி என்பாள் குறிசொல்லத்துவங் காமல்நிற்பாள்
நேருக்குநே ராகநிற்பாள் நினைத்தவர்க்கு உண்மைசொல்வாள்
வெள்ளியப்பா றைதனிலே துள்ளி எழும்பிவந்து
விண்ணைத்தொடும் புகையோடே வேள்வியிலே தீயெரிய
எரியக் கொழுந்துவிட்டு இருளாய்ப் புகைஎழும்ப
இந்திரவா னங்கடந்து மந்திரலோ கத்தில்செல்ல

அரியும் சிவனுமையும் அங்கிருந்த தேவர்களும்
அண்டரும் முனிவர்களும் அதிசமாய்க் கண்டார்கள்
கண்டுபர மேஸ்வரனார் கைலாசத்தி லேயிருந்து
காணத்திரு வேள்வியினைக் கையதினால் மாற்றுவாராம்
அமர்த்தின வேள்வியிலே அக்கினியும் தான்தணிந்து
அமர்ந்தவேள்வி தன்னில்நின்று ஆதிபர னைத்தொழுதார்
தொழுது விழிஎரிந்தார் துய்யவரம் தாருமென்று
சோதிபர மேஸ்வரனார் துலங்கவே தானறிய
பழுது படாச்சிவனும் பார்வதியும் அந்நேரம்
பைங்கொடியே என்னவரம் பாக்கியங்கள் வேணுமென்றார்.

இருவரும் வரம் வேண்டுதல்

161 இருபேரும் தான்மகிழ்ந்து ஏதுவரம் கேட்கலுற்றார்
பொன்னேபர மேஸ்வரனே பூவுலகில் எங்களுக்குப்
பூசைகொள்ள எங்களுக்கு ரொம்பவரம் தாருமென்றார்
மாயவேசம் மாறிநின்று மானிடவர் தம்மிடத்தில்
வாய்த்தநல்ல ஊட்டுணவு வாங்கவேணும் எங்களுக்கு
வேசம்மாறி பேரும்சொல்லி வில்லுப்பாட்டும் ஊட்டுணவும்
ஆட்டும்பாட்டும் ஊட்டுணவும் அலங்கார மாகவேதான்
ஆடுகிடாய்க் கோழிபொங்கல் ஆவின்பாலும் சர்க்கரையும்
இஸ்டத்துடன் மானிடவர் நாட்டமுடன் தரவேணும்.

வரமளித்தல்

162. குட்டிமறி யைப்பிளந்து வாட்டித்திரைக் குள்தரவும்
தட்டுமாரிப் பேரும்சொல்லி எட்டுத்திக்கும் பூசைகொள்ள
பேரும்மாறிப் பேரும்சொல்வாள் பெரியகருங் கிடாய்க்காரன்
கொடுத்தார் கரும்புருவைக் குட்டி இளமறியும்
மஞ்சள்பானை யானதுவும் பூக்குடலைவாடை மணமதுவும்
பாவை இளங்கிளியாள் பலசுருவக்காரி யம்மனுக்கு
பட்டுப்பணி பலநிறச்சேலை மூடாங்கும் முழுபணியும்
கொடுத்தார் சுரும்புருவை குட்டி இளமறியும்
குறையொன்றும் இல்லாமலே கொடுத்தாரே வரமதுதான்
வல்லவரம் வல்லவரம் வலுபிணி தீர்க்கவரம்
நல்லதவம் செய்தவரை நாளாக வைத்துஆளவரம்
நலமுடனே ஈஸ்வரனார் நல்லவரம் தான்கொடுத்தார்
கொடுத்ததோர் வரங்களெல்லாம் கும்பிட்டு வாங்கினாரே.

இருவரும் பல வடிவங்களில் எழுந்தருளுதல்

163. கோலமுத்துக் கருப்பனும் கொடியிடை பலசொரூவக்காரியும்
எடுத்தாள் பலசொரூபம் பலசொரூவக் காரியம்மன்
இந்திர மாயமாக எங்கும்பூசை கொண்டிடுவாள்
பூசைக்காரி புருவைக்காரி பொன்னும்பல சொரூபக்காரி
பூதலத்தில் மாராடியே பேரும்சொல்லிப் பேரும்சொல்வாள்
வேசம்மாறி வேசங்கொண்டு விழிஎரிந் தாடிக்கொள்வாள்
வெளிப்படாக் கள்ளனவன் வீரன்கருங் கிடாய்க்காரன்
தண்டையும் கால்சிலம்பும் மரத்தடியும் குறடுமாக
சல்லடமும் கச்சைகெட்டி தான்விளை யாடுவானாம்
மண்டைதலை யானதிலே வாய்த்தகவண் தானெறிய
மாறியாட வல்லவன்தான் வாய்த்தகருங் கிடாய்க்காரன்
பப்புச் சடையுடனே பலநிறப் பட்டும்சூடி
பாதாளத்துக் குள்ளொளிப்பான் பலசொரூ பமெடுத்து
செப்பமாய்த் திருசடைக்குள் சிறந்த பாம்புநெழிய
தேசத்தில் பலசொரூபக்காரி தெய்வநல்ல நாயகியாள்
ஊருலாவும் பெருமாள்தான் கருங்கிடாய்க் காரனவன்
பாருலகம் சுற்றிவாறாள் பலசுருவக் காரியம்மன்
ஒருகாலி லிட்டசங்கிலி கலீகலீரென் றோசையிட
பதிஉடன் வேசம்மாறி பாரிலே வாறாரென்றார்.

எழுந்தருளிய இடங்கள்

164. வேசம் மாறிக் கருங்கிடாய்க் காரனும்
வெள்ளியப் பாறை முட்டப் பதிவிட்டு
பூசைக் காரி புருவைக் காரியும்
பிள்ளை தின்னிப் பலசுருவக் காரியும்
தோட்டுக் காரி புருவைக் காரியும்
சூடகக் கள்ளன் கருங்கிடாய்க் காரனும்
கூட வேபல சுருவக் காரியும்
அலைவாய்க் கரையும் பள்ளி வாசலும்
அய்ய னாருட கோவிலும் சாலையும்
சிலைபோ லேபல சுருவக் காரியும்
செந்தாழை நல்ல ஓடைக் கரையிலும்
பூந்தோப்பும் பொய்கைக் கரையிலும்
பெருமையான கருங்கிடாய்க் காரனும்
சுற்றியாடும் கருங்கிடாய்க் காரனும்

சுருவக்காரி பலசுருவக் காரியும்
சுற்றிசுற்றிப் பலசுருவக் காரிக்கு
இருபத் தொரு சடையு மிலங்கவே
வாயில் பிள்ளையும் கையிலே சூலமும்
மாலை யோடு சேலை யிலங்கவே
தேசம் மெய்க்கும் குமரிப் பகவதி
தீர்த்த மாடும் சுளையது தன்னிலே
சர்க்கரைத் துறையது தன்னிலும்
தாண்டுவாங் கயமதில் செல்லுவாள்
மங்கை என்னும் பலசுருவக் காரிதான்
வாச மான தவிட்டுத் துறையிலும்
அரிசித் துறையிலும் தேசக் கிணற்றிலும்.

வீதி வலம் வருதல்

165. ஆக வேஅவர் தீர்த்த மாடிக்கொண்டு
செகமதியக் கருங்கிடாய்க் காரனும்
தேவி யம்மை பலசொரூபக் காரியும்
பகவதியைத் தொழுது வரம் வாங்கிப்
பார வீரன் கருப்புச் சுவாமியும்
அடக்க மான கடற்கரை கோவிலும்
அதிக மாகக் கொடிமரம் நிற்பதும்
வடக்கு வாசல் தன்னிலே வந்துதான்
வரம்வாங்கிப் பலசுருவக் காரியும்
தேரோடும் பெரிய தெருவிலும்
தென்குமரிதன் கோவிலும் தாண்டியே
ஊருசுற்றி விழிஎரிந்து கொண்டு
சுத்த வீரன் கருங்கிடாய்க் காரனும்
போத்தி மாருட வீடு தெருவிலும்
பிள்ளை மார்கள் இருக்கும் பதியிலும்
பெரிய கன்னி அம்பலம் தன்னிலும்
கன்னி யம்பலம் மண்டப வாசலும்
கடந்து படை யோடே சடுதியில்
தட்டில் லாமலைச் சாலை வழியாக
தானவர்கள் வருகிற வேளையில்.

பிற மதத்தவரைத் துன்புறுத்தல்

166. எட்டிப் பார்க்கவே கிட்டப் பரக்குடி
இருபேரும் தெரியவேதான் கண்டார்
கண்டபோது பரக்குடி தன்னிலே
கைகலந்தான் கருங்கிடாய்க் காரனும்
சென்றுழப்பிப் பரவர் தெருவிலே
சிலுவையான குருசடி தன்னிலும்
குருசடியிலும் கோவிலு வாசலும்
கூடியேஅவர் இருக்கும் தவத்திலும்
வெள்ளைக் காரர்தன் மேடையி லேசென்று
விழிஎரிவான் கருங்கிடாய்க் காரனும்
புள்ளிச் சட்டை யிட்ட பேரையும்பேறு
காலத்துப் பிள்ளையும் கொல்லுவான்
கொல்லு வார்கள் பரக்குடிச் சனத்தையும்
கொம்பு மரத்தையும் வம்பிலே தாக்குவார்
வல்ல மான பருப்பெண்கள் பெற்றிடும்
மதலையான குழந்தையைக் கொல்லுவார்.

பிற மதத்தவர் துன்புறுத்தல்

167. பட்டம் கட்டிடும் பாதிரி யார்களும்
பாவலு ஞானப் பிரகாசம் பரச்சியும்
கட்டை யாண்டி பொன்தண்டைக் காரனும்
காணி யாளனும் சாதித் தலைவரும்
சூடா மணியும் செபமாலை தானிட்ட
கோவி லடியார்கள் தன்னை மயக்குமாம்
வேதம் ஓதியே பாதிரி மாருக்கும்
மெத்த கோட்டிப் பயித்தியம் மேவினார்
போதம் கெட்டுப் பயித்தியம் மீறியே
பொட்ட கத்தை அடித்து உடைப்பானாம்
திருத்த மாயிட்ட சட்டைக ளானதைத்
திரியைப் போலே கிழித்து எறிவானாம்
குருக்க ளென்றுதான் கும்பிட்ட பேர்களைக்
கொடுங்கை தார்த்துக் கோட்டிகள் பண்ணுவார்.

மக்கள் பூசை கொடுத்துக் குரவையாடுதல்

168. பாலர் கூடியே பணங்களை நேர்ந்து வைக்கப்
பயித்தியமும் விலகியே போகுமாம்
வானாள் வம்பி லழியவொண் ணாதென்று
வலங்கைத் தலைவ ரவர்வச மாகவே
நாடார் கையில் பணங்களைக் கொடுத்தவர்
நல்ல ஊட்டு உணவு கொடுத்தாரே
ஊட்டு உணவுடன் பூசை மிகக்கொண்டு
உற்ற நல்ல பலசொரூபக் காரியும்
நகிலன் பொன்னுங் கருங்கிடாய்க் காரனும்
அதிய வீரன் கருப்புச் சுவாமியும்
அம்மன் பொன்னும் பலசொரூபக் காரியும்
உண்மை யான பலவேச முற்றவன்
உருவறி யாத கருங்கிடாய்க் காரனும்
சோலை யாகிய சாலையும் தான்விட்டு
தோட்டுக் காரி மணிபுருவக் காரி
மாயக் காரி பலசொரூபக் காரி
வாயில் பிள்ளை கடித்து நெழியவே
தூக்கிப் பிள்ளைக் கருவு மெடுத்தவள்
பாச மாகப் பலசொரூ பக்காரி
பச்சைப் பிள்ளை தன்னையும் கொண்டுதான்
காது தோடும் பணியும்மூக் குத்தியும்
கையில் பச்சை வளையல் கடையமும்
உற்ற நல்ல நிலைக்கண்ணாடி களும்
உருவ மான பலசொரூபக் காரிக்கு
பட்டு முட்டாங்கு சேலையும் மாலையும்
கையி லேந்திடும் அம்மானைப் பந்துடன்
காப்பு உடையாள் கையில் கிலுக்குடன்
வர்ண மான பலசொரூபக் காரியும்
மையிட்ட கண்ணும் மஞ்சணைப் பூச்சுடன்
பின்னும் நல்ல வெளிப்படா வீரனும்
சுருவக் காரன் கருங்கிடாய்க் காரனும்
மங்கை யர்கள் குரவைகள் பாடவே.

பிற இடங்களில் பூசை விரும்புதல்

169. மாய வேசப் பலசொரூபக் காரியும்
எங்கே சென்றினி பூசைகள் கொள்ளலாம்
என்று எண்ணிப் பலசொரூபக் காரியும்
ஏற்ற நல்ல கருங்கிடாய்க் காரனும்
கூடத் தோட்டுக் காரியும் நீலியும்
கருநீலி கரும்புரு வைக்காரி
காயக் காரி குலைவா ளரக்கியும்
வருவாள் திரைக்காரி பூசைக் காரியும்
வடுவச்சியும் பிராமணக் கன்னியும்
மங்கை ஏழு பெண்களும் தான்வர
ஏந்திழை யாள்பல சொரூப மெடுத்து
வேள்விக் காரி வெளிப்படாத் தாயாரும்
வீர சூரன் கருங்கிடாய்க் காரனும்
ஒன்று போலவே நாமளிப் போதுதான்
உலகத்தி லேபூசை கொள்ள வென்று
உற்ற நல்ல பலசொரூபக் காரியம்மன்.

தொல் வினை நீங்குதல்

170. படியாள வந்துதித்த பலசொரூபக் காரியம்மன்
வண்டாடும் பலசொரூபக் காரியம்மன் மனமகிழ்ந்து
மங்கையர்கள் தன்னுடனே பலசொரூபக் காரியம்மன்
ஊரான ஊருக்குள்ளே ஊட்டுணவு வாங்குதற்கு
பெருமாள் தனைத்தொழுது பூசைதர வேணுமென்று
அருமை யுடனவர்கள் அம்மனையும் அடிதொழுது
நல்லவண்ணங் குடிவளர்த்து நாயகியாள் பலசொரூபி
தொல்லை வினையில்லாமல் துயரம் நீக்கியே.

பூசையிட்டோர்க்கு நன்மைசெய்தல்

171. பலசொரூப மாடிவாறாள்-என்நாயகியாள்-பலசொரூப
மாடிவாறாள்
பட்டெடுத்துச் சூடிக்கொண்டு பஞ்சமியா ளஞ்சிமுகம்
இருபேரும் யுருப்போலே விழிளரிந் தாடுவார்
கன்னியம்பலம் தன்னிலே கட்டழகி பலசொரூபி
(பல-சொரூபம்)
வேசம்மாறிப் பேரும்சொல்லி மெல்லிநல்லாள் பலசொரூபி

கருங்கிடாய்க் காரன்வந்து அவர்கையால் தானடிப்பார்
(பலசொ)
உலகமதில் பூசைகொள்ள வேணுமென்று சொல்லி
ஆதிபரா எங்களுக்கு அதியவரம் வேணுமென்றார் (பலசொரூ)
உன்னை நினைத்தபேரை நீயும்உண்மையுடன் காத்து
அப்படியே எங்கும்பூசை அவர்வாங்கித் தானிருந்தார் (பலசொ)
ஒத்தையால் தனிலேவந்து உத்தரவு வாங்கிக்கொண்டு
வாச்சான் குளமதிலும் வன்னிமுத்து இளமரமும் (பலசொரூ)
வந்து நல்லாள் தீர்த்தமாடி அம்மைதாசி பலசொரூபி
சுத்தப்பூசைக் காரியம்மன் பலசொரூபம் எடுத்துக் கொண்டு
(பலசொ)
பரவருட வீடுயெல்லாம் விழியெரிந் தாடிக்கொண்டு
கும்பிட்டு விழுவாரும் குழல்விளக்குப் பிடிப்பாரும் (பலசொரூ)
உத்தனுட தஞ்சமென்று அறிந்தஊரி லுள்ளோர்
தஞ்சமென்று சொன்னபேரை அறையில்வைத்துக் காத்திடுவார்
(பலசொ)
பொல்லாப்புச் செய்தபேரைப் பொல்லாப்புச் செய்திடுவார்
இப்படியே இருபேரும் எங்கும்பூசை வாங்கிக்கொண்டு
(பலசொரூப)
அம்மைபல சொரூபியும் கருங்கிடாய்க் காரனும்
அன்பாக வேஇருந்து பூசையது கொள்வார்
சொரூபிமந் திரரூபி சூலி கபாலிக் கங்காளி

சூதாடி மாறாடிநின்று (பலசொரூ)
சுத்தப்பூசைக் காரியம்மன் அதிக வரங்கள்பெற்று
மாறாடிப் பூசைகொண்ட மங்கைபல சொரூவக்காரி
(பலசொரூபம்)
குறியால் வெளிப்படாமல் மறைய ஒளித்துநின்று
கோலம்எறிக் கோலம்கொண்டு கோரணிகள் கொண்டிடுவாள்
(பலசொரூப)

மறைய ஒளித்துநின்று பல்லிபோல் கெவுளிசொல்வாள்
பத்திமுத்தி பெற்றவள்தான் பலசொரூபக் காரியம்மன்
(பலசொரூ)
எட்டுத்திக்கும் வட்டமிட்டு இருப்பாள்முக் கோணத்தில்
இந்திரரூபி மந்திரவல்லி ஏகசுத்தப் பூசைக்காரி (பலசொரூ)
கட்டுப்பட்டா வீரசூரன் கருங்கிடாய்க் காரனோடே
மாறியாடி கூடபூசை வலுவாகக் கொண்டவள்தான் (பலசொரூ)

பச்சைவளைய லுச்சிப்பிறை பாடகம் சிலம்புதண்டை
பகளம் வெள்ளிக்கடையம் பட்டுக்கொங்கை கச்சையுடன்
உச்சித் திருப்பிறையும் ஓங்கியசூ லாயுதமும் (பலசொரூ)
பூசைபூசை மணியுடன் நாச்சியைப்போல் வேசங்கொண்டு
பலசொரூபக் காரியம்மன் அஞ்செழுத்தும் எட்டெழுத்தும்
(பலசொரூ)
அச்சரத்துப் பூசையிலும் அல்லா இறைகுலத்தாள் நாலாமத
வேதத்திலும்
வல்லபள்ளி வாசலிலே வந்திருந்து சொரூபமாறி
அப்படியே பூசைகொண்ட மங்கைபல சொரூபக்காரி
பலசொரூப மாடிவாறாள் என்னாச்சியார் பலசொரூப
மாடிவாறாள்
பலசொரூப மாடிவாறாள் பலசொரூபக் காரியம்மன்
(பலசொரூப மாடிவறாள்)

வாழ்த்துரை

172. கருங்கிடாய்க் காரனையும் பலசொரூபக் காரியையும்
காசினியி லுள்ள மனுவோர்கள் தொழவும்
தோட்டுக் காரியம்மைக் கதையைப் படிப்போரும்
வலங்கைக் குலத்திலுதித்த மாகாளி புத்திரரும்
மறைவாழி தமிழ்வாழி மானிடவர் வாழி
மங்கையுமை பங்கிலுறை சங்கரரும் வாழ்க
நித்திய கலியாணமாய் நீடூழி காலம்வாழ்க
நிறைவுடனே கன்னங்குளம் ஊர்துவும் வாழ்க.

தோட்டுக்காரிக் கதை முற்றிற்று

ஏட்டின் முடிவு

அரி ஓம் நன்றாகக் குருவே துணை
இந்த ஏடு எழுதி முடித்தது — ககூளயஎ (1917-ஆம்)
மாண்டு, ஆடிமாதம் — செவ்வாய்க் கிழமை — மாலை
மணி (4)க்கு

இந்த ஏடு எழுதினவர் மாடநாடார் குடியிருப்பிலிருக்கும் ராம சுவாமி நாடார் குமாரர் பால் நாடார் என்ற சுப்பிரமணிய நாடார். இந்த ஏடு கன்னங்குளம் பொன்னையா நாட்ார் குமாரர் ராம நாடாருக்கு. யாரும் எடுத்துப் படிக்கலாம். திருடக்கூடாது.

துணைநூற் பட்டியல்

1. அகநானூறு, பதிப்பாசிரியர் குழு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை-98, 1957.

2. அண்ணன்மார் சுவாமி கதை, சக்திக்கனல்; க. பெ. பழநிசாமி (பதி.), மெர்க்குரி புக் கம்பெனி, புத்தக விற்பனையாளர், கோயம்புத்தூர், 1971.

3. அபிதான சிந்தாமணி, ஆ. சிங்காரவேலு முதலியார், ஏசியன் எடுகேஷனல் சர்வீஸஸ், புதுதில்லி-110 016, 1981.

4. இந்துமத இணைப்பு விளக்கம், கே. ஆறுமுக நாவலர், தொண்டன் காரியாலய வெளியீடு, நாகர்கோவில், 1963.

5. இலக்கணத்தொகை-யாப்பு-பாட்டியல், ச. வே. சுப்பிரமணியன், தமிழ்ப் பதிப்பகம், சென்னை-20.

6. ஈனமுத்துப் பாண்டியன் கதை, தமிழாய்வு, தொகுதி - 3, சென்னைப் பல்கலைக் கழக வெளியீடு, சென்னை-5, 1974.

7. ஏட்டில் எழுதாக் கவிதைகள், அன்னகாமு, சர்வோதயப் பிரசுராலயம், தஞ்சாவூர், 1959.

8. கட்டபொம்மன் வரலாறு, தி. சந்திரசேகரன் (பதி.), அரசினர் சுவடி நூலகம், சென்னை-5, 1960.

9. கம்பராமாயணம், பதிப்பாசிரியர் குழு, கம்பன் கழகம், சென்னை-1, 1976.

10. கலித்தொகை, புலியூர்கேசிகன் உரை, பாரி நிலையம், சென்னை-1, 1978.

11. கலைக்களஞ்சியம், தொகுதி-1, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை-5.

12. கலைக்களஞ்சியம், தொகுதி-5, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை-5, 1958.

13. சங்க இலக்கியத்தில் உவமைகள், ரா. சீனிவாசன், அணியகம், சென்னை, 1973.

14. சிலப்பதிகாரம், திரு. பொ. வே. சோமசுந்தரனார் விளக்க உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1969.

15. சீவகசிந்தாமணி மூலமும் நச்சர் உரையும், உ. வே. சாமிநாத அய்யர் (பதி.), கபீர் அச்சுக்கூடம், சென்னை, 1969.

16. தண்டியலங்காரம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1978.

17. தமிழ் நாட்டுப்புற இயல் ஆய்வு, ச. வே. சுப்பிரமணியன் (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை-113, 1979.

18. தமிழ் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும், ஏ. என். பெருமாள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை-113, 1977.

19. தமிழ் வில்லுப்பாட்டு, கோமதி நாயகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை-113, 1979.

20. தமிழக நாட்டுப்புறப் பாடல்கள், சு. சண்முகசுந்தரம், பூம்புகார் பிரசுரம், சென்னை-13, 1978.

21. தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், க. காந்தி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவன வெளியீடு, சென்னை-113, 1980.

22. திருக்குறள், மு. வரதராசனார் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1949.

23. திருக்குறள் நடையியல், இ. சுந்தரமூர்த்தி, ஐந்திணைப் பதிப்பகம், சென்னை-5, 29.12.1987.

24. தொல்காப்பியம் — பொருள் — நச்சர் உரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1973.

25. நடராசப்பத்து, ஜி. ஆர். பதி அன் கோ., சென்னை, 1969.

26. நன்னூல், பவணந்தியார், சிவஞான முனிவர் விருத்தியுரை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1, 1958.

27. நாட்டுப்புற இயல் ஆய்வு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், 1983.

28. நாட்டுப்புற இயல் — ஓர் அறிமுகம, சு. சண்முகசுந்தரம், இலக்கிய மாணவர் வெளியீடு, சென்னை, 1975.

29. நாட்டுப்புற இலக்கியம் நலந்தரு விளக்கம், இரா. சுரேந்திரன், தேன்தமிழ்ப் பதிப்பகம், சேலம்-636 001, 1981.

30. நாட்டுப்புற இலக்கிய வரலாறு, சு. சண்முகசுந்தரம், மணிவாசகர் நூல் நிலையம், சிதம்பரம், 1980.

31. நாட்டுப்புறக் கலைகள், ஏ. என். பெருமாள், உலகத் தமிழாராயச்சி நிறுவனம், சென்னை-20, 1980.

32. நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு, ஆறு. அழகப்பன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,

33. நாநார்த்த தீபிகை, முத்துசாமிப் பிள்ளைக் கவிராயர், சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை-5, 1936.

34. நாலடியார் உரைவளம் (இரண்டாம் பாகம்), எஸ். முத்துரத்ன முதலியார் (பதி.), எம். ஆர். கந்தசாமிப்பிள்ளை (பதி.), தஞ்சை சரஸ்வதி மஹால் வெளியீடு, 1953.

35. மனை நூல், பூ. சுப்பிரமணியம் (பதி.), உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை-113, 1981.

36. யாப்பருங்கலக் காரிகை, மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை (பதி.), பாரி நிலையம், சென்னை-1, 1968.

பெயர்ச் சொல்லகராதி

பேச்சுமொழிச் சொற்கள்

அய்யா-8
கச்சிதமாய்-125
கலியாணம்-22
கும்பிட்டு-162
சமர்த்தனார்-18
சலிப்பு-124
தயிரியமாய்-140
திண்ணை-22
பத்திரமாய்-5
பாவதோசம்-19
பொருப்பது-8
ரொம்பவரம்-161

வடமொழிச்சொற்கள்

அபகீர்த்தி-103
அபயம்-64
இஸ்டம்-53, 105, 161
சாஸ்திரங்கள்-18
செகமதில்-98
தூசனம்-125
தோஷம்-23
பரமேஸ்வரன்-23
பாவனை-19
பாஷை-137, 139
மாயவேசம்-161
மோட்சம்-19
வருசம்-18
விஸ்தாரம்-6, 33, 59, 90.

வட்டார வழக்குச் சொற்கள்

அடப்பம்-104
அடைக்காய்-38
அன்னசொர்ணம்-45
அனத்தம்-132
ஆத்துமம்-64
ஈத்துப்புரை-53
ஊட்டுணவு-161
ஏசுவார்-157
கட்டிகருவலப்பெட்டகம்-29
கருமவிதி-28
கல்மடங்கள்-29
காதத்துக்குக் காதவழி-29
குறி துலக்குதல்-44
கொட்டாம்பெட்டி-60
கொடுபோகையில்-125
கொப்பாடை-69
கோரிவைக்கும்-22
சடவு-91
சடுதி-90
சடைக்க-145
சல்லடம்-163
சாம்பி-19
சாயப்பனைபூடு-57
சித்திரகுத்தி-67
சுமைதாங்கி-29
சொர்ணக்கொடைகள்-29
டம்மானம்-143
தயிலகுத்திஎண்ணெய்-60
தவனக்கஞ்சி-29
திசக்குதல்-40
தின்பொசிப்பம்-32
துலங்குதல்-40
தூத்துப்போடுதல்-22
நாடோலம்-66
நினந்தகல்-29
நெஞ்சித்திடம்-60
பதனமாய்-97
பப்புச்சடை-163
பயல்-97
புலநீர்-22
பொசியாமல்-46
பொல்லாப்பு-171

பொன்றுமுடி-30
மத்தகத்தி-137
மாடப்புரை-138
முகனை-43
மொந்தை-125
வண்டத்தனம்-98
வயனமிருத்தல்-45
வெங்கலத்தம்பட்டம்-143

பட்டின் பெயர்கள்

அஞ்சுநிறப் பஞ்சவர்ணம் கஸ்தூரிப்பட்டு-117
அறுவங்கோட்டுப்பட்டு-118
ஆனைக்கண்பட்டு-118
உள்ளிச்சருகுபோல ஒரு பட்டு-117
கடுவாவரியான பட்டு-117
காங்குகருப்புச்சி பட்டு-117
காடல் நிறமான பட்டு-117
குருணி பட்டு-117
குழலிலடைத்த பட்டு-118
குளவிஞ்ச பட்டு-118
கொங்கு பட்டு-117
கோலியான்-118
சாலியன்-117
சீத்தை வரி பட்டு-117
செம்புசருகை பட்டு-117
புள்ளிபோட்ட பட்டு-118.
பெரியபட்டு-118
மரகதப்பட்டு-117
மாணிக்கப்பட்டு-117
முட்டைநிற நூல் நூத்து மூணு முழம் நெய்த பட்டு-118
மேற்றன்-117
வங்காளப்பட்டு-117
வாளிப்பட்டு-118
வெள்ளைப் புள்ளி பட்டு-117.

பந்தின் வகைகள்

சகலாத்துப்பந்து-86
சிறுபந்து-86
சின்னபந்து-86
தங்கத்தால் சமைத்த பந்து-86
தங்கமரகதப்பந்து-86
தரியிட்ட வரிப்பந்து-86
நீலப்பந்து-86
பகளமூத்துவாளிப்பந்து-86
பட்டுநூல் பந்து-86
பூணிநிற முட்டப்பந்து-86
பூவாளிப்பந்து-86
பொங்காரச் சிங்காரப்பந்து-86
பொன்னால் முடித்தப் பந்து-86
மாணிக்கத்தால் வர்ணமிட்ட சின்னப்பந்து-86
மாதளம்பூ வாளிப்பந்து-86
முத்துப்பந்து-86
முன்னடம் சிறந்த பந்து-86
வர்ணபந்து-86.

அணிகள்

ஆடுகொப்பு-75, 89
ஆணிப்பொன்மாலை-75
இரத்தினத்தோடு-73, 75
உச்சித்திரு-89
உச்சித்திருப்பிறை-75
உடைவாள்-78
கடையம்-78, 89
கனகமணி-10
காப்பு-89
கிங்கிணி-19, 75
குடமாலை-162
குடைமாலை-89
சதங்கை-19
சதங்கைதண்டை-75
சிலம்பு-75
சிலம்புதண்டை-115
சூடாமணி-167
செபமாலை-167
தண்டை-19, 75
தெய்வச்சூடாமணி-73
தோடு-75

நாகமணித்தொட்டில்-72
நூபுரம்-75
பச்சைவளை-89
பதக்கங்கள்-75
பவளக்கால்-29
பாடகம்-75, 115
மணிமுத்துமாலை-110
மரகத மாணிக்கத்தோடு-89
மரகத முத்து-71
மல்லிகை மாலை-89
மாணிக்கப்பென்-29
மாணிக்கமாலை-89
முத்துமாலை-75
முத்துவடம்-75
மூக்குத்தி-89
வங்காளம் பச்சை வளையல்-75
வடமாலை-75
வளையல்-75
வெள்ளிக்கடையம்-171
வெள்ளிக்காப்புக் கடயம்-75
வெள்ளித் தாயத்து-78

மரம், செடிகளின் பெயர்கள்

அரிசிநெல்-50
ஆலம்பழம்-51
கொடிமரம்-10, 14, 165
கொப்பு-8
தென்னமரம்-73
தேங்காய்-50, 51
புல்லுக்கோரை-8
பூமரம்-8
மாங்காய்-50, 51
வருக்கைப்பலா-73
வன்னிமரம்-106
வன்னிமுத்த இளமரம்-171
வாழை-73
விளங்காய்-50, 51

விலங்கினம்

ஆட்டுக்குட்டி-8
ஆடுகள்-107
ஆடுகிடாய்-161
இளமறி-162
ஈத்துப்புலி-8
கடுவாய்கள்-107
காண்டாமிருகம்-107
கீரிப்பிள்ளை-107
குதிரை-107
கெவுளி-171
சித்தெரும்பு-8
செத்தக்கரைபல்லி-26
துங்கமத யானை-128
நரி-107
பரி-8
புலி-107
புள்-107
மான்குட்டி-107
மிளா-107
முயல்-107
யானை-8
வளையான்-107
பெருகு-134

சாதி

கம்பளத்தொட்டியர்-15
கம்மாளர்-53
குறவர்-145
சலுப்பத்துலுக்கர்-15
சிங்களர்-143
சென்னியர்-81
தொட்டியர்-15
பட்டாணியர்-15
மராட்டியர்-143
மலைநாட்டு வன்னியர்-145
மறவர்-145
மாடநாடார்-7
ராவுத்தன்மார்-143
ரெட்டியார்-15
வங்காளர்-143
வலங்கைக்குலம்-7

வன்னியர்-15, 81, 143
வெள்ளியர்-9
வெள்ளைக்காரர்-15.

அளவை

களஞ்சியம்-27
குறுமரக்கால்-23
நாழி-38

பெயர்கள்

அடப்பக்காரி-110
ஆவுடநாச்சி-29
இந்திரரூபி-171
இராமசுவாமி நாடார்-7
இராவணன்-119
இருளன்-119
இருளி-19
இளமறிக்காரி-159
ஒட்டன்-55
கங்காளி-171
கபாலி-171
கருங்கிடாய்க்காரன்-158, 169
கருநீலி-159, 168
கருப்புச்சுவாமி-165, 168
கன்னி கருநீலி-158
காயக்காரி-168
காரணத்தி-159
காளாஞ்சிக்காரி-110
குடைக்காரி-110
குண்டுக்கண்ணுப்பிராசன்-13, 44
குமரப்புராசன்
குமரி புகழி-164
குலைவாளர்க்கி-160, 164, 169
குறிக்காரி-159
கொந்தளப்பூ ராசா-77
கோலக்காரி-159
கோல்முத்துக் கருப்பன்-163
கோனாண்டிராசன்-13
சாமுக்கன்னி-159
சுந்தரக்கன்னி-29
சுந்தரநாச்சி-29, 110
சூடகக்காரி-164
சூலி-171
செம்பட்டுக்காரி-110
திரைக்காரி-159, 169
துங்கபரிவீரன்-119
தோட்டுக்காரி-2
நகிலன்-168
நாமக்காரி-159
நாரணத்தி-159
நித்தியகலியாணி-9
பஞ்சமியாள்-171
பலசொருபக்காரன்
பலசொருபக்காரி
பாரவீரன்-165
பாரவீரன்-165
பால்நாடார்-7
பிடிமொந்தைக்காரி-110
பிராமணக்கன்னி-29, 110
பூசைக்காரி-163, 169
பொன்னையா நாடார்-8
மந்திரகன்னி-29
மந்திரப்பூமாலை-19
மந்திரரூபி-171
மந்திரவல்லி-171
மரகதவல்லி-110
மலைக்கன்னிகள்-39
மாயக்காரி-168
மாரியாடி-171
வடுவச்சி-169
வீசறிக்காரி-110
வீரசூரப்பெருமாள்-159
வீரசூரன்-171
வீரமுத்துக்கருப்பழகன்-159
வேசக்காரி-159
வேள்விக்காரி-169

பொதுப்பெயர்

அண்டர்-160

அந்தணர்-29
ஆண்டி-29
ஊத்துமலை வன்னியன் காவலர்-27
ஊத்துமலை வன்னியன்-காவலர்-27
கும்பினிகள்-15
கொண்டயங்காட்டார்-145
கோனார்-134
சேவுகர்-15
தண்டியல்காரர்-17
தேவர்-12
தேவியர்-14
நாதன்-28
நாவலர்-29
நேரியக்காரர்-17
பட்டணத்துராசன்-145
பட்டாணிமார்-79, 104
பரசேதி-29
பரிசைக்காரர்-15
பாதிரியார்-167
பாலகன்-22
பாலன்-21
பாளையக்காரர்-79
புலவர்-8
பூவண்டன்மார்-81
மகதேவர்-10
மங்கை-9
மதலை-16, 25
மந்திரி-15
மாவண்டரை-81
மானிடவர்-8
முச்சைமுத்து ராசன்-145
முனிவர்-160
ராசாக்கள்-75
ராவுத்தன்மார்-79, 104
வங்காளத்தொட்டியக்காரர்-79
வட்டப்பரிசைக்காரர்-79
வல்லயக்காரர்-79, 104
வெடிக்காரர்-17, 79
வேதியர்-29.

இறைபெயர்

அத்திமுக நயினார்-38
அயன்-113
அல்லா-171
ஆழிவண்ணன்-113
இந்திரன்-39
ஈஸ்வரன்-131
உமையாள்-2
கணபதி-2
காளி-119
சங்கரர்-8
சரசுவதி-4
சிவன்-19, 116, 131
திருவனந்தபெருமாள்-30
நாராயணன்-7
பகவதி-10
பத்திரகாளி-4
பார்வதி-19
பிரமன்-19
மால்-5
மாலும் லட்சுமியும்-5
மீனாட்சி-110
முக்கண்ணன்-38
வள்ளிமணவாளன்-4
வேலவன்-39

ஊர், இடப்பெயர்கள்

அங்கங்கடல்-22
அய்யனார் கோவில்-164
அனலவாய்க்கரை-159, 164
உக்கிறாணிப்பாறை-33
ஏறுவாடிமலை-32
கண்ணாளர் ஓடை-12
கருங்குளம்-33
கருவல்ப்பாளை-12
கன்னங்குளம்-9, 172
கன்னிமார்குளம்-121
கனகமணி மண்டபம்-139
கனகநாடு-119

காசி-3, 12
குத்துச்செடிவட்டக்காடு-106
கூட்டப்புளி-101, 108
தட்டாரிரப்பு-57
தும்பைகுளத்தூர்-108
கொல்லம்-11
சங்கனெறி வட்டக்காடு-107
சதிரமணிமேடை-76
சுக்காம்பாறை-12, 106
செந்தாழைஓடை-121
செந்தூர்-39
தங்கப்பொன்சாவடி-76
திரவியப்பாறை-121
தீப்பாஞ்சிசாலை-12
தீப்பாஞ்சி வடிவச்சிகோவில்-106
தெட்சணாப்பூமி-2, 9
தென்கன்னிக்குமரிநாடு-9
தென்குமரி-33
தென்குமரிநாடு-10, 11
நந்தாவனத்தோப்பு-
நாச்சியார்தோட்டம்-57
நின்னிலம்-10
பட்டணத்தார் குடியிருப்பு-12
பளகைநெல்லூர்-33
பாம்பன்குளம்-107
பால்குளம்-33
பாலாறு ஓடை-12
பாளையம்-15
மாடத்தெரு வீதி-14
முட்டப்பதி-2
மூத்த நயினார் கோயில்-17
வாக்குராணி பாறை-12, 106
வாகையடி கோயில்-12, 57, 106
வாச்சான்குளம்-12, 57, 106
வள்ளிப்பாறை-160

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சுவடி நூல்கள் வெளியீடு

1.	பணவிடு தூது, (பதி.) இரா. நிர்மலாதேவி	6	00
2.	கூவநூல், (பதி.) ச.வே. சுப்பிரமணியன்	7	50
3.	பிரபந்த தீபம், (பதி.) ச.வே. சுப்பிரமணியன்	5	00
4.	பிரபந்தத் திரட்டு (பதி,) அன்னிதாமசு	16	00
5.	மனைநூல், (பதி.) பூ. சுப்பிரமணியம்	15	00
6.	கருவூரார் பலதிரட்டு, (பதி.) இரா. நிர்மலாதேவி	12	00
7.	சுவடியியல் பயிற்சி கையேடு, மு.கோ. ராமன்	6	00
8.	கும்மிப் பாடல்கள், (பதி.) ஏ.என். பெருமாள்	16	00
9.	பிரபந்த தீபிகை, (பதி.) ச.வே. சுப்பிரமணியன் அன்னிதாமசு	12	00
10.	கண்மருத்துவம், (பதி.) வே.இரா. மாதவன்	50	00
11.	திருமயிலை உலா (பதி.) மு.கோ. ராமன்	7	00
12.	திருக்குருகூர் திருவேங்கடநாதன் பிள்ளைத் தமிழ், (பதி.) ச. சிவகாமி	10	00
13.	ஊஞ்சல் இலக்கியம் (பதி.) த. அழகப்பராசு	10	00
14.	மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ், (பதி.) வே. இரா. மாதவன்	7	00
15.	தமிழ்ச் சுவடிகள் அட்டவணை, இரா. நிர்மலாதேவி	6	00
16.	Siddha Medical Manuscripts in Tamil, V.R. Madhavan	8	00
17.	தன்வந்திரி குழந்தை வாகடம், (பதி.) க. லலிதாம்பிகை	14	00
18.	வர்ம சூத்திரம், (பதி.) செ. ஜான் செல்வராஜ்	10	00
19.	மருந்து செய்முறைகள், (பதி.) தி. லலிதா	45	00
20.	வாத்தியமரபு (பதி.) அ.நா. பெருமாள்	20	00
21.	சுவடியியல், பூ. சுப்பிரமணியம்	48	00
22.	குசலவர் சுவாமி கதை, (பதி.) இரா. வசுமதி		
23.	புதுவூர்ச் சக்கரவர்த்தி அம்மானை, (பதி.) மொ. மருதமுத்து		
24.	சிவகிரி குமர சதகம், (பதி.) மெய். சந்திரசேகரன்		
25.	தேரையர் அந்தாதி, (பதி.) டாக்டர் மா. புனிதா		
26.	குணவாகடம் (பதி.) வே. நெடுஞ்செழியன்		